


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2048*

*மலர் - 9 இதழ் - 4 - ஜூலை - 2017*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
**இணைய தள முகவரி: www.keetru.com**

**தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 300.00**
**அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00**

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


நா.வா.வும் நவீன இலக்கியமும்
இரா.காமராசு – 4

சித்த மருத்துவம் தழைக்காத காரணம் என்ன?
டாக்டர் சு.நரேந்திரன் – 9

தமிழ்ஒளி நினைவில் சோவியத் அன்னை
செ.து.சஞ்சீவி – 15

போர்க்களத்தில் தோன்றுவன்
ஆ.கார்த்திகேயன் – 19

கூட்டாட்சித் தத்துவத்தின் மதிப்பறியாத மோடி அரசாங்கம்
மலையாள மூலம் : பிணராய் விஜயன்
தமிழில் : பா.ஆனந்தகுமார் – 21

மறைந்த கவிஞர் சுகந்தி சுப்ரமணியன் படைப்புலகம்
கோவை இளஞ்சேரல் – 25

தமிழின் முதல் தருக்கவாதி ‘அறவண அடிகள்’
முனைவர் சு.மாதவன் – 31

ஈழத்துச் சிறுகதைகள்
அழ.பகீரதன் – 35

தந்தை பெரியாரின் பணி
தென்னை - பனையைப் போன்றது
ச.சுபாஷ் சந்திரபோஸ் – 47

நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?
ஆ.வந்தியத்தேவன் – 59

நவீன தமிழிலக்கியத்தின் முன்னோடி
தொ.மு.சி.ரகுநாதன்
பி.தயாளன் – 62

மிரட்டும் பாடத் திட்டம்
ச.வின்சென்ட் – 67

சதிகற்களும் நம்பிக்கைகளும்
முனைவர் கோ.ஜெயக்குமார் – 70



# நா.வா.வும் நவீன இலக்கியமும்

இரா.காமராசு

பொதுவுடைமை இயக்கம், முற்போக்கு இலக்கியம் என்பதான எனது பயணத்தில் இடையீடு செய்து அறிவாராய்ச்சித் தளத்துக்கு அழைத்துச் சென்றவர். பேராசிரியர் நா.வானமாமலை. பேராசிரியரை நான் பார்த்தது கிடையாது; பழகியது கிடையாது. ஆனால் அவரின் ஆளுமை கல்விப்புல வட்டாரத்தில், இயக்கச் செயல்பாட்டரங்குகளில் எங்கும் பரவிக் கிடப்பதைக் கண்டுணர்ந்தேன். அவரைப் பற்றியும் அவருடைய எழுத்துக்கள் பற்றியும் முழுமையானத் தரவுகள் எதுவும் தொகுக்கப்படா நிலையில் எனது ஆய்வு தொடங்கியது. சில ஆண்டுகள் அவர் எழுதிய நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் அவர் குறித்த அனுபவப் பகிர்வுகள் பலவற்றையும் தேடி அலைந்தேன். சென்ற இடமெல்லாம் வரவேற்பு; ஏதாவது தகவலோ, எழுத்துரையோ தந்தபடி இருந்தனர். ஒருபுறம் பேராசிரியரின் கடும் அர்ப்பணிப்புமிக்க உழைப்புப் பிரமிப்பைத் தந்தது; மறுபுறம் அவர் உருவாக்கிய ஆய்வுச் சூழல் - ஆய்வுத் தடம் - ஆய்வாளர்கள், படைப்பாளிகள் எனத் தேடி வைத்த தோழமைச் சுற்றம் மனிதத்தின் உச்சமாய் மெய்ச் சிலிர்க்க வைத்தது.

இன்று பேராசிரியரின் படைப்புகள் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. நாட்டார் வழக்காற்றியலோடு மட்டுமே அவரைச் சுருக்கிப் பார்க்கும் நிலைமை மாறி உள்ளது. புதிய அறிவுத்துறைகள் பலவற்றின் முன்னோடி அவர் என்பது ஏற்கப்பட்டுள்ளது. அவர் உருவாக்கிய நெல்லை ஆய்வுக்குழுவும், அவர் நடத்திய ஆராய்ச்சி இதழும் தமிழாய்வு வரலாற்றில் தவிர்க்க முடியாத முன்மாதிரிகளாகி உள்ளன.

• • •

பேராசிரியர் நா.வானமாமலை தமிழில் பன்முக ஆய்வின் முன்னோடி. தமது ஆய்வுக்கு அறிவுத்துறைகள் பலவற்றையும் அணுகுமுறைகளாகப் பயன்படுத்தித் தமிழ் ஆய்வினை வளர்த்தெடுத்தவர் அவர். இலக்கிய ஆய்வோடு நின்றுவிடாமல் வரலாறு, பண்பாடு, தத்துவம், மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல் எனப் பலவற்றிலும் ஆய்வுகளைத் தமிழுலகிற்கு வழங்கியவர். அறிவியல் வழி நின்ற சமூகவியல் பார்வையுடன் கூடிய மார்க்சிய நெறியை அடிப்படையாகக் கொண்டு இவர்தம் ஆய்வுகள் அமைந்தன.

சமூக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அமைந்த இவரின் பிற ஆய்வுப் புலங்கள் போலவே இவர்தம் புத்திலக்கிய ஆய்வுகளும் அமைந்துள்ளன. கவிதை, சிறுகதை, நாவல், உரைநடை ஆகியவற்றைப் பற்றி இவர் எழுதியுள்ள கட்டுரைகள், நூல் திறனாய்வுகள், முன்னுரைகள், அணிந்துரைகள் ஆகியவற்றின் வாயிலாகவும் இலக்கியம் குறித்து இவர் எழுதியுள்ள பிற எழுத்துக்கள் வாயிலாகவும் இவர்தம் புத்திலக்கிய ஆய்வுக் கண்ணோட்டத்தையும், இலக்கியக் கொள்கை களையும் அறியலாம்.

**புத்திலக்கிய வடிவங்களை ஏற்றல்**

பண்டைய இலக்கிய ஆய்விலும், சமூகப் பின் புலத்திலான வாய்மொழி இலக்கிய ஆய்விலும் தீவிர கவனம் செலுத்திய நா.வா. 1950களுக்குப் பின் (நாட்டின் விடுதலைக்குச் சற்றுமுன் தொடங்கி) பேரலையாக உருவெடுத்த தமிழ் உரைநடை இலக்கியத்தின் (புதுக் கவிதை, சிறுகதை, நாவல்) மீது கவனத்தைச் செலுத்தினார்.

புதுக் கவிதையைப் படைப்பிலக்கியத்திலும், சிற்றிதழ்ச் சூழலிலும் இயங்கிய தொ.மு.சி.ரகுநாதன் போன்றவர்களே ஒப்புக்கொள்ளாத நிலையில் அதனை ஏற்று, அதற்குள்ளாக உள்ளடக்க அடிப்படையில் முற்போக்கு, பிற்போக்கு என இருமைப்படுத்திய இவரின் துணிவே புதுக்கவிதை எழுச்சித் திசையில் பயணிக்க உந்து சக்தியாயிற்று.

அதே போல சிறுகதை எனும் இலக்கிய வடிவத் தினையும் அக்கறையோடு வரவேற்கிறார். "சிறுகதையில் வாழ்க்கையென்னும் பரந்த நிலப்பரப்பை ஒரு ஜன்னல் வழியே பார்க்கிறோம். ஏதோ ஒரு கூறு அதன் பல்வேறு அம்சங்களோடும் நம் அகக்கண்ணில் தெரியும்படி கதையாசிரியன் கதையைச் சொல்லுகிறான்." (புதிய முளைகள் சிறுகதைத் தொகுப்பு - முன்னுரை) என அவர் சுட்டுவது கருதத்தக்கது.

நாவல் இலக்கியம் மனித வாழ்வின் முழுமைத் தன்மையைச் சித்திரிக்கும் இலக்கிய வடிவமாக இருப்பதைத் தமிழின் முதல் நாவலாசிரியர்கள் தொடங்கிப் பல்வேறு கருத்துநிலைப் பின்புலங் கொண்ட தற்கால நாவலாசிரியர்கள் படைப்புகள் வரை நோக்கி இவ்விலக்கிய வடிவத்தின் இன்றியமையா மையை நா.வா. விளக்குவார்.

"நமது அறிவு நிலையும் சமுதாய உணர்வு நிலையும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமையோடு நின்றுவிடக் கூடாது. அப்படி நின்று விட்டால் அறிவு வளர்ச்சியும் உணர்வு வளர்ச்சியும் தேங்கிவிடுகின்றன. இறந்த கால அறிவையும், உணர்வையும் கொண்டு வெகு வேகமாக மாறிவரும் இந்நூற்றாண்டின் சமூகத்தையும் மனிதனையும் அறிய முடியாது. எனவே உரைநடை நூல்களைப் பேராசிரியர்கள் இலக்கியமென்று கருதாவிட்டாலும், நாவலும் கதையும் வருங்கால இலக்கியத்தின் முதன்மையான வடிவங்களாக இருக்கும்." (தற்கால நாவல் ஒரு மதிப்பீடு-முன்னுரை) எனக் கல்விப்புல வட்டாரத்தில் நிலவிய பண்டிதத் தன்மையைச் சுட்டி, நாவல் இலக்கிய வடிவத்தை நா.வா. வரவேற்பதைக் காணலாம். மட்டுமல்லாமல் நாவல் இலக்கிய வடிவத்தின் படைப்பு அடித்தளத்தை, படைப்பாக்க நெறியை மிக நுட்பமாக வரையறுக்கிறார்.

"மரபுவழி இலக்கியப் புலவர்களும், மரபுவழி விமர்சகத் தடிக்காரர்களும் எதிர்பாராத சமூக அடித் தளத்தில் வேரூன்றிய, இலக்கியப் புதுமுளைகளைக் காண்கிறோம். சமூகமெனும் சேற்றில், கருத்தெனும் வித்து, இலக்கிய உருவமாக முளை விட்டுள்ளவும், வளர்ச்சி பெற்றுள்ளவுமான நமது நாட்டில் அவற்றால் அரை குறைத் தாக்கம் பெற்றுள்ள படைப்பாளிகள் சமுதாயச் சித்திரங்களையும், மனித இயல்புச் சித்திரங் களையும், சமுதாயத்திற்கும் மனிதனுக்குமுள்ள உறவு களையும் பரந்த பகைப்புலனில், பெரும் போக்காகவும், நுணுக்கமாகவும் தீட்டுவதற்கு முயன்றுள்ளார்கள். இச்சித்திரங்கள் புகைப்படங்களுமல்ல; கற்பனைப் படைப்புகளுமல்ல; படைப்பாளிகளின் சமூக-மனித உணர்வுகளில் உலக நிகழ்ச்சிபட்டுப் பிரதிபலித்து உருவான கலைப் படைப்புகள்" (அதே) ஆக, புத்தம் புதின இலக்கிய வடிவத்தைத் தமிழ் மரபின் தொடர்ச்சி யால் நா.வா. இனம் காட்டுகிறார். பொன்னீலனின் 'கொள்ளைக்காரர்கள்' முன்னுரையில் இலக்கிய வடிவம் குறித்த விவாதத்தையும் முன்வைக்கிறார்.

"கொள்ளைக்காரர்கள் யார்? என்ற கேள்விக்கு விடையளிக்கிறது இக்கதை. எனவே இது ஒரே கதைப் பொருள் கொண்டது. Unitary theme இருந்தால் சிறுகதை என்று நான் வரையறுக்கிறேன். எனவே இது சிறுகதை. நீளம் அதிகமாகிவிட்டதே சிறுகதை என்று சொல்லலாமா என்றால், சிறு என்பதை விடுத்து கதை என்று சொல்லிவிட்டுப் போங்கள். உங்களுக்குப் பிடித்தால் நெடுங்கதையென்று சொல்லிவிட்டுப் போங்கள். நாவல் என்று மட்டும் சொல்லாதீர்கள். ஒரு வரலாற்றுக் காலத்தின் சமூகப் போக்கின் சாரம் முழுவதையும் பல கதாபாத்திரங்களின் மூலம் வெளிப்படுத்துகிற கதைதான் நாவல்"

இதில் இரண்டு கருத்துகள் கவனிக்கத்தக்கன. ஒன்று ஒற்றைக் கருப்பொருளைக் கொண்டது சிறுகதை என்பது. மற்றது நாவல் குறித்த வழக்கமான வரையறை. தமிழ்ச் சூழலில் இன்றும் தெளிவு பெறாத குறு நாவல்/ நெடுங்கதை/சற்றே நீளமான கதை ஆகியவற்றின் ஒரு பகுதியாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

'உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்' நூலில் தமிழில் சங்க இலக்கியக் குறிப்புரைகள், கல்வெட்டுகள், மெய்கீர்த்திகள் தொடங்கி, தற்கால மேடைத் தமிழ் வரை பல்வேறு காலச் சூழல்களில் உரைநடை உருவ-உள்ளடக்க மாற்றங்களை அடைந்துள்ளமையை மொழி யாளுமையை மையப்படுத்தி நா.வா. விளக்குகிறார். இலக்கிய வடிவ மாற்றங்களைச் சமுதாய இயக்கங்கள் நிகழ்த்திக் காட்டும் என நா.வா. இதன் வழி நிறுவுகிறார்.

**யதார்த்தவாதப் படைப்புகளை இனம் காட்டுதல்**

புதுக்கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வடிவங்கள் நவீனத்துவத்தின் விளைச்சல்கள். ஐரோப்பியக் காலனியாக்கம், ஆங்கிலக் கல்வி முறை, அச்சு இயந்திர வருகை ஆகியவற்றின் உடனிகழ்வு உரைநடை இலக்கி யங்கள், இவற்றுக்குள்ளாக முற்போக்கு, பிற்போக்கு என்ற கருத்துநிலைகளை இனம் காண்பதும், யதார்த்த வாத மனிதநேயப் படைப்புகளை வாய்மொழி இலக்கிய மரபின் தொடர்ச்சியாக அடையாளம் காட்டுவதும் நா.வா.வின் தனித்தன்மைகளாகக் காணக் கிடைக் கின்றன.

புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும் நூலின் மறுபதிப்பில் முன்பதிப்பிற்குப் பின் நிகழ்ந்துள்ள மாற்றங் களைச் சுட்டிக் காட்டுவது புதுக்கவிதையின் முற்போக்குத் தன்மைக்குச் சான்றாதாரமாக விளங்குகின்றது.

"இன்றைய புதுக்கவிதைகளில்

1. புதிர்கள் குறைந்துள்ளன.
2. இருவர்க்கங்களின் கருத்து மோதல்களிடையே நசுங்கி ஓலமிடும் 'நடுநிலைக் கவிஞனது' ஓலங்கள் மிகக் குறைவாகவே கேட்கின்றன.
3. சமூக விமர்சனங்கள், பிரச்சினைகளுக்கு விடை தேடும் முயற்சிகளாக உருமாறியுள்ளன.
4. மனிதநேசம், உலக முன்னேற்றத்தில் நம்பிக்கை, உலக மக்களின் நல்வாழ்வில் நம்பிக்கை ஆகியன அதிகமாகியுள்ளன. இக்குறிக்கோள் களுக்காகப் போராடுகிற மக்களின் போர்ப் பரணியாகக் கவிதை ஒலிக்க வேண்டும் என்ற நன்னோக்குத் தோன்றி வளருகின்றப் போக்காக உள்ளது.
5. பிற்போக்குத் தத்துவங்களின் தாக்கம் (சர்ரியலிசம், எக்சிஸ்டென்ஷியலிசம், ஃபிராய்டிசம், நியோ ஃபிராய்டிசம்) குறைந்து, பொதுவாக மார்க்சியக் கொள்கையின் தாக்கம் மிகுந்துள்ளது."

இது இவரின் ஏனைய கவிதை விமர்சனங்களுக்கும் பொருந்தும்.

சிறுகதைகளிலும் சமூகச் சிக்கல்களை வட்டார வழக்கில் சித்திரிக்கும் போக்குகளை முன்னிறுத்தி ஊக்கப்படுத்துவதை இவர் எழுதியுள்ள சிறுகதை முன்னுரைகளில் காணலாம். கு.சமுத்திரத்தின் தொடக்கக் காலப் படைப்பான 'சத்தியத்தின் அழுகை' தொகுப்பு முன்னுரையில்,

"சமுத்திரத்தின் கதைகள் பொதுவாகத் தற்காலச் சமுதாய அமைப்பின் முரண்பாடுகளையும், அவற்றின் நியாய அநியாயங்களையும் அலசிப் பார்க்கிற சமுதாய ஆய்வு நிரம்பியதாக உள்ளது. இவ்வாய்வின் விளைவுகள் கற்பனை, கலையுணர்வு, கலைத்திறன் ஆகிய ஊடகங் களின் வழியே கலைப்படைப்பாகின்றன. ஒரு தத்து வார்த்தக் கண்ணோட்டம் இருப்பதால் இப்படைப்புகள் வக்கிரித்து நிற்பதில்லை. புற உண்மைகளைக் கலை உண்மைகளாக மாற்றுவதில் வெற்றி பெறுகின்றன" எனக் குறிப்பிடுவது யதார்த்தவாதக் கலை அழகியலை இனம் காட்டுவதாக உள்ளது.

அதே போல தமிழன் தொடக்கக் கால நாவலாசிரியர் களான வேதநாயகம்பிள்ளை, ராஜம் அய்யர், மாதவையா ஆகிய மூவரின் நாவல்களை மிகச் சுருக்கமாகவும் அதே வேளை நுட்பமாகவும் மதிப்பிட்டு மாதவையாவை நடப்பியல் இலக்கியத் தந்தை எனக் கூறும் அளவுக்குப் புகழ்கிறார்.

"தத்துவ நோக்கைவிட மனித நேசமே சிறந்தது என்பதை நடப்பியல் வாழ்க்கையிலிருந்தே காட்டுகிறார். நடப்பியல் சமூகத்தின் குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்ற சீர்திருத்த ஆர்வம் இவரிடம் முனைப்பாக உள்ளது. இவருடைய இலக்கியப் பார்வை நடப்பியல் முற்போக்கானது. இவரை இவ்வகை ஆசிரியர்களுள் முதன்மையானவர் என்றும், புரட்சி கரமான மனித நேசக் கொள்கையின் தந்தையென்றும் கூறலாம். உலக ஒற்றுமைக்கும் மனித மேன்மைக்கும் வழியாக இவர் சமயப் பொறையையும் மனித இன நேசத்தையும் காட்டுகிறார். இக்கண்ணோட்டத்தின் செல்வாக்கை இவரின் நாவல்களில் காணலாம்."

இந்த மதிப்பீட்டின் வழியேதான் கா.சி.வேங்கட ரமணி, தி.ம.பொன்னுசாமிப்பிள்ளை என்று தொடங்கி ஜெயகாந்தன், ராஜநாராயணன், பொன்னீலன் வரை பலரையும் நடப்பியல் நோக்கு நெறிப் படைப்பாளி களாக அடையாளம் காட்டுகிறார். கி.ரா.வின் 'கோபல்லக் கிராமம்' நாவல் திறனாய்வில் "இந்நூலை முற்போக்கு, பிற்போக்கு என்று வறட்டுத்தனமாக மதிப்பிட முடியாது. நாட்டுப் பண்பாட்டு மரபில் தோன்றிய ஒரு வரலாற்று நாவல் இது. இதில் மெய்யியல்

பார்வை விஞ்சியும் இயல்பியல் (Naturalism) பார்வை குறைந்தும் காணப்படுகிறது. நாட்டுப் பண்பாட்டைப் (ஒரு சாதியாரின்) பரிபூரணமாக வெளிப்படுத்தும் சிறந்த படைப்பிலக்கியம் இந்நூல்" எனக் கூறுவதன் வழி 'நாட்டார் நாவல்' என்கிற வரையறையைத் தருகிறார்.

### திறனாய்வு நெறிகள்

நா.வா. அடிப்படையில் மார்க்சியவாதி. காலமும், இடமும், வரலாற்றுச் சூழலும் படைப்பைத் தீர்மானிக்கின்றன. கலை மனித உணர்வின் வடிவங்களில் ஒன்று. அக உலகிற்கு வெளியே உள்ள புற உலகை அது அகத்தினுள் பிரதிபலிக்கிறது. அறியப்படும் பொருளும் அதன் அகப் பிரதிபலிப்பும் உற்பத்தி நிலைகளுக்கும் சமூக வரலாற்றுக்கும் கட்டுப்பட்டவை என்ற அறிதல் முறைக் கொள்கையை மீறியே கலை முகிழ்க்கிறது.

புற உலகில் உள்ள நிலைமைகளை அவ்வாறே நிழற்படம் போல வெளிப்படுத்துவதைக் கலை எனக் கொள்ள இயலாது. மனித மூளை என்பது வரலாற்றுக் கால மனித முயற்சிகள், சாதனைகள் அனைத்தின் கருவூலமாகும். இது புற உலகை மதிப்பிட்டுப் பொதுவிதிகளை உருவாக்குகிறது.

எல்லாக் கலைஞர்களும் சமூக வாழ்வின் முரண்பாடுகளில் இருந்துதான் கலைப்படைப்பைத் தொடங்குகிறார்கள். வாழ்க்கையின் இயக்கப் போக்கை மேலும் மேலும் அறிந்துகொண்டு வரலாற்றுக் கண்ணோட்டமும் தத்துவ நோக்கமும் பெறும்போது அவர்களுடைய கலைப்படைப்புகள் செழுமையடைகின்றன என்பதான இயக்கவியல் வரலாற்று அணுகுமுறை நா.வா.விடம் இயல்பாக அமைந்திருந்தது.

உருவம், உள்ளடக்கம், அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம், பிரதிபலித்தல் கோட்பாடு, அந்நியாமாதல் முதலிய மார்க்சிய அடிப்படைக் கூறுகள் முழுவதையும் உள்வாங்கி அதே நேரத்தில் சூத்திரத்தன்மைக்குச் சென்றுவிடாமல் விமர்சனப் பணியினை அவர் செய்தார்.

இலக்கியத்தில் உருவமும் உள்ளடக்கமும் என்ற அவரின் நூலில் உருவ-உள்ளடக்க உள்விவகாரங்களை மிக நுட்பமாக விவாதிக்கிறார். இலக்கியத்தில் உள்ளடக்கம் மட்டுமே முக்கியமானது என அன்றைய மார்க்சியர் பலர் (மார்க்சிய அழகியலின் அடிப்படைகள்: அவ்னார்ஸீஸ்) வாதிட்டனர். நா.வா.வோ "உள்ளடக்கம் உயிர், உருவம் உடல் இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பு போல் உள்ளடக்கமும் உருவமும் தொடர்பு கொண்டவை. உள்ளடக்கம் இல்லாத உருவம் உயிரற்ற உடல் போன்றது. உருவமற்ற உள்ளடக்கம் உடலற்ற உயிர் போன்றது" எனப் புரிந்து விளக்கினார்.

மேலும், நா.வா. உருவமா, உள்ளடக்கமா என்ற விவாதத்தில் இறங்காமல் அல்லது இதில் எது சிறந்தது, முக்கியமானது என்ற முடிவினைத் தேடாமல் அழகியல் நுட்பத்தின் இரண்டின் ஊடும்பாவுமானச் சேர்மானத்தை வலியுறுத்தி வழிமொழிகிறார்.

"கலைப்படைப்பில் உள்ளடக்கத் தெளிவும் உருவச் சிறப்பும் இருத்தல் வேண்டும்.... இரண்டும் இணைந்து தான் கலைப் படைப்பு ஒருமை (Unity of Content and Form) தோன்றுகிறது" என்றும்,

"உள்ளடக்க உருவங்களின் இணைப்பும் ஒருமையுமே ஒரு கலைப் படைப்பை உள்ளம் கவரும் தன்மையுடைய தாக்குகின்றன" என்றும் அவர் தெளிவாகவே குறிப்பிடுகிறார்.

கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், இலக்கியத்தில் உருவமும் உள்ளடக்கமும், இலக்கியத்தில் முற்போக்குப் பார்வைகள் ஆகிய கட்டுரைகள் நா.வா.வின் கலை அழகியல் முற்போக்குக் கண்ணோட்டத்திற்குச் சான்று பகர்வனாக அமைகின்றன.

தமிழ்ச் சூழலில் புத்தம் புதிதாய் உருவெடுத்த மார்க்சிய இலக்கியச் செல்நெறியை ஆரவாரத்தோடு நிலைநிறுத்தும் பணி அவருக்கு இருந்தது. இதனை ஒட்டியே அவர் மீதான எதிர் விமர்சனங்களும் தோன்றின.

இலக்கிய விமர்சனம் குறித்துகூட மிகவும் நெகிழ்வான (நேர் அர்த்தத்தில் குறிப்பிடுகிறேன்) ஓர் அளவுகோலையே அணுகுமுறையாக அவர் பயன்படுத்தினார். பட்டியல்படுத்தல், தரப்படுத்தல் என தொழிற்பட்ட விமர்சகர்களைச் சுட்டும்போது, "தமிழ் நாட்டில் தற்கால இலக்கியம் பற்றிய விமர்சனங்கள் வளரவில்லை" என்று தங்களுக்கு விமர்சகர்கள் என்ற பதவியளித்துக் கொண்டுள்ள சிலர் உரக்கக் கூறுகிறார்கள். விமர்சனம் என்றால் கலைஞனுயை ஓராண்டு உழைப்பின் பயனாகப் பிறந்த படைப்பை ஒரு கணத்தில் உடைத்தெறியும் சிலம்ப வித்தை யென்றெண்ணிக் கொண்டு இலக்கியத் தடி சுழற்றும் வித்தையைக் காட்டுபவர்கள் இவர்கள். இவர்களுக்குக் கலை என்றால் கலைதான். கலைக்குச் சமூக விளைவு எதுவும் இருக்கக்கூடாது. இருந்தால் அது அசிங்கம். நிலமில்லாமல் பயிரும், தாயின்றிச் சேயும் தோன்றுகின்றது என்று இவர்கள் நம்புகிறார்கள். இவர்கள் ஒரு வகை" (தமிழ் நாவல் மதிப்பீடு) எனக் கடுமையாகச் சாடி, எது விமர்சனம் என்பதை முன்வைக்கிறார்.

அதே போலத் தனது விமர்சன அணுகுமுறையை "ஒரு கவிதையை ஒரு முறை படித்தவுடனே அதனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் அதிமேதாவி நானல்ல. ஒரு கவிஞனது கவிதையைப் பலமுறை ஆழ்ந்து படித்த பின்னரே, முன்னர் அவன் எழுதிய கவிதைகளோடு ஒப்பிட்டு, அவனது இலக்கியப் போக்கை வகைப்படுத்த நான் முயலுவேன். நான் அவசர விமர்சனங்கள் எழுதுகிறவனல்ல. ஆழ்ந்த இலக்கிய ஆய்வின் முடிவு

களையே நான் வெளியிட விரும்புகிறேன்" என குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

தமிழ்ச் சூழலில் வேதநாயகம் பிள்ளை, மாதவய்யா, கல்கி, ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி, தி.ஜானகி ராமன், நீல பத்மநாபன், கிருத்திகா, சண்முக சுந்தரம், க.நா.சு, ராஜநாராயணன், சமுத்திரம், பொன்னீலன் உள்ளிட்ட படைப்பாளிகள் பலரின் படைப்பு நெறி களை ஆராய்ச்சி இதழின் வழியே வெளிக்கொணர்ந்தார். கா.சுப்பிரமணிய பிள்ளை, எஸ்.வையாபுரிப் பிள்ளை, இரா.இராகவய்யங்கார், ஏ.வி.சுப்ரமணிய அய்யர் போன்றோரின் ஆய்வு நெறிகளைத் தக்க அறிஞர்களைக் கொண்டு மதிப்பிட்டு ஆராய்ச்சி இதழில் வெளியிட்டார்.

நா.வா. புதிய இலக்கியப் போக்குகளான சர்ரியலிசம், எக்ஸிஸ்டென்ஷியலிசம், ஃபிராய்டிசம் போன்றவற்றைப் பரபக்கமாகவேனும் (தான் எதிர்த்த போதிலும்) அறிமுகப்படுத்தியவர்; மனித நேசம், போர்க் குணமிக்க மனிதநேசம், கற்பனாவாதம், புரட்சிகரமான கற்பனாவாதம், யதார்த்தவாதம், விமர்சன யதார்த்த வாதம், சோசலிச யதார்த்தவாதம் முதலிய இலக்கியப் போக்குகளை உற்சாகத்தோடு விளக்கிக்காட்டியவர்.

நா.வா. தன்னளவில் தான் வரித்துக்கொண்ட கொள்கைக்கு நேர்மையாக இருந்தவர். அறிவுத்தளத்தின் பல மட்டங்களிலும் பல களங்களிலும் பணி செய்தவர். அவர் காலத்தில் அவருக்குக் கைக்கு எட்டிய அறிவுக் கருவூலங்கள் அனைத்தையும் தமிழ் அறிவுலகுக்குப் பந்தி வைத்துவிட வேண்டும் என்ற பேரவாவில் இயங்கியவர். தான் மட்டுமல்லாது தன்னைப் போல் ஆய்வாளர் பலரையும் உருவாக்கி உச்சி முகர்ந்து மகிழ்ந்தவர். கட்சி/ இயக்கம்/கொள்கை பற்றுறுதி காரணமாகவே பழிக்கப் பட்டவர். மீராவையும், பரிணாமனையும், பொன்னீலனையும் தட்டிக் கொடுத்ததைக் கட்சிக்காரரர்களைக் கட்டி அணைக்கிறார் என எள்ளல் செய்தவர்கள் மாதவய்யாவை, கா.சி.வேங்கட்ரமணியை, ஹெப்சிபா ஜேசுதாசனை, சூரியகாந்தனைப் படைப்பு நோக்கிப் பாராட்டியதை எங்கும் குறிப்பிடாமல் இருட்டடிப்புச் செய்தார்கள்.

தமிழ்ச்சூழலில் அமைப்புச் சார்ந்து இயங்குபவர் களை அவர்களின் படைப்பு/ஆய்வு ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளாமல் கட்சிக்காரரர்கள் எனக் கொச்சைப்படுத்துவது (பொதுவுடைமை/திராவிட இயக்கம்)கூட ஒரு விதத்தில் மனு அதர்ம வெளிப்பாடு தான்.

தமிழ்ச்சூழலில் பின்னால் தோன்றிய அந்நியமாதல், கிராம்ஷி போன்ற புதிய மார்க்சியப் போக்குகளுக்கும், தலித்தியம், பெண்ணியம் முதலிய விளிம்பு நிலை செல்நெறிகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் நா.வா. உந்து சக்தியாக இருக்கிறார். ●

# அஞ்சலி



8-7-2017 அன்று 97 வயதில் கோவையில் இயற்கை எய்திய தோழர் டி.ஞானையா அவர்கள் மறைவுக்கு ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’ அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

'பாகிஸ்தான் பிரிந்தது ஏன்', 'அமெரிக்க பயங்கரவாதம் வரலாற்றுத் தடங்கள்', 'இந்தியா-வரலாறும் அரசியலும்', 'சர்வதேச பயங்கரவாதமும் இந்தியப் பயங்கரவாதமும்', 'அமெரிக்காவின் ஒபாமாக்களும் இந்தியாவின் தலித்துகளும்', 'இஸ்லாமும் இந்தியாவும்', 'அணு ஆயுத அரசியல்' உட்பட 40 நூல்கள் எழுதியுள்ளார்.

பிரிட்டன் ஆதிக்கக் காலத்தில், அப்போதைய தகவல் தொடர்புத்துறையில் சேர்ந்து, இரண்டாம் உலகப் போரையொட்டி, அங்கேரி, அர்மீனியா நாடுகளுக்குச் சென்று பணியாற்றினார். பிறகு, இந்திய தபால் தந்திதுறையில் சேர்ந்தார். அகில இந்திய அஞ்சல், தந்திப் பணியாளர் சங்கத்தின் செயலாளராக, டெல்லியில் பணியாற்றியவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயற்குழுவிலும் மாநிலச் செயற்குழுவிலும் செயல்பட்டவர்.



# சித்த மருத்துவம் தழைக்காத காரணம் என்ன?

டாக்டர் சு. நரேந்திரன்

**வி**ண்ணுக்கொரு மருந்தை வேத விழுப் பொருளைக் கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் (திருவெம்பாவை-3), மருந்தினனே பிறவிப் பிணிபட்டு மடங்கினார்க்கே (நீத்தல் விண்ணப்பம்-18) போன்ற பாடல்கள் இறைவனே எல்லாம் என்றதனால் பக்தி இலக்கிய காலத் திற்கு முன்பிருந்த சித்தர் மரபு காக்கப்படாமல் போயிற்று. எனவே, அக்காலத்தில் நோய்கள் பற்றியும், அவற்றிற்கான மருந்துகள் பற்றியும் குறிப்புகள் அதிகமில்லாமல் போயிற்று எனலாம். மேலும் மருத்துவக் குறிப்புகளும், ஓலைச் சுவடி களில் பாட்டாக மருந்துகளும் மறைபொருளாக எழுதப்பட்டு, நவீன மருத்துவத்தைப் போலன்றி ஜனநாயகப்படுத்தப்படாது பிறர் எளிதில் புரிந்து நடைமுறைப்படுத்த முடியாததாகவே இருந்தது.

ஆய்வுகள் இல்லாத காரணத்தினாலே, சித்த மருத்துவம் வளரவில்லை என்பதை இந்திய மருத்துவப் பள்ளியின் இயக்குநராகப் பணிபுரிந்த மேலை மருத்துவ நிபுணரான டாக்டர் எம்.ஆர். குருசாமி முதலியார் இந்திய வைத்திய "எல்.ஐ.எம். மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றிய பொழுது, எல்.ஐ.எம்.-களுக்கு பரம்பரை வைத்தியர் களே இடைஞ்சல். இத்துடன் மேல்நாட்டு முறையை அப்பியாசிப்பவர்களும் உங்களைக் குறைகூறி வருகின்றனர். இதற்கு நீங்கள் ஆராய்ச்சி அடிப் படையில் ஈடுபட இந்திய முறையை வெகு சீக்கிரம் விஞ்ஞான உலகம் வியக்கும்" என்று கூறினார். இதே போக்கு நீடித்து வருவதை கடந்த 10 ஆண்டு களில் 153 ஆய்வுக்கட்டுரைகளே வெளிவந்ததன் மூலம் அறியமுடிகின்றது.

சித்த மருந்துகளால் உடனடியாக நோய்களுக்கான அறிகுறிகளைக் குறைக்க முடியாது என்ற காரணத்தால், இன்று சில சித்த மருத்துவர்கள் அலோபதி மருந்துகளைக் கொடுப்பது வழக்கமானதாக உள்ளது. இதுபோலவே 60 ஆண்டுகளுக்கு முன்பும் இருந்ததைத் தமிழ்நாடு ஆயுர்வேத மகா சம்மேளனத்திற்குத் தலைமை வகித்த பண்டிட் பி.எஸ். ராமசர்மா தலைமை உரையால் அறிய முடிகிறது. "சித்த மருத்துவர்கள் ஏன் அவர்கள் மருத்துவமுறையைக் கையாள்வதில்லை?" மேலும் பரம்பரை வைத்தியர்களுக்கு எவ்வித செல் வாக்கும் இல்லை. இத்துடன் சித்த மருத்துவர்கள் எல்.ஐ.எம். (சித்தா) அம்மருத்துவம் தழைக்க ஏன் தங்கள் மருந்துகளையே கையாள்வதில்லை" என்று குறை கூறிப் பேசியதிலிருந்து சித்த மருத்துவம் வளர்ச்சியடையாததற்கான காரணத்தை மேலும் அறிய முடிகிறது.

**காலனி அரசின் உள்நாட்டு மருந்துக் கொள்கையும் அதன் விளைவுகளும்:-**

இந்திய மண்ணில் மேலை மருத்துவமும் ஹோமியோ மருத்துவமும் காலூன்றிய பிறகு, உள்ளூர் மருத்துவத்திற்கான மவுசு, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, திரும்ப மீள முடியாத அளவிற்குச் சென்றது எனலாம்.

ஆயுர்வேதம், யுனானி அல்லது சித்த மருத்துவம் ஆகிய முறைகளில் புதிய தடுப்பு முறைக்கான ஊசிகள் அல்லது புதிய உத்தியில் நோயை அறியும் முறைகள் மேலை மருத்துவத்திற்கு இணையாக இல்லை. இத்துடன் அம்முறையில் தோன்றுவதாகவும் இல்லை. இதனால் உள்நாட்டு மருத்துவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

மாகாண மருத்துவக் கவுன்சில் ஆரம்பிக்கப்பட்டபின் மேலை மருத்துவம் பட்டம் பெற்று தகுதியானவர்கள் அனைவரும் இதில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று 1912, 1917-களில் சட்டம் இயற்றியது. இது சுதேசி மருத்துவர்கட்கு பேரிடியாகி இக்கவுன்சிலில் அங்கம் வகிக்க முடியாதபடி போய் உள்ளூர் வாசிகளிடமே மதிப்பிழந்து வாழ வேண்டியதாயிற்று. மேலும் அரசு வேலைகளுக்கும் மேலை மருத்துவம் கற்றவர்களே பணியில் அமர்த்தப்பட்டனர்.

மேலை மருத்துவத்தின் வருகையால் உள்நாட்டு மருத்துவர்களுக்கு நோயாளி வருகை மிகவும் குறைந்தது, மக்களிடமும் இருந்த மதிப்பும் குறைந்தது. மக்களும் உடனடித் தீர்க்கும் மருத்துவம் தங்களுக்கு ஒரு புதிய வரவு என மேலை மருத்துவத்தை வரவேற்று, இதுபோல் தாங்கள் எப்போதும் கண்டதில்லை என வியந்தனர்.

சுதேசி மருத்துவர்கள் தங்கள் தொழில் பாதிக்கப்படுவதற்குக் காரணம், பிரிட்டிஷ் அரசே என்று குறை கூறினர். ஏனெனில் அரசு மேலை மருத்துவத்தை மட்டும் முறைப்படுத்தி அதன் மேம்பாட்டிற்குப் பேருதவி செய்தது. இதனால் முன்னர் சுதேசி மருத்துவத்தை ஆதரித்த அரசர், ஜமீன்தார் உள்ளாட்சி (நகராட்சி) அமைப்பினர் ஆகியோர் மேலை மருத்துவத்திற்குத் துணை போயினர்.

உள்ளூர் மருத்துவத்தைப் பேண காலனி அரசு எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. சுதேசி முறைக்குப் புத்துயிர் அளிக்க சரியான நிதி உதவியும் செய்யவில்லை. இதுவே, முஸ்லீம் பேரரசுகள் இந்தியாவில் அரசாண்டபோதும் நடைபெற்றன. ஆகவே, இது ஒன்றும் புதிதில்லை என்றும் கூறப்பட்டது. (Medicine and the Raj- P. 68)

இப்படியாக, உள்நாட்டு மருத்துவமுறை வலுவின்றி சென்றுகொண்டிருந்தபோதும், 19-ஆம் நூற்றாண்டு முழுவதும் வழக்கம் போலவே சுதேசி வைத்தியர்கள் பாரம்பரியமாகத் தங்கள் தொழிலை வளர்த்து வந்தனர். இந்நிலையில் காலனி அரசு சுதேசி மருத்துவத்தை உள்நாட்டு வழியில் போதிக்க முனைந்தது. ஆனால் உள்ளூர் மொழியில் கல்லூரியில் படிப்பதை அக்காலத்தில் கல்வியில் சிறந்தவர்கள், **"சுதேசி பைத்தியங்கள்"** என்று குறை கூறினர். மேலும், இவர்களுக்கு மேலை மருத்துவ நூல்களை அரசு மொழி பெயர்த்து வைத்தியர்களின் வாரிசுகளுக்கு, உதவ வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், இதற்கு ஐரோப்பிய மருத்துவர்களும் மேலை மருத்துவம் கற்ற இந்தியர்களும் பெரும் தடையாய் இருந்தனர். இக்கால கட்டத்தில் சுதேசி வைத்தியர்களை அரசு கண்டுகொள்ளாது அவர்கள் வளர்ச்சிக்கு உதவாது இருப்பதை, விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, இந்திய மருத்துவ அலுவலர் கழகப் பிரிவை இந்தியாவில் செயல்பட வைக்க வேண்டும் (1893-1907) என்று ஒவ்வொரு கூட்டத்திலும் வலியுறுத்தியது. மேலும், சுதேசி மருத்துவம் என்பது இந்திய கலாசாரத்தின் சின்னம். ஆகவே, இதனை உயிர்ப்பிப்பது அரசின் கடமை என்றும் கூறியது. ஏனெனில், இந்த செயலும் இந்திய விடுதலைக்கு உதவக்கூடும் என்று அக்கட்சி நினைத்தது. இதன் பயனாக அரசு, **"ஹோம் ரூல் மூவ்மெண்டின் உச்சபட்ச வெளிப்பாடாக"**

முதல் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை ஜாமினி ரோயால் 1916-இல் கல்கத்தாவில் தங்கள் ஆதர வாளர்களின் நிதி உதவியுடன் திறந்தது. (Medicine in India. Modern Period on Jaggi: P. 345)

**நீர்த்துப்போன நீரியல் கோட்பாடு:**

இக்கால கட்டத்தில் சுதேசி மருத்துவம் உடல்கூறு, வேதியல், மகளிர் மருத்துவம், அறுவை மருத்துவம் ஆகிய துறைகளில் மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. மேலும் ஆய்வுகளும் மிகக்குறைவானதே என்பது பொதுவான கருத்தும், உண்மையும் கூட. காலரா, பெரியம்மை, மலேரியா, பிளேக் ஆகிய நோய்கள் கொள்ளை நோயாக வரும்பொழுது அவற்றிற்கான தடுப்பு முறையோ அல்லது மருத்துவமோ இல்லை என்பதும் பெரும் பான்மையான உண்மையாக இருந்தது. மேலை மருத்துவக் கண்டுபிடிப்பான பாக்டீரியா இவர்கள் கூறும் உடம்பிலுள்ள நீரியலான தாதுக்களின் நிலை சார்ந்ததென்ற கருத்திற்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இல்லாது, பெரும் இடர்பாட்டை ஏற்படுத்தி அடிப்படைத் தத்துவத்திற்கே வேட்டு வைப்பதாக இருந்தது. மேலும் சுதேசி மருத்துவம் குணமாவதைக் குறிப்பிடுகிறதே தவிர எப்படி, நோய் ஏற்படுகிறது? என்பதற்கான காரணங் களைக் கூறுவதில்லை எனவும் விமர்சிக்கப்பட்டது மற்றும் நோயை வகுத்துக்கூறும் முறை (Nosology) சுதேசி மருத்துவத்தில் இல்லாததும் பெரும் குறையாக இருந்தது.

நுண்நோக்காடி (Microscope) மற்றும் பாக்டீரியாக் களுக்கான ஆண்டிபயாடிக் என்பவைகளுக்குச் சுதேசி மருத்துவம் பதில் சொல்ல இயலவில்லை. சுதேசி மருத்துவத்தில் நோய் எதிர்ப்புத்தன்மை மற்றும் நோயின் குணப்பாட்டைக் குறித்து மருத்துவம் அளிக்கப்பட்டதே தவிர அந்நோயை உருவாக்கிய கிருமிகளை அழிப்பது என்ற கொள் கைக்கு ஈடான மருத்துவம் இல்லை என்பதும் ஒரு பெரும் குறைபாடாகக் கருதப்பட்டது.

பிரிட்டிஷ் அரசு, மேலை மருத்துவத்திற்கு ஒப்ப சுதேசி மருத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஒருபோதும் விஞ்ஞான அடிப்படையிலான ஒன்று என்று அதன் நூல்களைப் பார்த்தும் ஏற்றுக் கொள்ள மறுத்தது. அதன் குணப்பாடு மற்றும் நவீன மருத்துவத்திற்கான அதன் பங்களிப்பு ஆகியவைகள் இல்லாமையால் கேலி பேசுவதாக இருந்தது. மேலும், அரசு கொள்ளை நோயின் தாக்குதலின்போது சுதேசி மருந்துகள் பயனற்று இருந்ததால், அரசு இதன் மேல் கவனம் செலுத்த வில்லை. ஆகவே, சுதேசி மருத்துவத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து வளர்க்கவும், கல்லூரிகளைத் தொடங்கவும் அரசு விரும்பவில்லை. (Medicine in India Modern Period P. 342)

**சாதியத்தில் தலையிடாதே - அரசு கவனம்:**

மருத்துவக் கல்வியைப் பொறுத்த மட்டில், 1850-51 'Board of Education' அறிக்கையின்படி என்ன கற்பிக்க வேண்டும்? எப்படிக் கற்பிக்க வேண்டும்? என்பது 1835-ஆம் ஆண்டில்தான் தெளிவானது. ஆனால் 1835-இல் யாருக்குக் கற்பிக்க வேண்டும்? ஏன் கற்பிக்க வேண்டும்? என்பது காலனி அரசிற்கு விடுவிக்கப்படாத கேள்வியாகவே இருந்தது.

இந்த அறிக்கையின்படி ஒரு சிறிதளவே கல்வி அளிக்க அரசு முனைந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதுவும் உயர்சாதியினருக்கு ஐரோப்பிய அறிவியலைக் கற்பிப்பது என்பது மேலை இலக்கியங்களை அவர்கள் நாட வழி அமைக்கவே ஆகும் என்பதும் அவர்கள் எண்ணமாக இருந்தது.

இந்நிலையில் மிஷினரிகள் கீழ்த்தட்டு வர்க்கத் திற்குக் கல்வி அளிக்க முன்வந்தாலும், அரசு முன் வரவில்லை. இதைப்பற்றி எல்பின்ஸ்டன் குறிப்பிடு கையில் கவனமாக நாம் கல்வியை ஒரு புதிய வகுப் பினருக்கே அளிக்க வேண்டும், இதை பிராமணர் அல்லது பிராமணர்களை ஒத்தவர்களுக்கே அளிக்க வேண்டும். அரசு, எல்லோருக்கும் கல்வி என்பதை விதியாகக் கொள்ளத் தேவையில்லை. ஜாதி பாகுபாட்டில் நாம் தலையிடத் தேவையில்லை. அது அப்படியே இருக்கட்டும் என்றார். ஆக, அரசு சமூகத்தினூடே தலையிடாக் கொள்கையைக் (Social Non Interference Policy) கடைப்பிடித்தது. இது போலவே, மருத்துவக் கல்வி என்பதும் ஒரு சமூக மாற்றத்திற்கு என்பதற்குப் பதிலாக, காலனி அரசை மேலும் வலுப்படுத்தக் கூடிய விதத்தி லேயே அமைந்தது.

**முதல்முறையாக ஆயுர்வேத மருத்துவமனை பண்டிட் கோபாலாச்சார்லும் - ஆயுர்வேதமும்:**

1898-ஆம் ஆண்டு மைசூரில் பிறந்து சென்னையில் குடியேறிய பண்டிட் கோபாலாச்சார்லுவே முதன் முதலாக "மதராஸ் ஆயுர் வேதிக் ஆய்வுக் கூடத்தை" ஆரம்பித்து, பிறகு மருந்தகத்தையும் "ஆயுர் வேதாஸ்ரமம்" என்ற பெயரில் ஆரம்பித்தார். இதுவே சுதேசி முறையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் மருத்துவமனையாகும். பிறகு இது கல்யாண பரமேஸ்வரி அறக்கட்டளை உதவியால் கல்லூரி ஆனது.

*1901-1929 வரை 167 மாணவர்கள் இக் கல்லூரியில் படித்துள்ளனர். இவர்கள் தங்கள் பட்டப்படிப்பை நான்கு ஆண்டுகள் பயின்றனர். அரசால் ஆயுர்வேத மகத்துவம் உணரப்பட்டது.*

*ஆரம்ப காலங்களில் காலனி அரசு சுதேசி மருத்துவமுறைகளைப் பயன்தரும் கேடுகளற்ற மருத்துவம் எனக் கொள்ளாது, மதிப்பளிக்காது, சலுகைகள் அளிக்காது அதை ஒரு ஆய்வுகளற்ற நாட்டுப்புற மருத்துவம் என்றே கருதியது. அதன் காரணமாக அரசு ஆதரவு இன்றி சலுகைகள் கிடைக்காமல் இருந்தது. ஆனால் கோபாலாச் சார்லுவின் மருத்துவத்தின் மகத்துவத்தை அறிந்த பின், ஆயுர்வேத மருத்துவத்தை ஏற்றுக்கொண்டு,*



மருத்துவ உபகரணங்களுடன் பண்டைய மருத்துவர்

*ஆதரவு தெரிவித்ததன் காரணமாக மதராசில் 1905-இல் கிருஷ்ணசாமி அய்யரால் வெங்கட்ட ரமணா மருந்தகமும், ஆயுர்வேதக் கல்லூரியும் தொடங்கப் பட்ட பின் ஆண்டுக்கு 40 ஆயிரம் நோயாளிகள் பயனடைந்தனர்.*

*சிறப்பு வாய்ந்த மருந்துகளும், அதன் பயனாகக் குணமடைந்த மக்கள் ஆதரவும், நம்பிக்கையும் இருந்தும் பிரிட்டிஷார், அலோபதி மருத்துவம் தெரியாத சுதேசி மருத்துவர்களிடம் மருத்துவம் பார்ப்பது பாதுகாப்பானவை அல்ல என்றே எண்ணினர். ஆகவே, 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் காலனி ஆதிக்கத்தில் அலோபதி மருத்துவமே நோய்களைக் குணமாக்க முக்கிய அங்கம் வகித்தது. இதனை முழுவதும் நிறைவேற்ற பிரிட்டிசார் எடுத்த முயற்சியால் 1900 ஆண்டு வரை இந்திய மருத்துவ சேவைக்கு 200 மருத்துவர் களையே பிரிட்டனிலிருந்து அனுப்ப முடிந்தது. ஆகவே, பற்றாக்குறையைச் சரிக்கட்ட, இந்தியர் களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாயினர்.*

**சட்டசபையில் ஆயுர்வேத வளர்ச்சிக்கே குரல்**

*ஆரம்ப காலத்தில் அலோபதி மருத்துவத்திற்கு அரசு மிகுதியாக ஆதரவு அளித்து வந்ததால், சுதேசி மருத்துவ வளர்ச்சி தடைபட்டது. ஆனால், 19-ஆம் நூற்றாண்டில் சுதேசி மருத்துவம் மருத்துவர் களால் கையாளப்பட்டு மீட்டுயிர் பெற்றது.*

*இதற்குக் காரணம் 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தமிழ் நாட்டில் வெளிவந்த பல மருத்துவ சஞ்சிகைகள் சுதேசி மருத்துவ மேம் பாட்டுக்கு ஆதரவாக தீவிரமாக எழுதின. எ.கா 'வைத்திய கலாநிதி' மருத்துவ இதழ் ஆசிரியர் பண்டிட் எம். துரைசாமி அய்யங்கார் காலனி அரசின் சரியாகப் பயன்தராத பொது மக்களுக்கான நல் வாழ்வுத் திட்டங்களையும், மேலை மருத்துவத் திற்கான மிகையான ஆதரவையும் சுட்டிக் காட்டி கட்டுரைகளை எழுதினார். மேலும் இவர் சட்ட சபை விவாதங்களில் கலந்து கொண்டு முதல் வேண்டுகோளாக ஆயுர்வேதப் பள்ளிகளைத் திறந்து அதன் வளர்ச்சிக்கான பணிகளை (சித்த மருத்துவம் குறித்து பேசாது) மேற்கொள்ள கேட்டுக் கொண்டார். இத்துடன் 1914 நவம்பர் 23, ஏ.எஸ். கிருஷ்ணாராவ், உள்நாட்டு மருத்துவத்திற்கு ஊக்கமளிக்க ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். இவரும் ஆயுர்வேதம் குறித்தே பேசினார். இதன் பயனாக சர்ஜன் ஜெனரல் கிப்போர்ட் (Gifford) டாக்டர் எம்.சி. கோமேன் (Dr. Mc. Koman) என் பவரை 1918 ஜூலை 12-ஆம் தேதி சுதேசி மருத்துவ முறையை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.*

*இதன்படி டாக்டர் கோமேன் 1918 அக்டோபர் 31-இல் உள்நாட்டு மருத்துவம் குறித்த அறிக்கையைத்*

தயாரித்து 1918 டிசம்பரில் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இதை அரசு நிராகரித்தது. பிறகு உஸ்மான் கமிட்டியை உருவாக்கி அதன் பரிந் துரையின் பேரில் இந்திய மருத்துவப்பள்ளி 1924-இல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் சுதேசி மருத்துவத் துடன் மேலை மருத்துவமும் கற்பிக்கப்பட்டது.

### பள்ளி, கல்லூரியாகி எல்.ஐ.எம், ஜி.சி.ஐ.எம் ஆனது:

1946-இல் சென்னை மாகாண முதல்வர் பிரகாசம், சுகாதார அமைச்சர் திருமதி ருக்மணி லட்சுமிபதியும் உஸ்மான் குழு, சோப்ரா குழு மற்றும் பண்டிட் குழு போன்ற ஆய்வுக் குழுக்களின் பரிந்துரைகளைச் செயல்படுத்த ஓய்வு பெற்ற மைசூர் சட்டத்துறைச் செயலர் திரு. நாராயண சாமி நாயுடுவை தனி அலுவலராக நியமித்தனர். பின்னர் கல்லூரிக்கான பாடத்திட்டங்கள் உருவாக்கப் பட்டு இந்திய மருத்துவம் பள்ளி, கல்லூரி ஆகி கல்லூரியின் பெயர் (College of Integrated Medicine) என்று மாற்றமடைந்தது.

1948-இல் இக்கல்லூரியில் ஜி.சி.ஐ.எம் படிப்பில் சித்தா ஆயுர்வேதம், யுனானி ஆகியவைகளில் ஏதாவது ஒன்றை அலோபதி மருத்துவத்துடன் படிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

College of Indian Medicine, (1953) (G.C.I.M- Graduate of the College of Integrated Medicine) என்ற 4-5 ஆண்டு பட்டப்படிப்பு துவங்கப்பட்டு, பிறகு ஓர் ஆண்டு பயிற்சியும் அளிக்கப்பட்டது. முதலில் 30 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். அதன் பிறகு, இது படிப்படியாக 125 மாணவர்களாக அனுமதி உயர்த்தப்பட்டது. இச்சமயத்தில் அரசு இக்கல்லூரியைச் சென்னைப் பல்கலைக்கழகத் துடன் இணைக்க முயற்சித்தது. ஆனால் டாக்டர் ஏ.எல். முதலியாரை துணை வேந்தராகக் கொண்ட சென்னைப் பல்கலைக்கழகம் அதற்கு இசை வளிக்கவில்லை. ஆனால் ஜி.சி.ஐ.எம். படித்த வர்கள் உள்ளூர் மருத்துவம் மற்றும் மேலை மருத்துவம் ஆகிய இரண்டு முறைகளிலும் நோயாளி களுக்கு மருத்துவம் அளிக்க அரசு இசைவளித்தது. ஜி.சி.ஐ.எம் படிப்பு முடித்து வெளியேறியவர் களுக்கு, ஒரு வாய்ப்பாக கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் குறுகிய கால டி.எம்.எஸ் (D.M&S) படிப்பும் அதை முடித்தவர்களுக்கு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் குறுகிய கால எம்.பி.பி.எஸ். படிப்பும் படிக்க அரசு அனுமதி அளித்தது.

### சுதேசி மருத்துவம் கற்க ஆர்வமில்லை

ஆகவே உள்ளூர் மருத்துவம், மேலை மருத்துவம் ஆகிய இரு மருத்துவங்களிலும் ஆலோசனை வழங்க தொடங்கப்பட்ட மருத்துவப்படிப்பில் மேலை மருத்துவம் படித்தவர்கள் மருத்துவரானார்கள். இதன்படி நாட்டு மருத்துவமுறையுடன் மேலை மருத்துவத்தையும், இணைத்துப் படிக்கும் வாய்ப்பைத் தமிழ்நாடு இழந்தது. இது நீடித்திருந்தால், சுதேசி மருத்துவம் விஞ்ஞான அடிப்படையில் ஆய்வு களுடன் வளர உதவி இருக்கக்கூடும். தற்பொழுது சுதேசி மருத்துவமுறை சித்தா, யுனானி ஆயுர்வேதம் சென்னை அரும்பாக்கத்தில் 1970-இல் திறக்கப் பட்டு, சுதேசி மருத்துவம் மட்டுமே கற்பிக்கப் படுகிறது. ஆனால் பாளையங் கோட்டையில் சித்த மருத்துவக் கல்லூரி மட்டுமே நடைபெறுகிறது.

### சுதேசி மருத்துவக் கல்லூரி மூடப்பட்டது

1965-இல் கீழ்ப்பாக்கத்தில் இயங்கிய இந்திய மருத்துவக் கல்லூரி மூடப்பட்டு மகளிர் மேலை மருத்துவம் கற்பிக்கும் மருத்துவக் கல்லூரியாக மாறி அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி என்று பெயரிடப்பட்டது. 1967இல் கல்லூரி மாணவிகள் தங்களுக்குத் தனிக் கல்லூரி தேவை இல்லை. ஆண்களுடன் சேர்ந்து படிக்க விரும்புவதாகப் போராட்டம் நடத்தியதன் விளைவாக, 1967 இலேயே ஆண்களும் இக்கல்லூரியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்பட்டனர்.

1960-இல் மாணவர்கள் சுதேசி மருத்துவம் கற்க ஆர்வம் காட்டாததனால் இக்கல்லூரியில் ஜி.சி.ஐ.எம். 1-2 ஆம் ஆண்டு படித்த மாணவர்கள் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் படிப்பைத் தொடரவும் 3, 4, 5-ஆம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு டி.எம்.எஸ் படிக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

சுருங்கச் சொன்னால் சுதேசி மருத்துவராக ஆகவேண்டியவர்கள் சித்த அலோபதி மருத்துவத் துறையினராக மடை மாற்றமடைந்தனர்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் வளாகத்தில் இந்திய மருத்துவக் கல்லூரி நினைவுச் சின்னங்களாக டாக்டர் வைத்தியரத்தினம் கேப்டன் சீனிவாச மூர்த்தியின் மார்பளவு நினைவு உருவச் சிலையை திருமதி ருக்மணி லட்சுமிபதி 1947-இல் திறந்து வைத்தார். இக்கல்லூரியின் இடத்தை அன்பளிப்பாக அளித்த பனகல் அரசர் நினைவாக பனகல் ஹால் என்று அறிவுசார் கூட்டங்கள் நடத்தும் கூடம் உள்ளது. மேலும் இவ்வளாகத்தில் இன்றைய நிலையில் நூறு ஆண்டுகளைக் கடந்த ஆலமரமும் நிழல் தந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்திய மருத்துவக் கல்லூரிதான் இல்லை. ●

# நியூ செஞ்சுரி புக்ஹவுஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்




## நா.வானமாமலையின் மாணவர்கள் நடத்தும் தமிழின் மிகச் சிறந்த ஆய்விதழ் ‘புதிய ஆராய்ச்சி.’

ஆ.சிவசுப்பிரமணியன், தொ.பரமசிவன், வீ.அரசு,
ஜெயசீல ஸ்டீபன், ந.முத்துமோகன், சுந்தர் காளி, ந.அதியமான்,
வீ.செல்வகுமார், இரா.முரளி, ஜெ.பாலசுப்பிரமணியன், சாமிக்கண்ணு,
க.காமராசன், கெவின் பி.ஆண்டர்சன், பிரதீப் கோகலே, பா.பிரவீன்

ஆகியோரின் பங்களிப்புடன்

**புதிய ஆராய்ச்சி – இதழ் 7**

(ஜனவரி - ஜூன் 2017)

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**என்.சி.பி.எச். கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-4374106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.




# தமிழ்ஒளி நினைவில் சோவியத் அன்னை

## செ.து. சஞ்சீவி

**க**விஞர் தமிழ்ஒளி கம்யூனிஸ்ட் கட்சியில் காலூன்றும் முன்னரே சோவியத்தை நேசித்தவர். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த நாட்களில் பாரதிதாசன் இல்லத்தில் குவிந்து கிடந்த 'குடியரசு' ஏடுகள் 'குடியரசு பதிப்பக' வெளியீடுகள் ஆகியவற்றை மிகுந்த ஈடுபாட்டுடன் படித்தவர்.

பெரியார் ருஷ்யா சென்று திரும்பிய பின்னர் 'குடியரசு' ஏட்டில் எழுதிவந்த கட்டுரைகள் அறிஞர் சிங்காரவேலர், தோழர் ஜீவானந்தம் போன்றவர்களின் பொதுவுடைமை கொள்கைப் பிரச்சாரங்கள் அவருக்கு விருந்தாய் விளங்கின. மேலும் 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யின் சுருக்கப் பதிப்பையும் அங்கேதான் படித்தார்.

பொதுவுடைமைக் கொள்கை ருஷ்ய பூமியில் விளைந்து பயிராகி பெரும் பயன் நல்கியதை பல கட்டுரைகள் வாயிலாகத் தெரிந்து கொண்டார். 'ருஷ்யா' சோவியத் யூனியனாக மாறிய நிலையில் அங்கே தனியுடைமை முற்றாக ஒழிக்கப்பட்டதும் கூட்டுப்பண்ணை விவசாயம் செழித்ததும் தொழிற் சாலைகள் அனைத்தும் தொழிலாளர் கூட்டு நிறுவனமாக மாற்றப்பட்டதும், மக்கள் ஆண்-பெண் பேதமின்றி அனைவரும் சரிசமமாக சுதந்திர மாக வாழ்ந்து வருவதும், ஆண்டான்- அடிமை முறை பழங்கனவாக மாறியதையும் அறிந்து அவர் மகிழ்ச்சியுற்றார்.

தாம் வாழ்ந்து வரும் புதுவை மண்ணில், உழைக்கும் மக்கள் எப்படியெல்லாம் துன்புற்று வாழ்ந்து வருவதை அவர் உணர்வுபூர்வமாக எண்ணினார். அந்தக் காலகட்டத்தில் அவர் வாழ்ந்த பகுதியில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அவரை அதிரவைத்தது.

*சாதீய மேலாதிக்கம் பொருளாதார ஒடுக்கு முறை போன்ற தீமைகளே இதற்கு அடிப்படை என்பதும் அவருக்குத் தெளிவாயிற்று. அவற்றை அடிப்படையாக வைத்து ஒரு காவியம் படைக்கவும் முடிவு செய்தார். அதுவே 'நிலைபெற்ற சிலை' என்ற தலைப்பில் காவியமாக உருப்பெற்றது.*

*அந்தக் காவியத்தில், கதைத்தலைவன் மருத வாணன் மறுமலர்ச்சிக் கழக மேடையில் முழங்கும் எழுச்சி உரையைக் கேளுங்கள்:*

"சிலருக்கே செல்வமெலாம் சொந்தம்" என்றார்
சீறித்தான் கேட்டுவிடில் கெட்ட தென்பார்
மலரயனின் படைப்பினிலே பேதமுண்டு!
'மகராசன்' 'ஏழையெனும்' பிரிவும் உண்டு
'தலைவிதி' போல் நடந்திடும்நாம் முயன்றிட் டாலும்
தழைத்ததொரு செல்வத்தை அடைய மாட்டோம்!
பலகாலம் வறுமையினைப் பொறுத்திருந்தால்
பரமனருள் கிடைக்கும்" எனச் சொல்லுவார்கள்!"

"பலசாதி இருப்பதுவும் நன்றே' யென்பார்!
பழையமுறை மீறுவது பாவம்' என்பார்
நிலமீதில் தொழிலாளர் துன்பம் நீக்க
நியாயந்தான் கிடைத்திடுமோ? 'முன்பி றப்பில்
குலமுறைதான் மீறியதால் ஏழை வாழ்க்கைக்
கொண்டான் இப்பிறவியிலே என்பார் - இந்தக்
கதைசொல்வார் இதைக்கேட்டுந் தொழிலா ளர்க்குக்
கருத்தினிலே புரட்சியுமே எழுதல் உண்டோ?"

"குடிசையிலே வாழுவதும் கூழ்கு டித்துக்
கும்பிட்டுக் கிடப்பதுவும் விதியால் என்றால்
படியினிலே முன்னேற்றங் கொள்ளு தற்குப்
பாட்டாளி ஏழைகளும் எண்ணுவாரோ?
துடுக்குடையார் விதிசொல்வார் விரிவு சொல்வார்
சொல்கின்றேன் உமக்குநான் பிறப்பால் பேதம்
அடுக்காது பொருள்ஏற்றத் தாழ்வு கொள்ளல்
அநியாயம் ஆம்! இந்தப் புதுமை கேளீர்!"

'உருசியர்கள்' வாழ்நாட்டில் யாவ ருந்தான்
ஒன்றென்று கூறுகிறார் எல்லோ ருக்கும்
பெருகுதொழில் 'கட்டாயக் கல்வி' உண்டு
'பெருஞ்செல்வர், வறியர்' எனும் பேச்சே இல்லை
திருடர்தான் அங்குண்டா? பிச்சைக் காரர்
தேடினுமே அங்குண்டா? இல்லை - இல்லை!
உரைக்கின்றா ரேவிதியும் உயர்வு தாழ்வும்
ஒன்றவில்லை ஏனிவைகள் அந்த நாட்டில்?"

"மாதர்எலாம் உரிமையுடன் வாழ்வார் அங்கே
மாண்புடையீர் அந்நாளில் தமிழ்நாட் டின்கண்
தீதேதும் இன்றியுமே மாதர் வாழ்ந்தார்!
சிறிதேனும் அவர் அடிமை உறவே யில்லை
பாதியிலே இந்நிலைதான் வந்த திந்தப்
பாழ்நிலையை வீழ்த்திநாம் 'உருசியா' போல்
நீதிசெய் தேவாழ்வோம் நிமிர்ந்து நிற்பீர்!
நிகர் என்போம் யாவருமே இந்த நாட்டில்!"

"இன்றேஇக் கழகத்தில் சேர்வீர், தொண்டில்
இசைந்திடுவீர் தமிழர்இனம் தழைக்கச் செய்வீர்!
ஒன்றேஇந் நாட்டிலுள்ள தமிழ ரெல்லாம்
ஒன்பதுகோ டிப்பிரிவை ஒப்பிடாதீர்
புன்மைநிறைச் சமுதாயம் சீர்தி ருத்திப்
பொதுவுடைமை அமைத்தின்ப வாழ்வு கொள்வோம்!
வன்மைநிறை இளைஞர்கள் சேர்ந்து வாரீர்!
வணக்கம்; என்சிற்றுரையை முடிக்கிறேன் நான்".

*மேற்கண்ட கவிதை வரிகள், ருஷ்ய நாடு, சோவியத் நாடாக மாற்றங்கண்ட நிலையில் அங்கே உருவான பொதுவுடைமைக் கொள்கை வழி உருவான பொதுவுடைமைச் சமுதாயத்தை எடுத்துரைத்து, தமிழகத்திலும் அத்தகைய ஒரு மகத்தான மாற்றத்தை தோற்றுவிப்போம் வாருங்கள் என தமிழ் மக்களை அழைக்கிறார் தமிழ்ஒளி.*

*இந்தக் காவியம் 1945ல் எழுதப்பட்டது. தமிழ் ஒளி கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த பின்னர் 1947ல் தோழர் C. கோவிந்தன் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அட்டைப் படத்தில் சுத்தி அரிவாள் சின்னம் இடம் பெற்றது ஒரு புதுமை.*

*அடுத்து கவிஞர் தமிழ்ஒளி 1949-இல் 'முன்னணி' ஏட்டில் துணை ஆசிரியராகப் பணியாற்றியபோது 'நீண்டதூரப் பயணம்' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் சோவியத் பூமியில் கற்பனையாக உலாவந்து தாம் கண்ட காட்சிகளை கவிதையாய் வடித்துள்ளதைப் படியுங்கள்-*

*தலைப்பைப் போன்றே கவிதையும் நீண்டது தான், நூற்றிருபது வரிகளைக் கொண்டது. உள்ள மெனும் பறவை சோவியத் பூமியைச் சுற்றிவந்து அங்கு விளைந்துள்ள சமூகமாற்றங்களை விரிவாகக் கூறுகிறது. கவிஞர் வினா எழுப்புகிறார். மனப்பறவை கூறும் விடை கவிதையாக வடிவம் பெறுகிறது.*

"காலையிலே துயர்வந்து கதவைத் தட்டும்;
கார் இருளை எதிபார்த்து ஜீவன் ஏங்கும்
பாலைவனக் கொடுமையுண்டோ அங்கே? என்றேன்,
பரிகாசமாய்ச் சிரித்து நெஞ்சு சொல்லும்;"

"காலையெலாம் மதுவாக இனிக்கு மையா,
கவியெழுதத் தோணுமையா மகிழ்ச்சி யாலே
சோலைமலர்க் கூட்டம்போல் மக்கள் கூட்டம்
ஜோதிநிறக் குழந்தைகளாய்த் தோன்று மையா!"

"கடும்வெய்யில், வசந்தமெனக் குளிர்ச்சி வீசும்;
கவினார்ந்த கலைகளெலாம் வீடு வீடாய்க்
குடும்பங்கள் நடத்துகின்ற காட்சி கண்டேன்
குருவியைப்போல் ஊரூராய்ப் பறந்து சென்றேன்!"

"வயற்புறத்தே செல்லுங்கால் உழவன் என்போன்
வாகான தோளுடையான் நிமிர்ந்து நின்று
நயமான கவிபொழிந்தான்; பழைய நாளில்
நடந்திட்ட கொடுமைகளைப் பாட்டாய்ச் சொன்னான்."

“ஆளுக்குப் பாதியெனத் தானியத்தை
அள்ளிப் போய் நிலப்பிரபு வைத்துக் கொண்டு
வாளுக்குப் பலியிட்டான் என்றன் வாழ்வை!
வறுமையதன் நிழல்கூட இப்போதில்லை!”

“நிலமெலாம் என்னுடைமை: இல்லை, யில்லை!
நேயமிகும் என்நாட்டார் உடைமை; மக்கள்
குலமெல்லாம் வாழ்ந்திடவே நான் வாழ்கின்றேன்
குருவியே உன்னைப்போல் என்று சொன்னான்!”

“அவன்பட்ட கொடுமையெலாம் மடிந்து மக்கி
அங்குள்ள வயற்பக்கம் செத்து வீழ்ந்து
சவமாகிக் கிடந்ததனைக் கண்டேன்; வெற்றி
சரசநடை நடந்திட்டான் உழவன் அங்கே!”

*உழவன் மகிழ்ச்சியில் துள்ளுவதைக் கண்ட கவிஞர் உள்ளம் காற்றிலே பறந்தது. அடடா அந்தக் காற்றுக்கும் அடங்காத மகிழ்ச்சி வெள்ளம். சோற்றிற்கு வாடாத மனிதர் வாழும் சுதந்திர நன் நாடுலவும் காற்றேயன்றோ? நகருக்குள் நுழைந்தார்; ஆலைகளைக் கண்டார்; சகத்தோழர் தலைவர், புது மனிதர் ஆகித் தருமத்தைத் தொழிலாளர் உடையாய் நெய்தார்.*

“விழிகளிலே புரட்சியொளி; சமுதாயத்தை
வீழ்த்துதற்குச் சதி செய்யும் சழக்கர் தம்மைக்
குழிதோண்டிப் புதைத்தற்குத் திரண்ட தோளில்
குவலயத்துப் பெருமையெலாம் கண்டு கொண்டேன்!”

“காதல், கலை, அறம்வளரும் தியாக பூமி
கவிபொழியும் மழைபொழியும் போக பூமி
சாதல்இல்லை; அதுவந்தால் கவலையில்லை
தனிமனிதன், மனிதகுலத் தாயாய் விட்டான்!”

சொல்லிவிட்டேன் சுருக்கத்தை” என்று சொல்லித்
துணையாக மீண்டுமெனைத் தொட்ட நெஞ்சாம்
மெல்லியளை மார்போடும் அணைத்துக் கொண்டேன்
மேதினியில் தலையாய இன்பம் பெற்றேன்!”

*சோவியத் பூமியில் கவிஞரின் மனப்பறவை வலம் வந்து பாடிய கவிதையிது. தொடர்ந்து 1959 ஜனவரியில், ‘ஜனசக்தி’ ஏட்டில் வெளி வந்த கவிதையை நினைவு கூர்வோம்*

“நிலவைப் பிடித்து விட்டார் - அதன்
நெற்றியில் வெற்றிக் கொடியை நட்டார்!
உலகே விழித்தெழுவாய் - திறன்
உன்கையில் இருக்கையில் ஏன் அழுவாய்!”

“எட்ட இருந்துகொண்டே - புவி
எட்டி எட்டிப் பார்த்த வெண்மதியைத்
தொட்டது செங்கொடியே - ஆ!
தூரம் எலாம்இனி பொடிப் பொடியே!”

“நேற்றுப் பிறந்ததடா- எனில்
நீதியின் ஆற்றல் சிறந்ததடா?
போற்றும் பொதுவுடைமை - அவை
பொங்கிக் கிளர்ந்தது சோவியத்தில்!”

*மேலும், மலை பிளந்தும், கடல் அலை பிளந்தும் பல பல அற்புதங்களை நிகழ்த்தினர். அதே வேகத்தில் பாலை நிலத்தை பக்குவப்படுத்தி சோலை வனமாக்கியதும் எண்ணெய் வயல் பெருக்கி ஏழ்மையைப் போக்கியதும், வளரும் பொதுவுடைமைக் கொள்கை பலத்தால் இவ்வுலகை புதுவுலகாய் மாற்றி கீர்த்தி படைத்தனர். அவர்களே இன்று ‘ஸ்புட்னிக்’ என்ற விண்கலத்தை கண்டறிந்து (இது விஞ்ஞான வளர்ச்சியில் ஒரு மைல்கள்) அதன்வழி விண்ணில் தவழும் நிலாவில் செங்கொடியை ஏற்றிவைத்து விந்தை படைத்துள்ளனர். அதனால்*

“மண்ணவர் கைகளிலே - ஒரு
மாய விளக்கென மாற்றமுறப்
பண்ணினர் உருசியரே - இப்
பாரில் அவர்க்கினி யார்நிகரே!”

*எனப் பெருமித உணர்வுடன் செம்பதாகையை உயர்த்திப் பிடிக்கிறார் கவிஞர்.*



*தமிழ்ஒளியின் உயர் தனிச் சிறப்புடன் விளங்கும் கவிதைகளில் ஒன்றாய்த் திகழ்வது “நவம்பர் புரட்சிக்கு நல்வாழ்த்துக்கள்!”*

*இனி கவிதையைப் படியுங்கள்:*

"நோயெனும் தனியுடைமை நுகத்தடி அது முறியப்
பேயெனும் ஜார்அரசன் பெருந்துயர் போய் ஒழியத்
தீயெனும் சுடருடனே திசைகளின் இடர்கெடவே
தாயெனும் பொதுவுடைமை ஜனித்தது நவம்பரிலே!"

"பண்டைய ஞானியரின் பண்புறு கனவுகளைக்
கொண்டொரு கொடியுடனே கொடுமைகள் இடிபடவே
மிண்டிய பொதுவுடைமை மேற்றிசை கீழ்த்திசையில்
மண்டிய உருசியர்தம் மண்மிசை பூத்ததடா!"

**(வேறு)**

"அன்று தொட்டிருள் வீழ்ந்து விட்டதும்
அகில நங்கைதன் துன்பம் கெட்டதும்
தொன்று தொட்டுறை நோய்கள் பட்டதும்
தோன்று செங்கொடி எங்கும் நட்டதும்"

"இன்று திங்களைச் சென்று தொட்டதும்,
இசைபெறும் இலெனின் கண்ணனச் சுடர்
நின்றெறிந் திடும் நீள் விளக்கமாம்
நிகர்அரும் பொது வுடைமை ஆற்றலால்!"

**(வேறு)**

"எதுவுடைமை? எதுவுலகம்? என்று காணா
ஏழைகளும் அவர் இனத்தின் எளியோர் தாமும்
பொதுவுடைமை வந்தவுடன் அண்ட கோளப்
புதல்வர்களாய் அமரர்களாய் பொலிந்து தோன்ற"

'அதுவுடைமை', 'அறிவுடைமை' சோவியத்தின்
'அன்புடைமை' எனக்கொண்டார் அஃதே யன்றிப்
'புதுவுடைமை விஞ்ஞானம்' என நவம்பர்
புரட்சித்தாய் கூறினாள் புவியோர்க் கெல்லாம்!"

"தொடைபுணர இன்பத்தேன் துளிகள் சிந்தத்
'தொல்லுலகின் சுடரொளியே! வாழ்க!' என்ற
நடைபுணர நாளெல்லாம் புரட்சித் தாயே!
நவம்பர் நாள் வந்தவளே! நல்வாழ்த் துக்கள்!"

*1960 மே திங்கள் முதல் நாளில் ஒரு சோதனை நிகழ்ந்தது. பாகிஸ்தான் பெஷாவர் விமானத் தளத்தில் இருந்து ஏவப்பட்ட அமெரிக்காவின் ராக்கெட்- யூ2 விமானம் வேவு பார்க்க சோவியத் பூமியைத் தொட்டதும் சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்நிகழ்வு குறித்து ஏடுகளில் செய்தி வந்ததைக் கண்டு கவிஞர் உள்ளம் கொதித்தது; கவிதை பிறந்தது படியுங்கள்.*

"நிலம், இன்பம், நித்திய அமைதி நீடும் வான்வெளியில்,
கோலம், புகழ்மை, நட்பாம் விண்மீன் கூடும்
வான் வெளியில்,
சீலம் இழந்தே போர்வெறி கொண்டு சென்ற
விமானம் நீ
காலம் வெறுக்க வீழ்ந்தாய்!
மாந்தர் கண்டு நகைத்திடவே!"

"வாழ்வோ அன்பால்' என்றே
மின்னல் வரையும் வான்வெளியில்
'சூழ்வோம் நட்பால்' என்றே
விண்மீன் சுடரும் வான்வெளியில்
பாழ்வாய் கொண்டே சென்றாய்!
ஏற்றிப் பறக்கும் விமானம் நீ
வீழ்ந்தாய் வீரர் காலில் நீயே!
வேறென செய்வாயே?"
போரே உன்றன் விருப்பம்
ஆயின் போவாய் நரகிற்கே!
நேரே இன்று கண்டாய் அன்றோ
நேர்மை வீரர்தமை?
வேரே சாய்ந்து வீழ்தல் உண்மை!
வெறியர் சூதெல்லாம்
யாரே வெல்வார் சோவியத் மண்ணை?
அஃதோர் விண்ணன்றோ?"

*இறுதியாக, இந்திய சோவியத் நட்புறவு குறித்து கவிஞர் படைத்த கவிதை 'சோவியத் அன்னை' என்ற தலைப்பில் 'சோவியத் நாடு' இதழில் வெளி வந்துள்ளது. கவிஞர் உள்ளத்தில் சோவியத் பூமி எந்த அளவுக்கு ஆழமாகப் பதிவாகியுள்ளது என்பதற்கு சான்றாகும் இக்கவிதை. இத்தகைய பேருள்ளம் படைத்த கவிஞர் தமிழ்ஒளி சோவியத் பூமியைக் காணும் வாய்ப்பைப் பெறவில்லை. தமிழ் ஒளியின் 'சோவியத் அன்னை' கவிதை எப்போதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். இது உறுதி! கவிதையில் தமிழ்ஒளி குரலைக் கேட்கலாம்.*

"சுமந்து பெறாமல்என் இதயந் தனிற்பால்
சுரந்தவள் சோவியத் அன்னை!
அமைந்தான் வாழ்க்கையில்
உணர்ச்சிப் பெரும்பொருள்
ஆக இலங்கிய அன்னை!
எந்நிற மாயினும் தந்நிற மாகவே
ஏற்றுக்கொள் கின்றதோர் உள்ளம்!
ஏழையின் இன்னலை வேருடன் வீழ்த்தவே
எழுந்த பெருங்கடல் வெள்ளம்!
செந்நிற மாகிப் பறக்கின்ற கொடியைச்
சேர்த்தொரு வையகம் செய்தாள்!
செல்வ மெலாம்பொது வுடைமையொன்றாக்கிய
தெய்விக வாழ்வினைப் பெய்தான்!
மேற்குக் கிழக்கெனும் கைகள் இணைத்தவள்
மேதினி மேற்புகழ் பெற்றாள்!
மேவிய தெற்கும் வடக்கும்தன் கண்ணொளி
மின்னிடப் புன்னகை யுற்றாள்!
நாற்றிசை யும்அவள் நல்லருள் பாய்ந்திடும்
நற்சுட ராகியே சூழ்வோம்!
நாடுகள் யாவும்நல் வீடுகளாகிடும்
நாமவள் மக்களாய் வாழ்வோம்!"



# போர்க்களத்தில் தோன்றுவன்

ஆ.கார்த்திகேயன்

"தலைவன் வீட்டு முற்றத்தில் நிற்கிறான். அவன் போர்க்களத்தில் திரிவதனைக் காணமுடியாது"[1] என்ற பொருள்பட அமைந்த இருவரிப் பாடலை அண்மையில் படிக்க நேர்ந்தது. அந்த இருவரிப் பாடல் ஏமச்சந்திரர் எழுதிய அபபிரம்சா இலக்கண நூலில் இடம் பெற்றுள்ளது. அபபிரம்சா மொழி தற்கால வடஇந்தியா அல்லது இந்தோ-ஆரிய மொழிகளுக்குத் தாய். பிராகிருத மொழி வம்சாவளியைச் சார்ந்தது. இப்பாடலை ஏமச்சந்திரர் எழுதவில்லை. ஏற்கனவே வழக்கிலிருந்த பாடலைத் தம் இலக்கண சூத்திரத்திற்கு மேற்கோளாகத் தந்துள்ளார். ஒரு தலைவியின் கூற்றாக

இப்பாடல் அமைந்துள்ளது. தலைவன் எப்போதும் போர்க்களத்தில்தான் தோன்றுவான். ஆனால் இன்று வீட்டு முற்றத்தில் நிற்கிறான் என்பது இப்பாடலின் வெளிப்படையான பொருள். தலைவியின் தாயோ அல்லது தோழியோ தலைவியிடம் உன் தலைவன் (நாதன்) எங்கே? என்று கேட்பதாகவும் அதற்குத் தலைவி பதில் சொல்வதாகவும் இப்பாடலுக்குச் சூழலை எளிதாகக் கற்பனை செய்து கொள்ளலாம். கேட்டவள் யார்? அவள் எங்கே நின்றுகொண்டு கேட்டாள்? என்பன போன்ற வினாக்களுக்கு இப்பாடலில் பதில் இல்லை. தலைவனுக்கும் தலைவிக்குமான உறவு எத்தன்மைத்து என்ற கேள்விக்கும் பாடலில் விடையில்லை. அவனைப் போர்க்களத்தில் மட்டும்தான் பொதுவாகக் காண முடியும். இன்று வீட்டின் முற்றத்தில் நிற்கிறான் என்று கூறுவதாக மட்டுமே பொருள் அமைந்துள்ளது. எப்பொழுதும் போரில் ஈடுபடும் வீரப்பண்பு இதன்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

இப்பாடலோடு ஒப்பிட்டுக் கருதத்தக்க ஒரு பாடல் புறநானூற்றில் காணப்படுகின்றது. ஆனால் புறநானூற்றுப் பாடலின் கருத்து சற்றுத் தலைகீழாக மாறி வந்துள்ளது. 'என் மகன் வீட்டின்முன் இல்லை. எங்கிருக்கிறானோ? யான் அறியேன். போர்க்களத்தில் தோன்றுவான்' என்ற பொருள்பட அப்பாடல் அமைந்துள்ளது. அது தாயின் கூற்றாக வந்துள்ளது. காவற் பெண்டு என்ற புலவர் எழுதியிருக்கிறார். பாடல் பொருள் பின்வருமாறு

"சிறிய குடிசையின்கண் உள்ள அழகிய தூணைப் பிடித்துக் கொண்டு உன் மகன் எங்கே என்று கேட்பீராயின் என் மகன் எங்கே இருக்கிறான் என்பதை யான் அறியேன். புலி தங்கி வெளியே புறப்பட்டுப்போன கற்குகை போல அவனைப் பெற்ற வயிறு இதோ இருக்கிறது. அவன் போர்க்களத்தின்கண்ணே திரிவான். (அவனைக் காணவேண்டுமாயின் அங்கே சென்று காண்க.)

**சிற்றில் நற்றூண்பற்றி நின்மகன்**
**யாண்டுளனோ என வினவுதி யென்மகன்**
**யாண்டுளனாயினும் அறியேன் ஓரும்**
**புலிசேர்ந்து போகிற கல்லளை போல**
**ஈன்ற வயிறோ விதுவோ**
**தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே** (புறம். 86)

'நின்மகன் யாண்டுளன்' என்று வினா தொடுப்பது போலவும், 'என்மகன் யாண்டுள னாயினும் அறியேன்' என்று தாய் பதில் அளிப்பது போலவும் பாடல் அமைக்கப்பட்டுள்ளது. கேள்வி கேட்கிற பெண் சிறிய குடிசையின் தூணைப் பற்றியவாறு கேட்பதும், தாய் குடிசையின் உள்ளே இருந்து பதில் கூறுவதும் பாடலில் இடம்பெறுகின்றது. உரையாடலும், உரையாடல் நிகழ்ந்த இடமும் தெளிவாக இடம்பெறுகிறது. இதற்கு மேலும் ஒருபடி மேலே போய் தாய் தான் பெற்றெடுத்த வயிற்றை நினைத்துக் கொள்கிறாள். கற்குகையில் தங்கி வெளியே புறப்பட்டுப் போன புலியைப் போல என் வயிற்றிலே தங்கியிருந்து வெளியே போனான். அவ்வயிறு இதோ இருக்கிறது. அவன் போர்க்களத்தில் தோன்றுவான் என்று தாய் கூறுகிறாள்.

தன் மகனால் பெருமைப்பட நேர்ந்தபோதும் அன்றிச் சிறுமைப்பட நேர்ந்தபோதும் தான் பெற்ற வயிற்றை நினைத்துக் கொள்வாள் தாய். பத்து மாதம் சுமந்து இன்னல்கள் பல தாங்கி ஈன்றெடுத்த தன் மகனுக்கும் தமக்குமான உறவு காலப்போக்கில் மறந்து விடக்கூடியதன்று. சாகும் வரையில் நினைந்து நினைந்து தொடர்ந்து வருவது அந்நினைவு. பெத்த வயிறு பற்றிக் கொண்டு எரிகிறது என்பது ஊர்ப்புறங்களில் காணப் படும் வழக்காறு. தான் பிறந்த குடும்பத்தின் நற் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் ஒரு பிள்ளையை நோக்கிப் பெத்த வயிறு பத்திக் கொண்டு எரிகிறது என்று ஒரு தாய் ஏசலாம். பெருமைமிக்க மகனால் தாயின் வயிற்றுக்கும் பெருமை ஏற்படுகிறது. இராமன் பிறந்ததால் கோசலையின் வயிறு புகழ்பெற்றது என்று கம்பர் கூறுவார். ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் என்று வள்ளுவர் கூறுவதையும் கவனிக்கலாம். போர்க் களத்தையே விரும்பி ஏற்றுக்கொண்ட தன் மகனை நினைந்து அவனைப் பெற்றெடுத்த வயிற்றையும் எண்ணி மகிழ்ச்சி அடைகிறாள்.

புறநானூற்றுப் பாடல் வாகைத் திணையில் அடங்கும். எத்தொழிலைச் செய்வோரும் தத்தம் தொழிலில் மிகுந்த ஈடுபாட்டுடன் வெற்றிபெறும் வகையில் செய்வதே வாகையாகும். உயிரைத் துச்சமென மதித்துப் புகழைப் பெறுவதற்குப் போரில் ஈடுபடுதல் வாகைத் திணையின் ஒரு துறையாகும். வாகைத் திணையும், ஏறாண் முல்லையும் புறநானூற்றுக்கும் அபபிரம்சா பாடலுக்கும் பொருந்துவதாகவே உள்ளது.

புறநானூற்றுப் பாடல் கவிதையாக்கத்தில் சிறப்பு பெறுகின்றது. வினா தொடுப்பது போலவும் அதற்குத் தாய் பதிலிறுப்பதைப் போலவும் உரையாடல் இடம் பெற்று கவிதை சிறப்படைகிறது. புலிசேர்ந்து போகிய கல்லளை என்ற உவமை கவிதைக்கு மேலும் மெரு கூட்டுகின்றது. இந்த அமைப்பை அபபிரம்சா பாடலில் காணமுடியவில்லை. அது ஒரு எளிமையான இருவரிப் பாடல். உரிப்பொருள் மட்டும் இடம்பெற்ற பாடல். மற்ற புனைவுகள் இதில் காணப்படவில்லை. இவ்விரு பாடல்களையும் நோக்கும்போது சங்க காலப் பாடல்கள் அதற்கு முந்திய எளியவகைப் பாடல்களிலிருந்து தோற்றம் பெற்றிருக்கக்கூடும் என்ற ஐயம் இயற்கை யாகத் தோன்றுகிறது. அத்தகைய மூலப் பாடல்களை எவ்வாறு கண்டடைவது?

1. "As my lover stands in the courtyard, he does not wander on the battlefield" (Translation Dr.Vaidya).



# கூட்டாட்சித் தத்துவத்தின் மதிப்பறியாத மோடி அரசாங்கம்

மலையாள மூலம் :
பிணராய் விஜயன்

தமிழில் : பா.ஆனந்தகுமார்

வகுப்புவாத மோதல்களை உருவாக்குதல், பகைமை - வெறுப்புப் பரப்புரைகள் ஆகியவற்றின் வாயிலாக, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதுதான் பி.ஜே.பி.யின் தந்திரமாக உள்ளது. இது ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டமாகும். இதனுடைய ஒரு பகுதியாகத்தான் மாட்டிறைச்சி விலக்கம் தொடர்பாக இப்போது அவர்கள் நடத்துகின்ற செயல்பாடுகள். மாடுகளை வெட்டுவதன்மீது ஏற்படுத்திய தடை, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானதாகும். இவ்வகையான வரம்புமீறலை அனுமதிக்கக்கூடாது.

கூட்டாட்சித் தத்துவங்களுக்கு எதிரானது என்பதைப்போலவே, ஜனநாயக நடைமுறைக்கும் இது எதிரானது. மதச்சார்பின்மைக்கு எதிரான இந்தப் போக்கினை ஒன்றுபட்டு நாம் எதிர்க்கவில்லை யென்றால், இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து அரங்கேறும். கேரளத்தின் வேலைவாய்ப்பினையும் வணிகத்துறையினையும் பால் உற்பத்தியையும் புதிய சட்டம் கடுமையானரீதியில் எதிர்மறையாகப் பாதிக்கும்.

இந்திய அரசியல் சாசனத்தின் 19ஆம் பிரிவின்படி, தொழில் செய்து வாழ்வதென்பது குடிமகனின் தலையாய மனிதஉரிமையாகும். அது இங்கே மீறப்பட்டிருக்கின்றது. ஓராண்டில் கேரளத்திற்குப் 15 இலட்சம் மாடு, கன்றுகள் வருகின்றன. ஓராண்டிற்கு 6552 கோடி ரூபாய் விலை மதிப்புள்ள 2½ இலட்சம் டன் மாட்டிறைச்சி கேரள மாநிலத்தில் விற்பனையாகின்றது. கேரளத்தில் மனிதனின் சராசரி ஆயுள் கூடியது, இங்குள்ள உணவுமுறையின் தனித்தன்மையாலாகும். இத்தகைய உணவுமுறையை மாற்ற முயற்சி செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விஷயத்தில் மாநில அரசாங்கம் விட்டுக் கொடுக்காத நிலைப்பாட்டை எடுக்கும். இப்போதுள்ள நிலைமை தொடர்வதற்கு மாநில அரசாங்கம் எல்லா வசதிகளையும் செய்துகொடுப்பதோடுகூட, நாடு முழுவதும் இது தொடர்பாக எழுந்துள்ள எதிர்ப்புகளுக்கு ஒரே வடிவம் கொடுக்கவும் தவறான போக்கினைத் திருத்திக்கொள்வதற்கான முன்கையெடுப்பையும் கேரளத்திலுள்ள இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசாங்கம் தனது தரப்பிலிருந்து உண்டாக்கும்.

கேரள மக்களில் கணிசமான தொகையினர் மாட்டிறைச்சி உண்பவர்கள். 5 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப்படிப்பட்ட ஒரு மாநிலத்தில் மத்தியஅரசின் தவறான நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவைப் பற்றியும் அகண்ட பாரதத்தைப் பற்றியும் இடையிடையே பேசக்கூடிய ஆர்.எஸ்.எஸ்., இந்திய தேசத்து மக்களை உணவின் பெயரில் பிரித்துவைக்க முயற்சி செய்கின்ற ஏற்பாடுதான் இது என்பது இந்த வட்டாரத்திலுள்ள பி.ஜே.பி.யின் பழிவாங்கும் நடவடிக்கையிலிருந்து தெரியவருகின்றது. தேசத்தின் பொதுநலத்துக்கு எதிரான நிலைப்பாட்டை மத்தியஅரசு கைக்கொண்டுள்ளது. மதச்சார்பின்மை, ஜனநாயகம், கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றின்மீது எங்களுக்கு அக்கறையில்லை என்ற நிலையில்தான் அவர்களுடைய போக்கு இருக்கின்றது. மத்தியஅரசின் இந்த அறிவிப்பு, தேசத்தில் ஆர்.எஸ்.எஸ்.இன் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியின் ஒரு பகுதிதான் என்பது, மறைத்துவைக்க முடியாத பொருளாகிவிட்டது. பசுவதையின் பெயரில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலேயே ஹிந்து மகாசபை ஆரம்பித்த விரோதச் செயல்களை ஏற்று நடத்திய சங்கம்தான் ஆர்.எஸ்.எஸ்.

பல்வேறு மதங்களும் பல்வேறு பண்பாடுகளுமுள்ள தேசம்தான் இந்தியா. பன்முகத்தன்மைதான் இந்திய ஒருமைப்பாட்டின் தனித்தன்மை. இந்திய ஜனநாயகத்தின் அடிப்படையும் அதுதான். இதனைத் தகர்க்கின்ற நடவடிக்கைகள்தான் மத்திய அரசாங்கத்திடமிருந்து உருவாகின்றன என்பது மிகவும் தீவிரமான சூழ்நிலையாகும். இறைச்சியை உண்பவர்கள் ஏதேனுமொரு தனிப்பட்ட மதப்பிரிவைச் சார்ந்தவர்கள் அல்லர். வரலாற்றுக் காலந்தொட்டே மனிதர்கள் மாமிச உணவை உண்டு வந்திருக்கின்றனர். அவற்றையெல்லாம் புறக்கணிப்பதும் மாட்டிறைச்சி உண்பதை அனுமதிக்கக் கூடாது என்று வற்புறுத்துவதன் வழி, மக்களுடைய உணவு உண்பதற்கான உரிமையின்மீது மட்டுமல்ல; நாட்டினுடைய வரலாற்றின்மீதுகூட, நரேந்திர மோடியின் அரசாங்கம் கைவைத்திருக்கின்றது. இத்தகைய அநாகரீகமான நடவடிக்கைகளுக்கு எதிராகத் தேசம் முழுவதும் மக்களின் கோபம் உயர்ந்தெழ வேண்டும் என்பது இந்தியாவையும் இங்குள்ள ஜனநாயகத்தையும் மதிக்கின்ற எல்லாருடைய கடமையுமாகும். அதை நினைவூட்டுவதற்கும் தடைக்கு எதிராக வேண்டுகோள் விடுப்பதற்கும் பிற மாநில முதலமைச்சர்களுக்குக் கேரளம் கடிதம் அனுப்பியது.

மாடு கன்றுகளைக் கொல்வதைத் தடைசெய்தும் இறைச்சி விற்பனையை கட்டுப்படுத்தியும் அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பாக, மாநில அரசுகளின் கருத்துகளைக் கேட்கவும், அதனைக் கருத்திற்கொள்ளவும் மத்திய அரசாங்கம் தயாராக இருந்திருக்கவேண்டும். கூட்டாட்சி முறையில் இத்தகைய விஷயங்களில் மாநில அரசாங்கங்களின் நம்பிக்கையைப் பெறவேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும்.

நேற்றுவரை, பசுவினைக் கொல்வதன் பெயரில் தான், ஸங் பரிவார் அமைப்பு அக்கிரமங்களையும் கலகங்களையும் அழிச்சாட்டியங்களையும் அவிழ்த்து விட்டதென்றால், இன்று இதிலிருந்து விடுபட்ட காளை, எருமை, ஒட்டகம் முதலான விலங்குகளுக்கும் பாதகமாக்கும் வகையில் புதிய செயல்பாடுகள் அரங்கேறி வருகின்றன என்பதும் கவனத்திற்குரியது. நாட்டில், கோடிக்கணக்கான மக்கள் உணவுத்தேவைக்காக இவ்வகை விலங்குகளைக் கொல்வதுண்டு. ஏழைகள் மற்றும் சாதாரண மக்களுடைய முக்கிய சத்துணவு இறைச்சிதான். இதன் காரணமாகத்தான் இது ஏழைகளுக்கு எதிரான அத்துமீறலாகிறது. மணிக்கு இருவர் என்ற விகிதத்தில் இந்திய நாட்டில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர். விவசாயத்தொழில் நசிந்துபோனதால்தான் இப்படி நடக்கின்றது. இந்த நிலைமை இன்னும் மோசமாகப்போகிறது. விவசாயத் தொழிலுக்கும் பயன்படுத்தமுடியாத மாடுகளைப் பேணும்படி நிர்ப்பந்திப்பதனால் மாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தில் 40 விழுக்காட்டினை விவசாயிகள் இழப்பதுடன், சாகின்ற வரையில் அவற்றைப் பேணவேண்டிய பெரும் செலவு அவர்கள் முதுகில் விழவும் செய்கின்றது. மாட்டுச்சந்தைகள் செயல்படுவது விவசாயிகள் விற்பதற்கும் சாதாரண வியாபாரிகள் வாங்குவதற்குமான இடம் என்ற நிலையில்தான். அவற்றை இல்லாமல் செய்து

அதற்குப்பதிலாகப் பெரும்பண்ணை முதலாளிகளுக்கும் மொத்த இறைச்சி வணிகர்களுக்கும் வசதி செய்து கொடுப்பதுதான் புதிய செயல்பாடு என்பது தீவிரமான பிரச்சினையாகும்.



பிணராய் விஜயன்

இன்று மாடு கன்றுகளுக்குத் தடையென்றால், நாளை மீன் உண்பதற்கும் தடை கொண்டு வரலாம். மாட்டிறைச்சி விலங்கின் மூலம் இலட்சக்கணக்கான ஆட்கள் வேலையில்லாது போவார்கள். தோல் தொழிலுக்கான மூலப்பொருட்கள் கிடைக்காமல் போகும். ஏழைகள் முழுக்கப் பாதிக்கப்படுவார். இது எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் அமைதியான வாழ்க்கை தகர்க்கப்படும். மாடுகன்றுகளைக் கொண்டு போவோருக்கு எதிராக ஸங் பரிவார் அமைப்பினர் கேரளம் உட்பட வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். அதைத் தடைசெய்வதற்குப் பதிலாக மாடு கன்றுகளைக் கொல்வதை விலக்கியதிலிருந்து மத்திய அரசின் கட்டுப்பாடு ஆர்.எஸ்.எஸ்.இன் கையில்தான் உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. ஆட்டுக்கறி உண்ட முகம்மது அக்லாக்கினை பசுவதை செய்தவனாக்கி அடித்துக் கொன்ற அரசியலுக்குத்தான் இவர்கள் அரசு முறைப்படுத்தப்பட்ட பரிவட்டம் கட்டுகிறார்கள்.

1960இல் இயற்றப்பட்ட மிருகவதைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகள் விசித்திர மானவை என்பது ஒற்றைப் பார்வையிலேயே புலனாகும். இந்த விதிகளின் பின்னால் மாநிலங்களுடைய சட்டம் இயற்றும் முறையின் அதிகாரங்களைக் கவர்ந்தெடுத்தல் என்கிற ஆசைவெறிதான் இருக்கிறது. இந்திய அரசியல் சாசனம் 19 (1) (பி) பிரிவின்படி தொழில் செய்யக்கூடிய மனிதவுரிமை மீறப்படுவதன் மூலம் வலிந்து திணிக்கப் பட்ட இக்கட்டுப்பாடுகள் அரசியல் சாசனரீதியாக நிலைத்து நிற்கமுடியாது என்பதுதான் இதனுடைய சட்ட அம்சம். உணவைத் தேர்ந்தெடுக்கக்கூடிய தனிமனிதனின் அடிப்படைச் சுதந்திரத்தையும் இது மீறுகின்றது. மாநிலங்களுடைய சமூக - பொருளாதார - பண்பாட்டு நிலைமைகளுக்கு ஏற்ற சட்ட உருவாக்கம் செய்ததைத் தான் அனுமதிக்க வேண்டும். நலம் பயக்கும் நம்முடைய உணவுமுறையை மாற்ற முயற்சிக்கும் எந்த ஒரு சக்தியையும் அனுமதிக்க முடியாது. நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை டெல்லியிலிருந்தோ, நாக்பூரிலிருந்தோ சொல்லித் தெரிந்துகொள்ள அவசியமில்லை.

1960இல் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் தான் இந்த ஆண்டு மே 21ஆம் நாள் மத்திய அரசாங்கம் அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றது. மாட்டுச்சந்தை யினுடைய செயல்பாட்டைக் கட்டுப்படுத்துதல் என்பதுதான் இச்சட்டவிதிகளின் முதன்மை நோக்கமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், பயன்பாட்டில் மாடு கன்றுகளை வெட்டுவதைத் தடைசெய்கின்ற அம்சங்கள் தான் சட்டவிதிகளில் உள்ளடங்கியிருக்கின்றன. இது தொடர்பாக எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கும் இன்று வரை ஸங் பரிவார் பதில் சொல்லவில்லை.

மிருகவதைத் தடுப்புச் சட்டத்தைப் பின்பற்றி மாட்டுச்சந்தைகளைக் கட்டுப்படுத்துகின்ற சட்ட விதிகளை இயற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை. ஒரு சட்டத்தின் கீழ் விதிகளை உருவாக்கும்போது முக்கியமான மூன்று நடைமுறை களைப் பின்பற்ற வேண்டும். 1) விதிகள் சட்டத்தின் செயல்நோக்கக் குறிக்கோள்களை அடைவதாக இருக்க வேண்டும். 2) சட்டத்தின் அதிகார ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றி சட்டத்தின் எல்லைக்குள் இருந்துகொண்டு மட்டுமே விதிகளை உருவாக்க வேண்டும். 3) அதுமட்டுமல்லாமல் எல்லா சட்டங்களையும் ஒன்றுபோல பாவிக்கக்கூடியது தான் அரசியல் சாசனம். இதில் சொல்லப்பட்டுள்ள மனித உரிமைகளை மீறக்கூடிய சட்டங்களுக்கு நியாயப் படுத்துதல் இல்லை என்பதுதான் அடிப்படைத் தத்துவம். இம்மூன்று தத்துவங்களின் வாயிலாக பிரகடனப்படுத்தப்பட்ட உரிமை மீறல்களை மத்திய அரசு வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பில் காணமுடியும்.

மாடு கன்றுகளை வெட்டுதல் என்ற விஷயம் பாராளுமன்ற சட்ட அதிகாரத்திற்கு உட்பட்டதல்ல. அரசியல் சாசனத்தின் ஏழாம் அட்டவணையில் மாநிலப்பட்டியலில் (பட்டியல்-2) பதினைந்தாம்

பிரிவில் மாடு கன்றுகளின் பாதுகாப்பும் நோய்கள் தடுப்பும் உட்படுத்தப்பட்டிருக்கிறது. சில மாநிலங்கள் பசுவதையைத் தடைசெய்து சட்டம் ஏற்படுத்தி யிருந்தாலும் பல மாநிலங்களிலும் பசுவதை தடை செய்யப்பட்ட ஒன்றல்ல.

பாராளுமன்றத்தின் சட்ட அதிகாரத்திற்கு உட்படாத மாநிலங்களின் சட்டசபைகளுக்கு அரசியல் சாசனம் அதிகாரம் கொடுத்துள்ள விஷயத்தில் மத்திய அரசாங்கத்தின் சட்டங்களின் கீழுள்ள விதிகளின் வழி அத்துமீறக்கூடிய முயற்சிதான் புதிய அறிவிப்பின் வாயிலாக நடத்தியிருக்கிறார்கள். அரசியல் சாசன நடைமுறைகளை மீறி மிருகவதைத் தடுப்புச் சட்டத்தின் மரபில் குடிமகனின் தொழில், வியாபார சுதந்திரத் திற்கான மனிதவுரிமையை அழித்தொழிப்பதுதான் இங்கு செய்யப்பட்டுள்ளது.

மனிதன் உணவிற்காக விலங்குகளைக் கொல்வது மிருகவதைத் தடுப்புச் சட்டத்திலுள்ள 11(3) (E)-பிரிவின்படி அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். அவ்வாறு செய்யும்போது, விலங்குகளுக்குத் தேவையில்லாத வேதனைகளோ, துன்பங்களோ ஏற்படுத்தக்கூடாது என்பதுதான் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்துவதற்கு 2001 ஆம் ஆண்டில் விதிகளை உருவாக்கியிருக்கின்றனர். அதனால், இப்போதைய சட்டவிதிகளுக்கு இவற்றோடு எந்த வொரு தொடர்புமில்லை.

மனிதன் நீங்கலாக எல்லா உயிரினங்களையும் உட்கொள்ளுகின்ற விரிந்த பார்வையும் அதனை யொட்டியுள்ள வரையறுப்பும் சட்டத்தில் (2) (எ) பிரிவில் 'விலங்கு' (Animal) என்ற வார்த்தைக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஏதோ சில விலங்குகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை வெட்டுவதற்காக விற்கக் கூடாது என்று சட்டவிதிகள் வழியாக நிர்ப்பந்திப்பது சட்டத்தின் செயல் நோக்கங்களுக்கு எதிரானது.

சட்டத்திற்கு விரோதமான ஏராளமான நடைமுறை களைப் புதிய அறிவிப்பில் உட்படுத்தியிருக்கிறார்கள். மாடுகன்றுகளை விவசாயத் தேவைகளுக்கல்லாது விற்கக்கூடாது, மூக்கணாங்கயிறு போடக்கூடாது. ஆறு மாதத்திற்குள் விற்கக்கூடாது, கசாப்புக்கடைகளுக்கு விற்கக்கூடாது, இளங்கன்றுகளைச் சந்தைக்குக் கொண்டு வரக்கூடாது முதலிய நடைமுறைகள் முற்றிலும் சட்டவிரோதமானவை. மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்காது எடுத்த இம்முடிவு, கூட்டாட்சித் தத்துவத்தின் விலைமதிப்பறியாதது மோடி அரசாங்கம் என்பதற்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

விவசாயத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தக் கூடியது என்று ஆதாரங்கள் வழி நிரூபித்தாலே இனிமேல் மாடு கன்றுகளை விற்கவும் வாங்கவும் முடியும். இது விவசாய - வீட்டுத்தேவைகளுக்கு மாடுகன்றுகளைப் பயன்படுத்துபவர்களுக்குப் பேரிடியாகும். விவசாயிகளில் மிகக்குறைந்த விழுக்காட்டினர் மட்டுமே இப்படிப்பட்ட ஆதாரங்களைக் காட்ட முடியும் பலகோடி மக்களின் வாழ்க்கையும், வாழ்வதற்கான வழியையும் தடைசெய்து தான் இந்தத் தீர்மானம்.

மாவட்ட அளவில் விலங்கு விற்பனைக் குழுக்களும் மேற்பார்வைக் குழுக்களும் உருவாக்கப்படுமென்று அறிவிப்பு தெரிவிக்கின்றது. மாட்டு வியாபாரிகளுக்கும் மாடுகளைக் கொண்டு போகின்றவர்களுக்கும் எதிராக அடக்குமுறை செய்கின்ற பசுப் பாதுகாப்பு அமைப்புகள் இந்தக் குழுக்களின் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுமோ என்பதுதான் ஐயம். ரம்ஜான் நோன்பு ஆரம்பிப்பதற்கு முதல்நாள் மாட்டு விற்பனைக்குக் கட்டுப்பாடு கொண்டுவந்ததைச் சில சமுதாயங்கள் மீது ஏவப்பட்ட தாக்குதலாகவே கருத முடிகின்றது.

சிறுபான்மை மதத்தினர் மட்டுமல்லாது, எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் இறைச்சியை உண்கின்றனர். புதிய தீர்மானம் இந்தியாவில் தோல் தொழில்களுக்கு மூலப்பொருட்கள் கிடைக்காமல் செய்யும். இந்தியாவில் தோல் தொழிலில் 25 லட்சம் பேர் ஈடுபடுகின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் தலித்துகள். விளிம்பு நிலைப்படுத்தப்பட்ட இவர்களின் வாழ்க்கையையும் வாழ்க்கை வழிமுறையினையும் இத்தீர்மானம் கடுமை யாகப் பாதிக்கும். உலகச் சந்தையில் இறைச்சி ஏற்று மதியில் இந்தியாவிற்கு முக்கிய இடமுண்டு. தடையால் இந்த ஏற்றுமதியையும் அதன் வழி கிடைக்கும் அந்நிய செலவாணியையும் பாதிக்கும். கேரள இறைச்சி உற்பத்திப் பொருட்கள் நிறுவனம் (Kerala Meat Products of India) உட்பட்ட இந்த அரங்கத்திலுள்ள அரசுத்துறை சார்ந்த இறைச்சியைப் பதப்படுத்தும் தொழிற்சாலை களையும் இத்தீர்மானம் தகர்க்கும்.

கேரளத்தில் பெரும்பான்மையான மக்கள் இறைச்சியை உண்பவர்களாகத் தென்னிந்திய மாநிலங் களிலும், வடஇந்திய மாநிலங்களிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் இதே நிலைதான். அதனால், மாநில அரசுகளோடு கலந்தாலோசித்து மட்டுமே இத்தகைய தீர்மானங்களை எடுக்க முடியும். மாநில அரசுகளின் நம்பிக்கையைப் பெறாமல் எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் ஜனநாயகத்திற்குப் பேரிடியாகும். இடது ஜனநாயக முன்னணி கேரளத்தை ஆளுகின்ற போது, ஒவ்வொருவரும் அவர்கள் விரும்பிய உணவை உண்ணமுடியும். அதற்கான உறுதியான நடவடிக்கை களை அரசாங்கம் எடுக்கும். இதற்கு எல்லா திசை களிலிருந்தும் கிடைக்கின்ற ஆதரவு மகிழ்ச்சியைத் தருகின்றது.

நன்றி:
'சிந்த' மலையாள மாத இதழ் ஜூன் 2017

# மறைந்த கவிஞர் சுகந்தி சுப்ரமணியன் படைப்புலகம்

## கோவை இளஞ்சேரல்

மறைந்த கவிஞர் சுகந்தி சுப்ரமணியன் கோவை மாவட்டம் ஆலாந்துறை என்ற குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து, பின் உயர்நிலைப்பள்ளி வாழ்க்கை. பின் ஹைதராபாத்தில் திருமண வாழ்க்கை. வாழ்க்கையின் எதேச்சையான சூழல்களும், நெகிழ்வுகளும், சிறுசிறு கவனிப்புகளும் கவிதைக்கான களமாகிவிட்டிருக்கிறது அவருக்கு . "புதையுண்ட வாழ்க்கை" என்ற தலைப்பில் அவரின் முதல் கவிதைத் தொகுப்பை கவிஞர் மீரா, (அகரம் பதிப்பகம், சிவகங்கை) வெளியிட்டார்... இரண்டாம் கவிதைத் தொகுப்பை _ மீண்டெழுதலின் ரகசியம்-தமிழினி வசந்தகுமார் வெளியிட்டார். தொடர்ந்து மன அவஸ்தைகளின் போதும் கவிதைகள் எழுதுவதைக் கைக் கொண்டார். தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்களாய் மீண்டும், மீண்டும் நிரம்பியது அவரின் வாழ்க்கை. இரு கவிதைத் தொகுப்புகளுக்குப் பின் அவ்வப்போது எழுதிய கவிதைகள் பல நூறைத் தாண்டும். சில சிறுகதைகளும், நினைவுக்குறிப்புகளும் எழுதியுள்ளார். அவை இப்போது தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ளன. தொடர்ந்த மன நோய் சிக்கல்களால் சிகிச்சையில் இருந்தார். இருதயக் கோளாறால் இறந்தார். (பிப்ரவரி 11 2009).

தடாகங்கள் :
இயங்குவதன் முன் இயலாத ராகங்கள்
கீர்த்தனைகள் போதனைகள்
மௌனச் சிறகசைப்பில் தடாகங்களின்
நீர்த்தேக்கங்கள்
சின்னஞ்சிறு குமிழிக்குள் ஓர் இதய
மௌன காந்தம்
சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும்
அறிவுடன் படைத்துவிட்டாய்
இத்தாலிய தவிப்பிற்குள் தேகங்கள்
சித்ரா புஜங்கள்
சிதைவசைப்பின் காந்தத் துணுக்குகள்
வெளியேறும் மௌனச் சிதறல்கள்
ஒருங்கிணைந்த அநாமதேய
புத்தகாலய தெய்வீகக் காதல்கள்
புரிந்தேன் நமதே வழி
---- சுகந்தி சுப்ரமணியன் படைப்புகள் தொகுப்பிலிருந்து

தமிழ்க் கவிதையில் பெண்களின் உலகமும் வாழ்வும் மொழி வடிவச் சிந்தனை உருவான காலத்திலிருந்து பதிவாகிவருகிறது. சமகாலத்தின் கல்வியில் இருந்தும் ஆதிப் பொதுவுடைமைச் சமூகத்திலிருந்தும் பெண் கல்வியையும் கலைகளையும் விரைவாகவும் சிறப்பாகவும் கற்றுக் கொள்கிற மனோபாவமும் உறுதியும் கொண்டவளாகவே இருந்தாள். இருக்கிறார்கள். சொத்துரிமைச் சமூகத்தின் பலநிலைகளிலும் பெண் படைப்பாக்கங்களும் கலைச் செயல்பாடுகளும் உன்னதமான நிலைகளைக் கொண்டிருந்திருக்கிறது. இந்த நெடிய கலை இலக்கியப்பண்பாடு இன்றளவும் நீட்சியாகவும் தொடர்ச்சியாகவும் நடைபெறவும் தொழில் படவும் பெண் நிலைப் படைப்பாக்க முயற்சிகள் சிறப்பான அளவில் முன்னேற்றம் காண்கிறது. நவீன தமிழ்க் கவிதையில் பெண்ணியக்கச் செயல்பாடுகளும் நேர்த்தி மிக்கதாகவும் அசலாகவும் தொடர்கிறது என்பதை சுகந்தி சுப்ரமணியன் கவிதைகளிலிருந்து காணமுடியும்.

உயர்நிலைப்பள்ளிப் படிப்பைக் கூடச் சரியாக முடிக்க முடியாத குடும்பச் சூழலில் குடும்பத்தின் பொறுப்பை ஏற்கிற சூழல் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய காலம் அது.

பெரியவளாகிவிட்டால் போதும் ஒருத்தன் கையில் ஒப்படைத்து விடுவதே வாழ்நாளின் கடமை என்பதாக பெற்றோர்களுக்குள்ள நிலைமை. அல்லது பொருளாதார நிலை. அன்றியும் குடும்பத்தில் அதிக சகோதர சகோதரிகள். சுகந்தி ஒரு பெண் நிலை வாழ்க்கையின் பொதுமைப்பண்பு. பெரியவளாகி விடுகிற சிறுமிகளைத் தகுந்த பாதுகாப்பான ஒரு குடும்பத்திலிருந்து வந்து பெண் கேட்டுவிட்டாலே பெரும் சந்தோசம் குடி கொண்டு விடும். அந்தக் காலத்தில் பெண் கேட்டு வருகிறவர்கள் கேட்கிற ஒரே ஒரு கேள்வி... "புள்ள நல்ல வெட்டு வெடுக்குன்னு ஊட்டு வேலை செய்வாளா..." என்பதுதான்.

அன்றைய நாளில் வீடுகளில் மாடு கன்று ஆடு கோழி என்று கட்டாயமாக மாட்டுக் கட்டுத்தறியைச் சுத்தம் செய்வதும் தண்ணீருக்காக ஊரு ஊரு அலைந்து திரிகிற வாழ்க்கையை சுகமாக ஏற்றுக் கொள்ள முன் வருகிற சிறுமிகளுக்கு விரைவில் புருசன் அமைந்து விடுவது வழக்கு. சுகந்திக்கு ஏற்பட்ட வாழ்க்கை என்பது அந்த நாட்களின் சிறுமிகளுக்கும் ஏற்பட்ட வாழ்க்கை. சுகந்தியின் சொற்களிலிருந்து அந்த நாளைய கிராமங்களும் சிறுமிகளும் அவர்களின் பருவங்களும் நினைவிலிருந்து பிறக்கிறது.

சுகந்தியை எந்த இடத்திலும் சாதாரண மனுசியிலிருந்து வேறுபட்டவர் என்பதை இந்தப் படைப்புகளை வாசித்த பொழுது ஏற்க முடியவில்லை. காரணம் இந்தப் பொதுமை உலகம் அப்படித்தான் அவரைப் போலத்தான் இருந்து வருகிறது. அவர் காலத்திற்குப் பிறகு இப்பொழுதும் நிறைய நோய்கள் புதிய புதிய நோய்களை உருவாக்கி உருவாக்கி குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மருத்துவமனைகளும் புதிய புதிய காவல் நிலையங்களும் அந்தக் காவல் நிலையங்களுக்கு புதிய புதிய வாகனங்கள், நவீன கருவிகள் காமிராக்கள். புதிய நவீன வசதி கொண்ட காவல் நிலையங்கள் 'நீதிமன்றங்கள்' பாதுகாப்புக் கருவிகள் அதற்கான புதிய அளவில் குற்றங்களையும் நாம் செய்து நம் சமூகத்தினரும் செய்து நமது நீதிமான்களின் மாண்புகளைக் காப்பாற்றும் பொறுப்பும் நம் பொதுமைப் பண்புகளுக்குக் கடமைப்படுத்தப் பட்டுள்ளது. இந்தச் சமூகத்தை நேர் செய்ய கலையால் தான் முடியும். கவிதைக் கலையின் பிடியற்ற பிடியில் கவிதையைக் கைப்பற்ற முனைபவர்களில் முக்கியமானவராக சுகந்தி அறியப்பட்டவர்.

"தனது நாட்குறிப்பில் ஒரு நாள் எழுதியிருப்பது. இந்த மனித உடலே நோய்மையின் கூறுகளால் ஆனது. ஏதோ மருத்துவமனையில் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுவருகிறவர்கள் மட்டும் தான் நோயாளிகள் மற்றவர்கள் மிக நலமாக இருக்கிறார்கள் என்பதான பாவனைகள் இங்கு நிகழ்கிறது. அப்படியல்ல. மனிதனின் இருப்பே நோய்மைக்கூறுகளின் செயல்பாடுகள்தான். நோய்மை இல்லாத இருதயம் துடிப்பதேயில்லை. நோய்மையின் வெளிப்பாட்டு அளவில்தான் ரத்தம் பாய்கிறது. இயற்கை வளங்களை உணவைச் சார்ந்திருக்கிற எல்லா உயிரிகளும் நோய்மைக் கூறுகள் கொண்டதுதான்."

இங்கு சுகந்தி சுப்ரமணியன் அறியப்பட்டது நோய்மையின் காரணங்களால் தான் என்பதே அதிர்ச்சியளிக்கிறது. அவர் மட்டுமல்ல இன்னபிற பல தமிழ்ப்படைப்பாளர்கள் சிலர் அவர்களின் நோய்மையை அறிந்து அவரை அறிந்து கொள்கிறார்கள் என்பதே

எரிச்சலும் சங்கடமும் தருவதாகவே உள்ளது. அவர்களின் எழுத்தும் படைப்புகளும் முன்வரிசையில் வந்து பிற்பாடு அவர்களின் நோய்மை பின்னுக்கு வந்தால் தேவலை. ஆனால் நம் விமர்சகர்களோ திறனாய் வாளர்களோ அவர்கள் வசதிக்கு படைப்பாளியின் தனிப்பட்ட வாழ்வையும் உடல் மனம் சார்ந்த பிரச்சனை களையும் முன்னுக்குக் கொண்டு வந்துவிடுகிறார்கள். ஆண் படைப்பாளர்களை எளிதில் குடிகாரர்கள் என்பதும் பெண் படைப்பாளர்களை மனப்பிறழ்வு கொண்டவர்கள் என்பதும் இன்றளவும் தொடர்கிறது.

"நான் எழுதுன கவிதை புத்தகத்தை பலர்கிட்ட காமிச்சா உங்க வீட்டுக்காரரா எழுதுனார்னு சிலர் கேட்கறாங்க இதுக்கு அடிப்படையென்ன.. பொறா மையா? தெரியலை அதனால நீங்க திருத்திக் கொடுக்கறது மாத்தச் சொல்றது கூட புடிக்காமே போகுது. எஸ் லட்சுமிபாட்டி ஆர் லட்சுமிப்பாட்டி பத்தின கவிதை எனக்கும் புடுச்சது. ரெண்டு பாட்டிகளும் இப்பொ இல்லை. இண்டியா டுடேல கவிதைக்கு ஆயிரம் வந்ததும் எங்க எஸ் லட்சுமிபாட்டிக்கு நெகமம் புடவை ஒண்ணு எடுத்துக் கொடுத்தேன் அவங்க கவிதை எழுதி காசு வந்ததுங்கறதை நம்பவேயில்லை..." என்பதாக நாட்குறிப்பொன்றின் சிறு பகுதி. இந்தப் பதிவில் கவிதை சார்ந்த மிக இயல்பான கூறுகளையும் சேர்த்தே எழுதியிருக்கிறார் எனலாம்.

இந்தச் சமூகத்தில் தான் சுகந்தி, ஆர்.சூடாமணி, தமயந்தி. சந்திரா. லீனா மணிமேகலை, குட்டி ரேவதி உள்ளிட்ட படைப்பாளர்கள் இந்தச் சமூகத்தைப் பதம் செய்ய நல்ல கூரானக் கத்திகளை உருவாக்கிட முனைகிறார்கள்.

**மூலை**
**மூலை சேர்ந்தாயிற்று**
**எல்லாம் ஒதுங்கியபின்**
**தேவையானவற்றைத் தேடி**
**அலுப்பாயிற்று**
**கிடைப்பவையெல்லாம் எதுவோ ஆக**
**வராதவை,வந்தவை**
**எல்லாம் பட்டியலில் இடம் பெற**
**பெயர்ந்தானது மனசை**
**உனக்குள் வைத்திருப்பவற்றை**
**கொடுக்க மனசில்லையென்றும்**
**தவிர்க்க எத்தனையோ இருக்க**
**விலகியிருக்கிறேன் எனக்குள்**
**வருபவையெல்லாம் விலகிப்போக**
**வராதவையெல்லாம் தூரத்திலிருக்கிறது**
**என்றாலும்**
**எல்லாமே வானத்தின் கீழ்**
**சகஜமாயிருக்கிறது---------** பக்.194

மேற்குறிப்பிட்ட கவிதையிலேயே அவருடைய மன இருப்பு நிலையை அறியமுடியும். கொங்கு நாட்டில் வயது மூப்படைந்தவர்களைப் பற்றிப் பேசுகிறவர்கள் "அது கெடை சேர்ந்துகிட்டது" என்பார்கள் மேலும் "மூலை சேர்ந்துடுச்சு..." என்பது வழக்கு. அவர்களுடைய படுக்கை, சாப்பாட்டுத் தட்டு, எச்சில் சட்டி உள்பட எல்லாம் அருகாமைக்கு வந்துவிடும். அவர்கள் இனி அங்கேயே கிடந்து பிராணனை விடவேண்டியதுதான். உடலுக்கு கிடைக்கிற அதிகபட்ச மரியாதையை அவ்விடத்துதான் காணமுடியும். சுகந்தியின் இந்தக் கவிதை தமிழில் எழுதப்பட்ட கடைசிகால உயிர் நிலையை அற்புதமாகக் காட்டியிருக்கிறது. வாழ்வின் அந்திம நாட்கள் பற்றியும் நோய்மை குறித்தும் வயோதிக இருப்பு பற்றியும் இலக்கியங்கள் பேசியிருக்கிறது. ஆனால் இந்த மூலை சேர்தல் என்கிற கெடை சேர்தல் பற்றிய இந்தக் கவிதை புதிய தொனி. தான் அங்கு பறந்து இங்கு பறந்து ஓரிடத்தில் நிலை கொண்டா யிற்று. இனி இங்கிருந்து நேரே தன் மூதாதையர்களின் கூட்டுக்குள் நுழைய வேண்டியதுதான் என்பதான கூற்று. ஆனால் மூலை சேர்கிற வயசா அவருக்கு.




**சுகந்தி சுப்ரமணியன் படைப்புகள்**
தொகுப்பு: சுப்ரபாரதிமணியன்
*வெளியீடு: டிஸ்கவரி புக் பேலஸ்*
கே.கே.நகர், சென்னை.
*விலை: ₹ 330/-*

சுகந்தியின் கவிதைகளில் எங்கினும் காணப் படாதது என்னவெனில் எந்த நிலையிலும் தன் இயலாமை குறித்த வருத்தம் எங்குமில்லை. இந்தப் பொருளியல் சமூகத்தில் பெண் இருப்பு வசம் பற்றிய எளிய விமர்சனங்களாகவே கவிதைகள் உள்ளது. அவர் உடல்நலம் பற்றிய செய்திகளை இந்த நூலிலிருந்து எடுத்துவிட்டு வாசித்தால் அல்லது தவிர்த்த நூலாக இருந்திருக்குமானால் இந்தக் கவிதைகள் முழுக்க பெண்ணியக்கத்திற்கான புரட்சிகரமான கவிதைகளாக அறியப்படும். பெண் புற உலகின் மீது வெளிப் படுத்துகிற அன்பு எத்தகைய கருணை மிக்கதாக இருக்கும் என்பதை உணர்வு வெளிப்பாட்டுடன் அறிந்து கொள்ள சுகந்தியின் கவிதைகள் உதவும். உளச்சிக்கலும் மனச்சிக்கலும் கவிதை, சிறுகதைகளுக்குள் நுழையாத வண்ணம் கலையின் அளவில் சிறப்பாகவும் நேரடி யாகவும் வெளிப்பட்டுள்ளது. அவருடைய எல்லையற்ற தீவிர இலக்கிய வாசிப்பின் வழியாக இன்னபிற படைப்பாளர்களின் படைப்புகளில் பெண்மையின் இருப்பைத் தேடியபடியே இருந்திருக்கிறார்

தன் கணவரின் சமகாலத்தின் படைப்பாளர்களின் எழுத்துகளில் பெண் நிலைவாதம் பற்றியும் பெண் இருப்பு பற்றியும் அவருக்குள் கேள்விகள் எழுந்து கொண்டே இருந்திருப்பதை தன் நினைவுக்குறிப்புகளில் எழுதி வைத்து இருந்த பதிவுகளையும் சுப்ரபாரதி மணியன் இணைத்துள்ளது நூலுக்கு பெரிய பலமாக இருக்கிறது. தன் நட்பும் உறவும் தமிழிலக்கியப் படைப்பாளர்களுடனும் இருப்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் அவர் எழுதுகிறார்

“அசோகமித்ரன் வீட்டுக்கு வந்தப்போ வாங்க தாத்தான்னு கூப்புட்டேன். என்ன நெனைச்சாரோ, வருத்தமோ என்னவோ. பிலிம் பெஸ்டிவலுக்கு வந்திருந்தார். கேசரி பண்ணினேன் சாப்பிடவேயில்லை. பொட்டலமா குடுத்துரு வாங்கிட்டுப் போறேன்னார். அவர் வீட்டுக்கு போனப்போ ஸ்ரீமுகி சின்ன பொண்ணு அழுதிட்டே இருந்தா. என்னமோ சிரமம் குழந்தைக்கு அதுதான் அழுகுதுன்னார். ஒண்ணும் புரியலை. தி நகர் பஸ் ஸ்டேண்ட் போயி பஸ் ஏர்றப்போ பாத்தா ஜட்டி ஈரமாயிருக்கு அதுதா அழுதிருக்கா. அவருக்குக் கோபமே வராது போலிருக்கு...”

படைப்பிலக்கியவாதிகளின் குடும்பம் கூட சமூகத்தில் மிகமிக சிறுபான்மை கூட்டம்ந்தான். வாழ்வில் தரிசிக்கும் ஒவ்வொரு கணங்களிலும் மேன்மையான உணர்வினையே கண்டடையும் தருணமாகப் பார்ப்பது அவருக்கு இயல்பானதாகவே உள்ளது. சுகந்தியின் நாட்குறிப்பு பதிவுகள் மேன்மையான சிந்தனைகளாக அல்லாமல் புனிதம் நிரம்பிய அன்றாட வாழ்வின் காட்சிகளைப் பேசுகிறது.

மேலும் ஒரு குறிப்பில்,

“ஹாலோபெரிடால் எனக்குப் புடுச்ச மருந்து. குடுத்த உடனே தூக்கம் வந்திரும். நாள் ஆக ஆக கைகால் விரச்சு ஒரு மாதிரி ஆயிருச்சு. ரோபா மாதிரி ஆயிட்டன். ஒரு மாதிரி நடை. ரோபா மாதிரியே நடந்தேன். சுஜாதாவோட ஜீனோ மாதிரி ரோபா. அது குலைக்கும். லொள்...லொள்ன்னு. நானும் அது மாதிரி உங்களைக் கவ்விக் கவ்வி குதறியிருக்கன்ல...” எனும் நாட்குறிப்பில்தான் எத்தனை செய்திகள். இச்சிறு குறிப்பை சாதாரணமாக எழுதிவிடமுடியுமா. அவர் சமகாலத்தின் வாசிப்பின் பிடியில் தீவிரமாக இருந்த பொறுப்புணர்வு அறியமுடிகிறது.

சுகந்தியின் சிறுகதைகள், கவிதைகள், நாட்குறிப்பு களில் காணப்படுகிற படைப்புமொழி சிறப்பானது. அலங்காரமோ வசீகரிக்க அமைக்கிற பெரும் சுவாரசிய மிக்க சொற்றொடர்களோ எதுவுமில்லை. இந்த மூன்று படைப்பிலும் பொதுவான மொழியே அமைந் திருக்கிறது. அவர் எழுத்தின் வழியாக படைப்பிற்காக எந்தத் திட்டமிடலையும் முன்வைக்கவில்லை. குடும்ப உலகம், இலக்கிய உலகம், தன் சுயம், தன் எழுத்து, தன் மன இருப்பு, தன் எதிர்காலம் இவற்றிற்கு இடையே ஒரு எளிய மனுசியின் ரசனைகளாக இந்தக் குறிப்புகளும் கவிதைகளும் படைப்பும் உள்ளது. இந்த நூலுக்கு ஜெயமோகன் எழுதியுள்ள, ஏற்கெனவே எழுதியிருந்த சுகந்திக்கான இரங்கல் கட்டுரை மற்றும் அவர் கவிதைகள் பற்றிய மதிப்பீடுகள் நூலுக்குள் நுழைய வாசகர்களுக்கு சௌகரியமானவை.

சுகந்தியின் பால்யகால வாழ்வு கோவையின் மேற்குத் தொடர்ச்சி மலையடிவார கிராமமாக இருந்த படியாலும் அவருக்குக் கொங்கு வழக்காறு மொழி இயல்பாகவே வந்து பேசுகிறது.

மேற்கு மலையடிவார கிராமங்கள் மிகவும் இயற்கையும் பேரழகு வாய்ந்த அழகிய சூழல்கள் வாசிக்கும் பொழுது நமக்கு ஏற்படுகிறது. இவருடைய பதிவுகளில் வரும் பாத்திரங்கள் முழுக்கவும் ஆலாந்துறை கிராமத்து மாந்தர்கள் போலவே மாறிவிடுகிறார்கள். சுகந்தியைப் பொருத்தவரை அசோகமித்ரன், ஜெய மோகன், அருண்மொழி நங்கை, திலகவதி, லதா ராம கிருஷ்ணன், சுஜாதா இப்படியாக தன் இலக்கிய நண்பர்கள் கணவரின் இலக்கிய நண்பர்கள் அனை வருமே தன் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்னும் நினைப்பு அவருக்கும் மனதிற்கும் ஏற்பட்டுவிட்டதை ஆச்சர்யமாகப் பார்க்கிறேன்.

அவருடைய நாட்குறிப்புகள் மிகவும் இலக்கிய நேர்மை வாய்ந்தவை. ஆங்காங்கு பிதற்றலும் உளறலுமாக எழுதிவைத்திருப்பதாகத் தோன்றுவது எல்லாமே தனி மனித இருப்பின் வலி. அகத்தின் அழகு

முகத்திலும், அகத்தின் கலை எழுத்திலும் தென்படும் போல. சுகந்தியின் குறிப்புகள் பூச்சிதறல்களாக அமைந்திருக்கிறது. ஒரு பாரா ஒரு சிறுகதையின் கச்சிதம். அவர் குறிப்பிடாத தத்துவ வெளிப்பாடே இல்லை. அவருக்குத் திட்டமிடப்பட்டுவிட்ட தத்துவ ஏற்பாடு அவர் சிந்தனையில் நின்று விட்டது. உதாரணத்திற்கு சில குறிப்புகள்.

"தன்னம்பிக்கை இருந்தா மார்க்சியம்
தன்னம்பிக்கை போய்ட்டா ஆன்மீகம்
சுதந்திரம் வேணுமுன்னா பைத்யம் ஆகணும்."

"ஒண்ணாவதிலிருந்து பத்தாவது வரைக்கும் கண்ணைத் தொறந்ததில்லை. ஸ்கூல்ல. (கல்யாண மேடையிலதா கண்ணைத் தொறந்தேன்) பசங்களை பாத்ததேயில்லை. என்.எஸ்.எஸ்ன்னு பச்சியப்பன்னு ஒரு வாத்தியார் சொல்லிட்டே இருப்பார். லீலாவதின்னு ஒரு டீச்சர் அழகாதா இருப்பாங்க. அழகா பொடவ வுடுத்துவாங்க. அவங்க ரெண்டு பேருக்கும் லவ். நாந்தா காதல் கடிதம் கொண்டு போயி குடுப்பன். குடுக்காட்டி ஸ்கூல வுட்டு துரத்திடுவன்னு சொல்வாங்க. ஒரு நாள் தலைமையாசிரியர் கவனிச்சார் லீலாவதியோட அழகைப் பாத்து கார் வாங்கிக் குடுத்தார். அப்புறம் பச்சியப்பனும் லீலாவதியும் கார்ல பறந்துட்டே இருப்பாங்க. ஒரு கொழந்த பொறந்ததும் கார் பஸ் ஆயிடுச்சு. லீலாவதி ஒரு சாக்கை தூக்கிப் போட்டுட்டு அங்கெயும் இங்கயும்னு அலைவாங்க. இங்க கூட வந்தாங்க. நான் கண்டுக்கவேயில்லை. ஆனா குடும்பம் நடத்தறாங்க சாக்கோடவே."


"காத்திருப்பதே வாழ்க்கையாய்ப் போய் விட்டதுன்னு வாழ்க்கையாப் போச்சுன்னு புவியரசு சொன்னாரில்லை ஒரு பொண்டாட்டிக்காக ஒரு ஞாயித்துக் கிழமைக்காக ஒரு மட்டன் துண்டுக்காகன்னு சேத்துக்கலாம்."

சுமார் 350 பக்கங்கள் பெருந்தொகுப்பாக சுகந்தி சுப்ரமணியன் படைப்புகள் வெளிவந்திருக்கிறது. அவருடைய படைப்புகள் மேலும் சில நூறு பக்கங்கள் இருக்கலாம். தமிழுக்கு ஒரு முக்கியமான வரவு. தொகுத்த 'கனவு' இதழாசிரியர் நாவலாசிரியர் சுப்பாரதிமணியன் அவர்களுக்கும் வெளியிட்டு சிறப்பு செய்திருக்கும் டிஸ்கவரி புக் பேலஸ் வேடியப்பன் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்.

மௌனத்தில் முயங்கி
மெய் ஞானத்தில் மவுனம் தாங்கி
அலை தோய்ந்த ஆறுகரையோரம்
அம்மனதைத் தேடிய அலைபாய்தல்.
சின்னச் சிறை முல்லைப்பூவின் இதழ்கள்
சின்னக் குருத்தாய் சிரித்து மலரும் முல்லைப்பூ – பக் 86

●






16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com



# தமிழின் முதல் தருக்கவாதி 'அறவண அடிகள்'

(உலக விருத்த ஆராய்ச்சியை முன்வைத்து)

முனைவர் சு.மாதவன்

**கா**ரண - காரிய இயைபு அல்லது இயை பின்மையை விளக்கும் அறிவாராய்ச்சியின் ஒரு வகை அணுகுமுறையைத் 'தருக்க நெறி' என்பர். இந் நெறி நிற்கும் தருக்கவாதிகள் பலர்; தருக்கவாத முறைகளும் பல; அவரவர் சார்ந்த மெய்யியலுக்கேற்பக் கட்டமைக்கப்படும் தருக்கநெறிகளுள் பௌத்தத் தருக்க நெறியை - அளவையியலை அறவண அடிகளின் வழியாக மணிமேகலை எவ்வாறு பதிவுசெய்துள்ளது என்பது ஆராய்தற்குரியது. இத்தகைய தருக்கவாதத்தைத் தமிழில் முதன்முதலில் முன்வைக்கும் தருக்கவாதியாக அறவண அடிகள் விளங்குவதை இந்தக் கட்டுரை விளக்கி முன்வைக்கிறது.

### உலக விருத்தம் (29 : 162) என்னும் ஒரு தொடர்

மணிமேகலையின் 29ஆம் காதையான 'தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை'யில் இத்தொடர் இடம் பெற்றுள்ளது. 'உலோக விருத்தம்' என்று ஓரிடத்திலும் *(29 : 149-150)*, 'உலக விருத்தம்' என்று ஓரிடத்திலுமாக *(29:162)* இரண்டு இடங்களில் பதிவுபெற்றுள்ளது. மணிமேகலைக்குப் பௌத்த அளவையியலை அறவண அடிகள் விளக்கிப் போதிக்கும் பகுதியில் இத்தொடரைச் சாத்தனார் கையாண்டுள்ளார்.

27வது காதையான 'சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட காதை'யில் மணிமேகலை தோன்றிய காலத்தில் வழக்கிலிருந்த ஐந்து சமயங்களின் மெய்யியல் சிந்தனைகளை அவ்வச் சமயவாதிகள் மணிமேகலைக்குச் சொல்கின்றனர். அச் சமயங்களின் வாதங்கள் முறையே, வைதீகவாதம், ஆசீவகம், சாங்கிய வாதம், வைசேடிக வாதம், பூதவாதம் ஆகியவையாகும். இவற்றை யெல்லாம் கேட்ட மணிமேகலை, இவையெல்லாம் தம் ஏற்புக்குரியனவாக இல்லை என முடிவெடுத்து, அறவண அடிகளிடம் சென்று பௌத்த வாதத்தைக்

கேட்குமிடத்தில் இவ் 'உலகவிருத்தம்' பற்றிய விளக்கம் இடம்பெற்றுள்ளது.

### அளவை வாதங்களின் பின்னணியில் பௌத்த அளவைவாதம்

முதலில் வைதீக அளவைவாதியிடம் அவர்தம் அளவையியலைக் கேட்கும்போது வைதீக அளவை வாதத்தின் முறைகள் வேதவியாதன் 'பத்து' என்றும் கிருதகோடி 'எட்டு' என்றும் சைவிமி 'ஆறு' என்றும் வரையறுத்துள்ளனர் என்று கூறிவிட்டு முறையே பத்து வகையான அளவைவாதங்களை விளக்கிச் சொல்கிறான். அப் பத்து அளவை வகைகள் வருமாறு : காட்சியளவை, கருத்தளவை, உமவ அளவை, ஆகம அளவை, அருந்தாபத்தியளவை, இயல்பளவை, ஐதீகவளவை, அபாவ அளவை, மீட்சியளவை, உள்ளநெறியளவை ஆகியன.

இவ்வாறு வைதீக அளவைவாதம் 10 எனக் கூறியுள்ள அளவைகளைப் பௌத்த அளவையியல் முதல் இரண்டுக்குள் (2) அடக்கிக் காட்டுகிறது என்பதை 29-வது காதையான இப்பகுதி விவரிக்கிறது. புத்தரின் போதனைகள் தருக்கவியற் கூறுகளைத் தன்னகத்தே கொண்ட மெய்யியலாக வெளிப் பட்டிருந்தது. ஆனால், தருக்க நெறிகளுக்கான விளக்கங் களையோட தருக்க நெறிக்கான கட்டமைப்புகளையோ புத்தர் முன்மொழிந்தாரில்லை. எனவே, புத்தரின் தேரவாத பௌத்தம் தருக்கத் துறையில் ஈடுபடவில்லை என்பது தெளிவாகிறது. இதனால் தான், புத்தர் பிரானே 'தருக்க முடிச்சுகளிலும் அப்பாலைத் தத்துவங்களிலும் ஈடுபடக் கூடாது' என எச்சரித்தார். எனினும், பழைய நூல்களில் கூறப்பட்டன என்பதற்காக எதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளும் போக்கினையும் கண்டித்தார். ஞானசார சமுச்சயத்தில்,

> "நன்றாக உருக்கியும், சோதித்தும், கட்டளைக் கல்லில் உரைத்துப் பார்த்தும் பொன்னின் மாற்றினைச் சோதிக்கும் அறிஞனைப் போல என் சொற்களையும் நன்றாக ஆராய்ந்த பிறகுதான் நீங்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; என்னிடம் வைத்திருக்கும் மரியாதை காரணமாக என் சொற்களை ஏற்க வேண்டாம்"
>
> (கந்தசாமி., சோ.ந. 1977:189)

என்றார் புத்தர். புத்தரின் மெய்யியலையும் அவருக்குப் பின்வந்த பௌத்த அறிஞர்களின் மெய்யியல் விளக்க முறைமைகளையும் விரிவாக ஆராய்ந்த ஷேர்பட்ஸ்கி எனும் அறிஞர் இதனை உறுதிப்படுத்துகிறார். ஷேர்பட்ஸ்கி எழுதிய 'பௌத்த அளவையியல் (Buddhist Logic) என்னும் நூல் இது குறித்த பல்வேறு ஆய்வு முடிவுகளைத் தருகிறது.

மகாயான பௌத்தப் பிரிவுகள்தாம் பௌத்த அளவையியலை வளர்த்தெடுத்தன. மாத்யமிக மகாயானப் பிரிவை உருவாக்கிய நாகார்சுனர் வைதீகமும் நியாயமும் வளர்த்தெடுத்திருந்த அளவைகளில் பிரத்தியட்சம், அனுமானம், உபமானம், சப்தம் அல்லது ஆகமம் என்னும் நான்கு அளவைகளை வளர்த்தெடுத்தார். முற்கால யோகாகாரப் பிரிவினை வளர்த்த மைத்திரேயர், அசங்கர் ஆகியோர் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்ற மூன்று அளவைகளைக் கைக்கொண்டனர். பிற்கால யோகாசாரம் அல்லது சௌந்திராந்திக யோகா சாரப் பிரிவினை உருவாக்கிய வசுபந்து, திக்நாகர், தரும கீர்த்தி ஆகியோர் முதல் இரண்டு அளவைகளை மட்டுமே ஏற்றனர். இவர்களில் வசுபந்துவைத்தான் 'ஆதி சினேந்திரன்' என்று குறிப்பிட்டுள்ளார் சாத்தனார் என்பது ஷேர்பட்ஸ்கியின் ஆய்வு முடிவாகும் (Stcherbatsky., F.Th.. 1962 : 32).

### மணிமேகலையில் அளவைவாதங்கள்

பௌத்த மெய்யியலின்படி அளவைகள் இரண்டு. அவை, காட்சியளவை, கருத்தளவை என்பன. இதை மணிமேகலைக் காப்பியம்,

> 'ஆதி சினேந்திரன் அளவை இரண்டே
> ஏதமில் பிரத்தியக்கம் கருத்தளவு என்ன' (29 : 47-48)

எனக் குறிப்பிடுகிறது. இவ் இரண்டனுள் கருத் தளவையின் வகைக்குள் இடம்பெறுவதே இவ் 'உலக விருத்தம்' என்பது.

கருத்தளவையை வடமொழியில் அனுமானம் என்கின்றனர். 'காட்சியளவை' யைப் 'பிரத்தியக்கம்' என்று வடமொழிச் சொல்லாலேயே குறிப்பிட்டுள்ள சாத்தனார் 'கருத்தளவை'யை மட்டும் 'அனுமானம்' என வடமொழிச் சொல்லால் குறிப்பிடாது 'கருத்தளவு', என்னும் தமிழ்ச் சொல்லால் பதிவுசெய்துள்ளார். இனி, கருத்தளவைக்குள் 'உலக விருத்தம்' இடம்பெறுமாற்றைக் காணலாம்.

கருத்தளவை (அனுமானம்) என்பது காரணானு மானம் (பூர்வசத்து), காரியானுமானம் (சேஷவத்து), சாமானியானுமானம் (சாமான்யதோ திருஷ்டா) என மூன்று வகைப்படும். இம் மூன்று வகையுள் காரணானு மானம், சாமானியானுமானம் என்ற இரண்டு பிழை படுவதற்கும் வாய்ப்புண்டு. ஆனால், இவற்றுள் பிழையாதது 'காரியானுமானம்' என்ற ஒன்றேயாகும் என்கிறார் சாத்தனார் (29 : 52 -56). இத்தகைய கருத்தளவை ஐந்து உறுப்புகளைக் கொண்டது. அவை முறையே, பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் என்பனவாகும். (29 : 57). இவற்றுள் பக்கம், ஏது, திட்டாந்தங்களில் நல்லனவும் உள, தீயனவும் உள. இதன்படி, இவற்றை, நன்பக்கம் (Valid Thesis), நல்லேது (Valid reason), ஏதமில் எடுத்துக்காட்டு (Valid Reason) என்கிறார் சாத்தனார். இம் மூன்றிற்கும் உரிய விதிகளி லிருந்து பிறழ்ந்தவற்றைத் தருக்கப் போலிகள் (தீயன) (Logical Fallacies) என்பர்.

பக்கம் என்பதற்கு, 'இம் மலை நெருப்புடைத்து எனல்' என்கிறது மணிமேகலை (29 : 59). இப் பக்கம்,

தன்பக்கம் (சபக்கம்), மறுதலைப் பக்கம், (விபக்கம்) என்ற இருவகைப்படும். தன்பக்கமாவது நன்பக்கம் என்றும் மறுதலைப் பக்கமாவது தீயபக்கம் என்றும் கூறப்படும். நன்பக்கம் என்பது பிற ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் ஆகியவற்றைத் துல்லியமான அளவை நெறியில் கொண்டு சேர்க்கும். இதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுத் தொடர்ச்சியின்மூலம் மணிமேகலை விளக்குகிறது:

'இம்மலை நெருப்பையுடையது; - பக்கம்

'இம்மலை நெருப்பை யுடையது'
எவ்வாறெனில், மலை புகையுடையதாய்ஏது
இருக்கிறது - ஆதலால்'

'இம்மலை புகையுடையதாதலால் நெருப்பை யுடையது;
எவ்வாறெனில், பலவகைப்பட்ட
அடுக்களைகளில் புகைவருவது போல' திட்டாந்தம்

'அடுக்களைகளில் புகைவருவது போல
இம்மலையும் புகையை உடையதாய் உபநயம்
இருக்கிறது'

'எதெல்லாம் புகையுடையதாய் இருக்கிறதோ
அதெல்லாம் நெருப்புடையது எனல்' நிகமனம்

மேற்கண்ட எடுத்துக்காட்டுத் தொடர்ச்சியில் ஒரு வகை இயைபும், முரணும் கலந்தரு மயக்கப் போக்கு காணப்படுகிறது. இந்தப் பின்புலத்தில், பக்கம் என்பதற்கான கூற்றை இருநோக்குகளிலும் அணுகிக் காணலாம். அதாவது,

1. 'இம்மலை நெருப்புடையது' என்பதை மலையில் உள்ள மரங்கள் உரசிக் கொள் வதாலோ பாறைகள் உடைந்து பாறைக்கற்கள் மோதிக் கொள்வதாலோ அறிய முடியும் என்ற நேர்நிலை அனுபவ அனுமானம் - இது ஒரு நோக்கு

2. 'இம்மலை நெருப்புடையது' என்பதைச் சமவெளியில் நெருப்புண்டாவதன் காரண - காரியக் கூறுகளுடன் ஒப்புநோக்கி தூரத்தி லிருந்து கண்டவாறே அறிய முடியும் என்ற சார்நிலை அனுபவ அனுமானம் - இது இன்னொரு நோக்கு.

முதல் நோக்கை (ஒரு நோக்கை) 'நன்பக்கம்' என்றும் இரண்டாம் நோக்கை (இன்னொரு நோக்கை) 'தீயபக்கம்' என்றும் கொள்ளலாம் (நன்பக்கம், 29 : 113-121), (தீய பக்கம் 29 : 154-190).

இந்த 'நன்பக்கம்' என்பதுடன் நல்லேது (29 : 121-135), ஏதமில் எடுத்துக்காட்டு (29 :136-141) என் பவையும் சேர பௌத்த தருக்கத்தின் முக்கூற்று முடிவுக்குரிய நல்உறுப்புக்கள் (Valid Members) மூன்றாகின்றன. இம்முக்கூற்று முடிவினைத் திக்நாகர் 'பரார்த்தனுமானம்' என்கிறார். இவை பௌத்த தருக்கத்திற்கான நல்ல அடிப்படைகளாக விளங்கு கின்றன.

முக்கூற்று நல்லுறுப்புக்களின் தருக்கநெறியில் ஏற்படும் பிறழ்ச்சிகளால் ஏற்படும் குற்றங்கள் - தீமை களை உருவாக்குபவற்றைத் தருக்கப் போலிகள் (Logical Fallacies) என்பர். இதனடிப்படையில், ஏற்படும் தீய தருக்கப் போக்குகளை முறையே பக்கப் போலிகள் (Fallacies of thesis), ஏதுப் போலிகள் (Fallacies of Reason), எடுத்துக்காட்டுப் போலிகள் (Fallacies of Examples) என வழங்குவர் பௌத்தத் தருக்கவியலார். இவற்றுள் பக்கப் போலிகள் 9 நிலைகளிலும் (29 : 154-190), ஏதுப் போலிகள் 14 நிலைகளிலும் (29 : 195-324), எடுத்துக் காட்டுப் போலிகள் 10 நிலைகளிலும் (29 : 340 - 468) எழுகின்றன என்பதை மணிமேகலை மிகத் தெளிவாக விளக்குகிறது (கந்தசாமி.,சோ.ந. 1977 : 208, Balusamy. N. 1965 : 102)

### பக்கப் போலிகளில் 'உலக விருத்தம்'

9 நிலைகளில் எழும் பக்கம் போலிகளுள் 4-வது நிலையாக இடம்பெறும் 'உலக விருத்தம்' என்பதும் ஒன்று. இதை,

'பக்கப் போலி ஒன்பது வகைப்படும்
பிரத்தியக்க விருத்தம் அனுமான
விருத்தம் சுவசன விருத்தம் உலோக
விருத்தம் ஆகம விருத்தம் அப்பிர
சித்த விசேடணம் அப்பிர சித்த
விசேடியம் அப்பிர சித்த வுபயம்
அப்பிர சித்த சம்பந் தம்மென' (29 : 147-153)

என்றவாறு பதிவுசெய்துள்ளது மணிமேகலை.

இவற்றுள் 'உலக விருத்தம்' என்பதற்கான விளக்கத்தை மணிமேகலை கீழ்வருமாறு கூறியுள்ளது.

'உலக விருத்தம் உலகின் மாறாம் உரை
இலகுமதி சந்திரன் அல்ல என்றல்' (29 : 162-163)

இதன்பொருள்,

'உலக விருத்தம்' என்பது உலக வழக்குக்கு மாறாக உரைத்தலாகும். அதாவது, வானில் இலகுகின்ற மதியைச் சந்திரன் அல்ல என்று கூறுவதாகும்'

என்பதாகும். உலக இருப்பிலும் இயக்கத்திலும் இருக்கும் ஒன்றை - உலக மக்கள் அனைவராலும் ஏற்கப்படும் ஒன்றை - இல்லை என்று கூறுதல் காரண - காரிய இயைபில்லாத ஒன்றல்லவா? உலகம் உண்டு என்பதை இல்லை எனல் போலி உரையாகும். எனவே, இவ்வாறு உரைப்பதை 'உலக விருத்தம்' (உலகப் போலி அல்லது உலகக் குற்றம்) என்கிறது பௌத்த தருக்கவியல். பௌத்தத் தருக்கவியலின் வளர்ச்சிக்குப் பெருங்கொடை நல்கிய நியாயத் தத்துவ நூலான நியாயப் பிரவேசம், 'உலக விருத்தம்' என்பதற்கு, 'மனிதர் மண்டையோடு தூய்மையுடையது. உயிருடம்பினுறுப்பாதலால், சங்குச்சிப்பி போலும் என்று கூறுவது' என்று கூறுகிறது.

(வைசேடிக சூத்திரம் iii 2.8.12 - ஔவை உரை., மணிமேகலை, 1964 : 514).

உலகின் இயல்பை உள்ளதை உள்ளவாறு புரிந்து கொள்ளாமல் மாறுகொளப் புரிதலும் மாறுகொள உரைத்தலும் ஆகாது என்பதைப் பௌத்தத் தருக்கவியல் இவ் உலக விருத்தத்தின்வழி உணர்த்துகிறது எனலாம்.

இவ்வாறு, பௌத்தத் தருக்கவியல் அறிவுக்குகந்த, அறிவாராய்ச்சிக்குட்பட்ட அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது. ஏனெனில், இவ்வுலகப் பிரச்சினைகள் அனைத்துக்குமான தீர்வைத் தரவல்லது, அறிவாராய்ச்சி யியலேயாகும். இத்தகைய அறிவாராய்ச்சியியலின் அணுகுமுறைப் பின்புலத்தில் தருக்கங்களை வகுத் துணர்த்துப் பயன்படுத்துவதால் பௌத்த தருக்கவியலை 'அறிவாராய்ச்சித் தருக்கம்' (Epistomological logic) என அழைக்கலாம். (Stcherbatsky., F.Th.1962 :1).

### முடிவுரையாக...

இதுவரை ஆராய்ந்த பௌத்தத் தருக்கவியலை முதன் முதலில் மணிமேகலைக் காப்பியமே பதிவு செய்துள்ளது. எனவே, காப்பியத்தைப் படைத்த சீத்தலைச் சாத்தனாரும் பௌத்தத் தருக்கவியலின் மாபெரும் அறிஞராகத் தமிழகத்தில் நிலவியுள்ளார் என்பது பெறப்படுகிறது. சாத்தனார் காப்பியத்தில், மணிமேகலைக்குப் பௌத்தத் தருக்கவியலைக் கற்பித்த பௌத்த ஞானியாக அறவண அடிகளைப் படைத் துள்ளார். இதிலிருந்து, முப்பெரும் பௌத்தத் தருக்கவியல் அறிஞர்களை மணிமேகலைக் காப்பியத்தில் காணமுடிகிறது. அவர்கள் முறையே, சீத்தலைச் சாத்தனார், அறவண அடிகள், மணிமேகலை ஆகியோ ராவர். இவர்களுள், மணிமேகலைக்குப் பௌத்தத் தருக்கவியலைக் கற்பித்ததாலும், அக்கால பௌத்தத் தமிழ் ஞானியருள் ஒருவராக அறவண அடிகள் விளங்குவதாலும் அறவண அடிகளே தமிழின் முதல் தருக்கவாதியாகத் திகழ்கிறார் என்பது தெளிவாகிறது.

### பயன்பட்ட நூல்கள்


உ.வே.சா., 2008, மணிமேகலை - அரும்பதவுரை, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை - 90.

கந்தசாமி., சோ.ந. 1977, பௌத்தம், டாக்டர் S.இராதா கிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

வேங்கடசாமி., நாட்டார் ந.மு, 1964, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, தி.சை.சி.நூ.ப. கழகம், திருநெல்வேலி - 6.

Stcherbatsky., F.th. 1962, Buddhist logic, Vol -1, 2, Dover publications, Inc. New Yark.

Balusamy.,N. 1965, Studies in Manimekalai, Athirai Pathippakam, Madurai -13.


●

## வாசகர் குரல்

சென்ற இதழிலில் வெளியான 'உ.வே.சா.வும் பெரியாரும்' கட்டுரை தெளிவுடனும் சுவையாகவும் இருக்கிறது. ஒரு விவாதத்தைக் கருத்து சார்ந்து அடுத்தடுத்த தளங்களுக்கு நகர்த்துவதுதான் அறிவுச் செயல்பாடு. அந்த வகைக் கட்டுரை இது. அடுத்த பகுதியை வாசிக்க ஆவலாக உள்ளேன்.

**பெருமாள் முருகன், ஆத்தூர்**

ந.முத்துமோகன் நேர்காணல் மிக நேர்த்தியாய் வடிவமைக்கப்பட்ட கேள்விகள். இந்திய சூழலில் மார்க்சியத்தை, பொருள்வகைவாதத்தை எப்படி புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கான காத்திரமான விளக்கங்கள். இந்திய சூழலில் மார்க்சியத்தை உட்கொண்ட விதத்தை நம்மை நாமே உரசிப் பார்த்து அறிந்து கொள்ள சலனமற்ற, ஆர்ப்பாட்ட தொனியற்ற உரைகல் -

**டொரன்ஸ் சாமுவேல், கல்கத்தா**

ந.முத்துமோகன் அவர்கள் தேர்ந்தெடுத்த சொற்களால் துல்லியமாக தன் கருத்துகளை வெளிப்படுத்தி இருக்கிறார். பெரியாரை மரபியல் சார்ந்து பார்க்கும் பார்வையும் அகில இந்திய அளவில் அடித்தட்டு மக்களின் நிலத்தடி நீராக சில கருத்தியல்கள் இருப்பதையும் சேர்த்து வைத்து பெரியாரை வாசிக்கவும் விமர்சிக்கவும் வேண்டும்.

**புதிய மாதவி, பம்பாய்**

ஜூன் இதழில் முனைவர் வீ.அரசு அவர்களின் கட்டுரை மிகவும் அருமை. இந்தக் கட்டுரை திராவிட இயக்கம் தமிழ் மொழிப் பயன்பாடு குறித்த புதிய புரிதல்களைத் தந்தது. தொடர்ந்து சிறப்பான கட்டுரைகளை வெளியிட்டு வரும் உங்கள் நூலகம் இதழ் குழுவினருக்கு வாழ்த்துகள்.

**பாத்திமா பீபி, சென்னை**

நம்மைப் பார்த்து நாமே முகம்சுழிக்கும் மனநிலையிலும்கூட எந்தவொரு முகச்சலனமும் காட்டாமல் நம்மை அழகாக்கிக் காட்டும் நாவிதர்களின் வரலாறு அறுவை மருத்துவர்களின் முன்னோடி எனும் இக்கட்டுரை நாவிதர்களைப் பற்றி ஆராய அடுத்த கட்ட நகர்வுக்கு இட்டுச்செல்கிறது.

**ந.சுலோசனா, சென்னை**




# ஈழத்துச் சிறுகதைகள்

அழ. பகீரதன்

**போ**ர் முடிந்தபின் ஈழத்துத் தமிழ்ச்சூழலில் படைப்பு முயற்சிகள் உத்வேகம் பெற்றிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும். நவகாலனித்துவத்தின் நுகத்தடியில் இன்று யாழ்ப்பாணம் தனது இயல் நிலை மாறியிருப்பினும் அதற்கெதிரான காத்திரமான விவாதங்களும் புரிதல்களும் முற்போக்குத் தளத்தில் விரிவாக்கம் பெற்றிருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

70களில் முகிழ்த்த தேசிய கலை இலக்கியப் பேரவை தமிழ் தேசிய அலையில் தன்னை மழுங் கடிக்காமல் ஆரோக்கியமாக இயங்கியதன் பேறாக சமூக விஞ்ஞானவட்டம் ஊடாக அது புத்திஜீவிகள் மட்டத் திலாவது நவகாலனித்துவ புரிதலை விதைத்து ஈழத்து இலக்கியப் போக்கை மக்கள் சார்ந்ததாக - மாற்றத்துக்கு உந்துசக்தியாக மேலும் செழுமைப்படுத்துவதாக அமைந்துள்ளன.

ஈழத்தின் போர்க்காலம் என வரையறுக்கப்படும் 83இலிருந்து 2009 வரையான காலகட்டத்தில் தாயகம் இதழைத் தொடர்ச்சியாக வெளியிட்டு பல ஆக்க இலக்கிய கர்த்தாக்களை சமூக நோக்கில் எழுதுவதற்கு தூண்டி யதிலும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு படைப்பாளிகளுக்கு உத்வேகம் அளித்தமையிலும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பங்கு குறிப்பிடத் தக்கது.

அவ்வகையில் புடமிடப்பட்ட படைப்பாளிகளில் ஒருவராகத்தான் நான் க.சிவகரன் என்ற படைப் பாளியைப் பார்க்கின்றேன். 2013இலிருந்து 2016 வரையிலான சமகாலப் பகுதியில் அவரால் எழுதப் பெற்ற 13 சிறுகதைகளின் தொகுப்பாக தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக யாழ்ப்பாணத்தி லிருந்து வெளிவந்திருக்கின்ற நூல்தான் 'இரங்கி'

முப்பது வருட யுத்தத்தினால் புலம்பெயர்ந்தும் இடம்பெயர்ந்தும் வாழ்ந்த மக்கள் தமது தாயக மண்ணை, பிறந்த மண்ணை தரிசித்து மீள்கின்ற அந்த அனுபவம் அலாதியானது. இந்த அனுபவம் வேறெங்கும் வாய்க்காதது. பனைக்கட்டிக்கூழும், ஒடியல் கூழும் குரக்கன் கூழும், பினாட்டும் புழுக்கொடியலும், நுங்கும் கள்ளும் கருப்பணியும் உண்டுமகிழ்ந்திருந்த 60களினதும் 70களினதுமான அந்தக்காலம் யாழ்ப்பாண மக்களுக்கு பொற்காலம் தான்.


அந்த இளமைக்காலத்தை மீட்கின்ற புலம் பெயர்ந்தோரின் உணர்வினை வெளிப்படுத்துகின்ற வகையில்தான் சிவகரனின் 'இரங்கி' என்ற சிறுகதை அமைந்துள்ளது. இது மாசி மாதம். பனிமூட்டம் கலையாத இதமான குளிர். நாற்பது வருடங்களுக்கு முன்பு இருந்த அதே குளிர். காலை வேளையில் இதமான இரங்கியின் சுகம் அவன் மேனி தழுவிய சூடான அந்தப் பரிசம் அவனை இளமைக் கால நினைவுகளுக்கு இழுத்துச் சென்றது. இந்த நினைவுகளின் வெம்மையும் ஏக்கமும் அவனை ஏங்கவைத்தன... என தொடர்கின்ற அவரது கதையில் இறுதி வரை அவரது அந்த உணர்வை - ஏக்கத்தை பிரதிபலிப்பதாக கதையை நகர்த்திச் செல்கின்றார்.

இளமைக் காலத்துக்காக ஏங்குகின்ற அவன் புலம்பெயர் சூழலின் உலகமயமாதலில் தாக்கத்தில் நுகர்வுக்கலாசாரத்தின் தாக்கத்தினால் அடியுண்டு போனவன். "அவனிடம் நிறையப் பணம் இருந்தது. சர்வதேச வங்கிகளின் பனைமரத்தின் கிளைகளின் 'காட்'டுக்கள் அவனிடம் இருந்தன. அவன் கனடாவின் குடிமகன். பிறந்த நாட்டின் சுற்றுலாப் பயணி'' என அவனது கையறு நிலையை விளக்குகின்றார். படைப்பாளி.

ஆவலோடு வந்த அவனை அந்தக் கிராமத்து மக்கள் எப்படிப் பார்க்கின்றார்கள் என விளக்குகின்றார். 'அவனைக் கண்ட சிலர் பயத்துடன் பார்த்தனர். இவன் காணிகளை விற்க வந்தவனா? அல்லது வாங்க வந்தவனா? என்ன? வேவு பார்க்கின்றான். வேண்டாவெறுப்பாக அவர்கள் சில வார்த்தை பேசினார்கள். அவனுடன் உளமாரப் பேசவில்லை. என்னதான் ஊரவன் என்றாலும் ஓர் அன்னியன் போலத்தான் பார்த்தனர். அவனுடன் கூடவே நடந்தவர்கள், கூடப் படித்தவர்கள், பாடிய வர்கள், ஆடியவர்கள், பள்ளிக்குப் போனவர்கள், மாங்காயைப் பாதி கடித்த பின்பு மறுபாதி உண்டவர்கள் என யாரும் இப்ப இல்லை. அவன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு அவனுக்கு அவன் மட்டுமே இருந்தான்...' என அவன் சொந்த நிலத்திலேயே அன்னியனாக பார்க்கப்படும் அவலத்தை வெளிப் படுத்திச் செல்கின்றார் ஆசிரியர்.

அவன் தேடிச் செல்கின்ற 'இரங்கி'... கடைசியில் ஏமாற்றமே மிஞ்சுகின்றது.

'இரங்கிக் கிணறு பழைய கட்டுக்கிணறு... கிணற்றை இறைத்து வற்றியவுடன் காத்திருக்க வேண்டியது கிடையாது. அரை மணிநேரத்தில் உடனேயே ஊறிவிடும். அதனால் தான் அதற்கு இரங்கி என்ற பெயர் வந்திருக்கவேண்டும். தனது கன்றிற்கு பாலை ஒழித்து வைத்து இரங்கும் பசுவைப்போல அதுவும் இரங்கியது.' என காரணப்பெயர் சொல்லும் அந்தக்கிணறு உண்மையில் யாழ்ப்பாண கிராமத்திலுள்ள கிணற்றின் பெயர் தான் அது. அந்தக் கிணற்றின் பரிதாப நிலையைத்தான் புலம்பெயர் பாத்திரத்தின் வழியாக எமது மனக்கண்முன் கொண்டுவருகின்றார் ஆசிரியர். நவகாலனித்துவம் எவ்வாறு எமது பண்பாட்டு வேரை பிடுங்கி எறிந்துள்ளது என்பதை இந்தக் கதைமூலம்




**இரங்கி**
**ஆசிரியர் : சிவகரன்**
*வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை*
*இல.62, கொக்குவில் சந்தி,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.*

எம்மை சிந்திக்கத் தூண்டுகின்றார். சூழலியல் கேடாக இன்று பாவித்துவிட்டு வீசி எறி என்ற நிலையில் சுத்தம் பேணும் பண்பாட்டிலிருந்து தூர வீசப்பட்டவர்களாக யாழ்ப்பாண மக்களை நவதாராளவாதம் ஆக்கிவிட்டிருக் கின்றது. இயற்கை வேளாண்மை மட்டுமா பறி போயிற்று. எங்கள் மண்ணின் அழகும் இளமையும் வளமும் தான் பறிபோயிற்று என்ற உணர்வை தூண்டும் வகையில் அமைந்துள்ளது சிறுகதை.

நஞ்சுண்ட கண்டன் சிறுகதை யாழ்ப்பாணத்தின் இன்னொரு சூழல் பிரச்சனையை கண்முன் கொண்டு வருகின்றது. நிலத்தடி நீர்வளம் மிக்கது யாழ்ப்பாண மண். அந்த வளத்தை நாசமாக்கும் வண்ணம் மின்சார பிறப்பாக்கி கழிவோயிலை கிடங்கு வெட்டி நிலத்தின் கீழ் செலுத்தியிருக்கின்றார்கள், மின்சாரம் வழங்கும் தனியார் கம்பனியினர். அதனால் சுண்ணாகம் பிரதேசத்திலுள்ள வீட்டு கிணறுகள் எங்கும் கழிவோயில் கலந்த நீர் படிவுகள்... இதன் தாக்கத்தை வெளிப் படுத்தும் விதத்தில் கதையை நகர்த்திச் செல்கின்றார்.

''சுண்ணாக மண்ணடியில் விரியும் விசம் குடித்த பெரும் பாம்பு ஒன்று வளர்கிறது. பார்த்தாயா? கொடிய நீண்ட பாம்பு நாளும் வளர்கிறது. கல்லுடலில் கரிய 'பங்கர் ஓயில்' குடித்து ஊதிப்பெருத்திருக்கும் கொடிய நீர்ப்பாம்பு உன் கண்ணில் தெரியவில்லையா! சுண்ணக் கல்லிடையே செருகி நீண்டு பெருத்திருக்கும் அதை சுண்நாகம் அன்றி வேறென்ன சொல்வது. அப்பனே உன் ஆலயத்தின் முன்னே அன்னியரின் வேலையைப் பார்..." என நகர்ந்து செல்லும் சொல்லோவியம் கண்முன்னே பல காட்சியனுபவங்களை தரவல்லதாக அமைந்துள்ளது. மக்கள் போராட்டத்தை காட்சிப் படுத்தும் இந்தச் சொல்லோவியம் முடிவில் அதிகாலைக் கனவு என காட்டுவது எவ்வளவு பொருத்தப்பாடு உடையது என எனக்குள் குழப்பம். காலையில் கண்ட கனவு பலிக்கும் என்ற நம்பிக்கையோ அறியேன். இருப்பினும் சொல்லும் பாணியும் வர்ணிப்பும் யாழ்ப்பாண மண்ணின் வாசத்தை மூக்கு நுனிக்குக் கொண்டுவருவதாக அமைந்துள்ளது.

அஸ்தினாபுரம் சிறுகதை இதிகாச கதையை இலகு தமிழில் சொல்லும் முயற்சியல்ல. மாறாக, பாரதப் போரின் தாக்கங்களை மக்கள் நிலையில் மக்களை முன்னிறுத்திக் கூறுவது. மாண்டு மடியப்போகின்ற போர்வீரனின் மனக்குமுறலாக எம்முன் விரிகின்றது.

"தருமா... நீயா? நாட்டை வைத்து ஆடி இழந்து விட்டாய். உன்னுடைய! யார் சொன்னது என்னுடைய நாட்டை வைத்து ஆட எப்படி உனக்கு மனம் வந்தது. மன்னன் என்றால் எதையும் வைத்து ஆடலாம் என்ற மமதையா! ஆட அழைத்தால் ஆடத்தான் வேண்டு மென்ற செருக்கா! நீயும் ஆளவந்தவன் தானோ. உன்னை நம்பி ஓடி வந்த ஓட்டம் ஓயு முன்னர் நீ நாட்டை வைத்து ஆடி நடுத்தெருவில் என்னை விட்டு விட்டாயே..."

வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து முள்ளி வாய்க்கால் வரை நீண்டு இன்றுவரை ஆண்ட பரம் பரையாக வலம் வந்துகொண்டிருக்கும் தமிழ்த்தேசிய தலைமைகள் சர்வதேசிய சூழ்ச்சி வலைக்குள் ஆட்பட்டு நிற்கும் எமது நிகழ்கால நிலையை தெட்டத்தெளிவாக காட்டும் சொற்சித்திரமா இக்கதை என நினைக்கத் தோன்றுகின்றது.

தேரோட்டம் - அழித்தல் தொழிலைக் குறிக்கும் சடங்கு. யாழ்ப்பாணத்தில் அழித்தல் தொழிலான போர் முனைப்புற்று ஓடி வன்னிக்கு சென்றபோது நட்பாகிக் காத்தவன் நண்பன். இவன் வன்னி கோர யுத்தம் தொடருமுன் மீண்டுவிட்டான். ஆனால் அந்த நண்பன் வன்னியில் கோர யுத்தம் தொடங்கி செல்வீச்சில் ஒரே நாளில் பங்கருக்குள் இருந்த மனைவி பிள்ளைகளைக் காவு கொள்ள, பைத்தியமாக்கப்பட்டு ஊர்தோறும் தேர் திருவிழாக்களில் இப்போது விளையாட்டு பொம்மை களை வியாபாரம் செய்யும் அந்த நண்பனை கோயில் தேர்முட்டியடியில் தேடும் கதை நேர்த்தியாகப் பின்னப்பட்ட சொற்கோர்வைகளால் கொண்டுசெல்ல நாமும் ஆசிரியரின் பின்னால் திரிய கதை எம்முன் காட்சியாய் விரிகின்றது. போர் மீண்டும் மீண்டும் தொடரும் என்பதையா இந்தத் தேரோட்டம் குறித்து நிற்கின்றது. தேர்த்திருவிழா என்ற பகட்டில் சுரண்டிக் கொழுப்போர் மகிழ்ந்திருக்க எத்தனை எத்தனை ஆயிரம் உயிர்கள் மாய்கின்றன.

கொத்தி- யாழ்ப்பாணத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதிய உணர்வை நாசூக்காகச் சொல்லு கின்ற கதை. வாசிப்பவனையும் கற்பனை செய்யத் தூண்டுகின்ற வகையில் விவரிப்பு.

இன்னொரு சித்திரம் காடேறி. காடேறிநாதர் என்ற சிறுதெய்வ வழிபாட்டை ஒட்டி கதை விரிகின்றது. யாழ்ப்பாணத்தை பறங்கியர் ஆண்டபோது அதை எதிர்த்து நின்ற, போர்புரிந்த மறவரின் கதை காதல் இழையோட அழகிய ஓவியமாய் விரிகின்றது.

பிறந்தும் பிறவாமலும், சர்க்கரை போட்ட பொங்கல், ஈச்சமரக்காடு, ஜீவா, மின்னல், தரிசனம். சூரியகுலம் என இன்னும் சிறுகதைகளைத் தாங்கி வந்திருக்கும் இரங்கி சிறுகதைத் தொகுப்பு ஐம்பது வயதான சி.சிவகரன் என்ற படைப்பாளியின் பாண்டித்தியத்தையும் சொற்சித்திரம் வரையும் திறனையும் கற்பனை வளத்தையும் தெளிவாகக் காட்டு வதாகத் திகழ்கின்றது.

இந்தப் படைப்பாற்றல் சமூக நோக்கோடு மிளிரும்போது மேலும் வீச்சுப்பெறுகின்றது. ●

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2017

*29-வது ஆண்டாக படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது

- *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2013-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2016, 2017-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- *பரிசுக்கான 8, 9ஆவது பிரிவுக்கு 2016, 2017-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2012-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின் இரு படிகள் அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- *படைப்புகளை **31-07-2017**-க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*


**முனைவர் நா. இராமச்சந்திரன்,**

**55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி – 627 007**

*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com

| **இரா. காமராசு** | **சி. சொக்கலிங்கம்** | **நா. இராமச்சந்திரன்** |
|---|---|---|
| மாநிலப் பொதுச் செயலாளர் | மாநிலத் தலைவர் | செயலாளர் – இலக்கியக் குழு |

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்




**தனித்து ஒலிக்கும் குரல்** (ஆ.சிவசுப்பிரமணியன் நேர்காணல்கள்)

**தொகுப்பும் பதிப்பும் : க.காமராசன்**

விலை : ₹ 200/-

தமிழ்ச்சூழலில் நன்கறியப்பட்ட மார்க்சியத் திறனாய்வாளரும் வரலாற்றாய்வாளருமான பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் பல்வேறு இதழ்களுக்கு அளித்த நேர்காணல்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. அரிய தகவல்களின் பொக்கிஷமாக விளங்கும் இந்நேர்காணல்கள் கால வரலாற்றைப் பிரதி செய்கின்றன.




**அழிவின் விளிம்பில் அந்தமான்**

**பேராசிரியர் பொ.முத்துக்குமரன்**

**முனைவர் ம.சாலமன் பெர்னாட்ஷா**

அழிவின் விளிம்பில் உள்ளவை என்பது தாவர, விலங்கு, பறவைகளுக்கு மட்டும்தான் என்றில்லை; பூர்வகுடிகளுக்கும் தான். ஒரு பூர்வகுடி இனம் அழிந்தால் ஒரு மனித இனம், அதன் நாகரிகம், கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகிய அனைத்தும் அழிந்துபோகும் என்பதை அந்தமான் சூழலிலிருந்து எச்சரிக்கை விடுக்கும் நூல்.




**ஈழ யுத்தத்தின் சாட்சிகள்**

**சூ.ம.ஜெயசீலன்**

விலை : ₹ 180/-

ஈழத்தில் முள்ளிவாய்க்கால் போருக்குப் பின்பாக ரத்தவாடை வீசிய அந்நிலத்திற்கு நேரில் சென்று போரில் தப்பிப் பிழைத்த தமிழர்களுடன் கண்ணீரும் கதறலுமான சூழலில் நடத்திய உரையாடல்களும், பிணக்குவியல்களுக்கிடையில் நடைபிணமாக வாழ்ந்த அம்மனிதர்களின் உயிரை உலுக்கச் செய்யும் அனுபவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ள நூல்.




**பனை விடிலி**

**சி.கணேசன்**

விலை : ₹ 200/-

இது ஒரு மனிதனின் கதையல்ல. ஒரு சமூகத்தின் கதை. நேற்றைய மனிதர்களின் கதை. இன்றைய மனிதர்களின் ஆணி வேரை அறிய விரும்புபவர்கள் படிக்க வேண்டிய நாவல்.. 1940களுக்குப் பின் சமூகத்தில் ஒடுக்கப்பட்டுக் கிடந்த நாடார் சமூகம் பொருளாதார ரீதியில் எப்படி முன்னேறியது என்பதன் ஆவணம் இந்நூல்.




**ஆரவல்லி மலைத்தொடரின் அழகிய குரங்குகள்**

**முனைவர் பா.ராம் மனோகர்**

விலை : ₹ 80/-

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூர் நகரில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைத்தொடரில் குரங்குகளை ஆய்வு செய்த தகவல்கள் அடிப்படையில் எழுதப்பட்டது இந்நூல். குரங்குகளின் சமூக வாழ்க்கை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் மற்ற விலங்குகளுடன் ஒருங்கிணைத்தல், அரிய பண்புகள் போன்றவற்றைப் பற்றி அறிந்துகொள்ள மேற்கொள்ளப்பட்ட அரிய முயற்சி.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்





### டாக்டர் அம்பேத்கரின் பொருளியல் சிந்தனைகள் - ஓர் ஆய்வு

**முனைவர் இரா.நடராசன்**

விலை : ₹ 130/-

அம்பேத்கரின் பல்வேறு வாழ்வியல் பரிமாணங்களையும் வாழ்க்கை வரலாற்றையும் பல்துறை சார்ந்த அவரின் சிந்தனைகளையும் படம் பிடித்துக் காட்டும் நூல். இந்திய சமூக மாற்றத்திற்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காகவும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் அவர் கையாண்ட வழிமுறைகளை பதிவு செய்துள்ளது இந்நூல்.




### கோட்பாட்டியல் நோக்கில் சிலப்பதிகாரம்

**முனைவர் அ.அறிவுநம்பி**

விலை : ₹ 70/-

சிலப்பதிகாரத்தை நோக்கரிய நோக்கும், நுணுக்கரிய நுண்ணுணர்வும் கொண்டு ஆய்வு செய்து படைக்கப்பட்டிருக்கும் இந்நூல், ஆய்வுலகில் புதிய புதிய வாயில்களைத் திறந்துவைத்தால், அவற்றின் வழியே மேலும் பல புத்தாராய்ச்சிகளுக்குள் புக முடியும் என்பதற்கு தக்கதோர் எடுத்துக்காட்டு இந்நூல்.




### மறைத்துப் பேச என்ன இருக்கு?

**அழகியல் பெரியவன்** (நேர்காணல்கள்)

விலை : ₹ 135/-


சிறுகதை, நாவல், கட்டுரைகள் எனத் தொடர்ந்து தனித்துவப் படைப்பாளியாக விளங்கிவரும் அழகிய பெரியவனின் நேர்காணல்களின் தொகுப்பு நூல். பல்வேறு இதழ்களில் வெளிவந்த இந்நேர்காணல்களில் அவரது படைப்புகளைப் பற்றியும் சாதி மற்றும் தலித் இலக்கியம் குறித்த அவரது பார்வைகளும் விரிவாக இடம்பெற்றுள்ளன.




### கம்போடிய ராமாயணம்

**மாத்தளை சோமு**

கம்போடிய நாட்டில் விளங்கிவரும் ராமாயணத்தின் சுருக்கமான கதை வடிவமே இந்நூல். வால்மீகி மற்றும் கம்ப ராமாயணங்களிலிருந்து பல வகையான மாற்றங்களுடன் கதாபாத்திரங்கள் அமைந்துள்ள இக்கதையில் அனுமனுக்குத் திருமணமாகிக் குழந்தை பிறப்பது போன்ற பல வித்தியாசமான புனைவுகள் இடம்பெற்றுள்ளன.




### சோழமண்டலக் கடற்கரையும் தமிழகமும்

**எஸ்.ஜெயசீல ஸ்டீபன்**

**தமிழில்: ரகு அந்தோணி**

போர்த்துக்கீசியர் வருகையினால் காலனிய ஆதிக்கம் தொடங்கிய காலகட்டத்தின்போது சோழமண்டலக் கடற்கரை மற்றும் அதன் உள்நாட்டுப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி, சமுதாய சூழ்நிலை, ஆட்சி மாற்றம் போன்றவற்றை உலகளாவிய பார்வையில் கண்டுணர்ந்து எழுதப்பட்ட நூல்.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்




**நண்டு சொன்ன நகைச்சுவை கதைகள்**

**கே.நல்லசிவம்**

விலை : ₹ 90/-

மனம் தளர்ந்த இளைஞன் ஒருவன் நண்டு கூறுகின்ற கதைகளைக்கேட்டு மாற்றமடைகின்றான். அக்கதைகள் அவன் வாழ்க்கைப்பாதைக்கு வெற்றியை வகுத்ததோடு வாசகர்களின் வாழ்க்கைக்கும் வெற்றிகளைக் குவித்திட வழிகாட்டியாக இருக்கிறது.




**ஒப்பாய்வில் பாரதி**

**கி.நடராஜன்**

விலை : ₹ 70/-

மொழி, நாடு, பெண்ணுரிமை, தத்துவம், கல்வி எனப் பலவற்றையும் தெளிவாகச் சிந்தித்து தீர்க்கதரிசியைப்போல கவிதை பாடிய பாரதியின் படைப்புகளை உலகக்கவிஞர்களான ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, கீட்ஸ், பைரன் ஆகியோரது படைப்புகளுடன் ஒப்புமைப்படுத்தி ஆராயும் ஒப்பாய்வு நூல்.




**சிறகின் நிழல்**

**முனைவர் இரா.வெங்கடேசன்**

விலை : ₹ 100/-

சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியப்படும் பழந்தமிழ் மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை இன்றைய சூழலியல் துறையோடு ஒப்பிட்டுப் பார்த்து அவர்தம் வாழ்க்கை அணுகுமுறையையும் தொழில்நுட்பச் சிறப்புகளையும் ஆய்ந்தறியும் ஆய்வு நூல்.




**தீவிரவாதம்** (நமது காலம் கொலைகளில் விடிகிறது)

**ஹெச்.ஜி.ரசூல்**

விலை : ₹ 65/-

இந்துத்துவ பாசிச சக்திகளின் அசுரத்தனமான வளர்ச்சியினாலும் மதவாத பிஜேபி சர்க்காரின் சூழ்ச்சிகரமான நடவடிக்கைகளாலும் இந்திய அளவில் பெருகிவரும் தீவிரவாதச் செயல்களை விரிவாகக் கண்டனம் செய்யும் கட்டுரைகளின் தொகுப்பு. சிறுபான்மையினர் மற்றும் தலித் மக்களுக்கெதிரான போக்கை விமர்சனம் செய்கின்றன இக்கட்டுரைகள்.




**அனசன்** (என் வாழ்க்கை ஓர் அழகான கதை)

**தமிழில்: த.தர்மகுலசிங்கம்**

தேவதைக் கதைகளின் தந்தை என்றறியப்படும் ஆண்டர்சன் எனும் அனசனின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகச் சொல்லும் நூல். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்த கலை இலக்கியச் சூழலையும் அக்காலத்தில் வாழ்ந்த எழுத்தாளர்களைப் பற்றி மட்டுமல்லாமல், இசைமேதைகளையும், சிற்பிகளையும் அறிமுகப்படுத்துகிறது இந்நூல்.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்




**நட்பாட்டம்**

**ஆத்மார்த்தி**

ஆனந்த விகடன் வார இதழில் தொடராக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்ற குறுங்கவிதைகளின் தொகுப்பு. நட்பின் ஆழத்தையும் வீச்சையும் முக்கியத்துவத்தையும் நெருக்கத்தையும் தவிப்பையும் நுட்பமாகப் பேசும் நட்பூக் கவிதைகள் இதமும் பதமுமானவை.




**வியட்நாம் காந்தியும் ஹனாய் வார்தாவும்**

**வெ.ஜீவானந்தம்**

விலை : ₹ 100/-

வியட்நாமின் புரட்சிகர விடுதலை இயக்கத்தை முன்னின்று நடத்தி பிரெஞ்சுப் படைகளை வென்று வடக்கு வியட்நாமின் பிரதமராகவும் அதிபராகவும் விளங்கிய ஹோ சி மின்னின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுத்து வெளிவரும் இந்நூல் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.




**வாடகைத் தொட்டில்**

**ஜி.பிரெஜ்ஸென்**

**தமிழில்: யூமா வாசுகி**

விலை : ₹ 100/-

இயற்கைக் குறைபாடுகளின் காரணமாக குழந்தை பெற இயலாத தாய்மார்களுக்காக கணவன் மனைவியின் உயிரணுக்களைப் பயன்படுத்தி கரு உருவாகச் செய்து அதனை வேறு பெண்ணின் கர்ப்பப்பையில் வைத்து வளர்க்கும் வாடகைத் தாய் முறையில் நிலவிவரும் மோசடிகளையும் இந்திய மருத்துவமனைகளின் ஈவு இரக்கமற்ற கொடுமைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் சமூக அறிவியல் நூல்.





**ஒளியாய் இருக்க வருவாயாக**

**எஸ்.புனிதவல்லி**

விலை : ₹ 120/-

காதலித்தவனைக் கைப்பிடித்து வசதி படைத்த வீட்டுக்கு மருமகளாகச் செல்லும் ஏழைப்பெண் எதிர்கொள்ளும் சிக்கல்களும் அடுத்தடுத்து நிகழும் சம்பவங்களும் விறுவிறுப்பாகவும் சுவாரஸ்யமாகவும் எழுதப்பட்டுள்ளது. ஆண் பெண் மனவுணர்வுகளையும் அவற்றைப் புரிந்துகொள்ளலையும் விரிவாகப் பேசும் புதினம்.




**வித்தியாசமான ஆங்கில ஒருமை பன்மை நௌன்கள்**

**தொகுப்பு : ஒய்.பி.சிவா**

ஆங்கிலம் கற்பவர்கள் அவசியம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் நௌன் எனும் பெயர்ச்சொல்லின் ஒருமை பன்மை வித்தியாசமாகும்.. ஒருமை நௌனிலிருந்து பன்மை நௌன்கள் அகர வரிசைப்படி இந்நூலில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்





**விடுதலை வேள்வியில் மதுரை**

**ந.பாண்டுரங்கன்**

விலை : ₹ 90/-

பாண்டியர் காலம், நாயக்கர் காலம் தொடங்கி இந்திய விடுதலைப்போராட்ட காலம் வரை மதுரையின் புகழ் பேசுகிறது இந்நூல். இந்திய விடுதலை வேள்வியில் மதுரையில் நடைபெற்ற கலவரங்கள், போராட்டங்கள், அதில் பங்கேற்றவர்கள், சிறைத் தண்டனை பெற்றவர்களைப் பற்றிய அறியப்படாத பல புதிய தகவல்கள் ஆதாரங்களுடன் இடம் பெற்றுள்ளன.





**கடல் அடி**

**குறும்பனை சி.பெர்லின்**

விலை : ₹ 95/-

கடலோர கிராமங்களில் வாழும் மனிதர்களின் மீன்பிடி வாழ்க்கையை உவப்பும் கரிப்புமாக கண்ணீரும் கவலையுமாகப் பதிவாகியுள்ள இயல்போட்டத்தில் சமுத்திரத்தின் பேரலைகளாக வாசகனை அலைக்கழிக்கும் இந்நாவற்பிரதி அச்சு அசலான அம்மக்களது மொழியிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது.





**தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்**

**தேர்வும் தொகுப்பும்: ந.முருகேசபாண்டியன்**

விலை : ₹ 110/-

வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டு பல்வேறு இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளில் குறிப்பிடத்தக்க சிலவற்றின் தொகுப்பு நூல். வித்தியாசமான ஆளுமைகளைக் கொண்ட மனந்தொட்ட மனிதர்களைப் பேசும் இக்கதைகளை ந.முருகேசபாண்டியன் தேர்ந்தெடுத்துத் தொகுத்துள்ளார்.




**வெள்ளம்** (நாடகம்)

**மா.கமலவேலன்**

விலை : ₹ 65/-

மதுரை வானொலி நிலையத்தில் ஒளிபரப்பான வெள்ளம் மற்றும் கவிதை ஆகிய நாடகங்களின் உரைத் தொகுப்பு. இவ்விரண்டு நாடகங்களும் நடுத்தர மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.





**எளிய இயற்கை மருத்துவமும் பயனுள்ள சமையல் குறிப்புகளும்**

**திருமதி முனைவர் பூமா பொன்னவைக்கோ**

விலை : ₹ 50/-

சின்னச்சின்ன உடல் நலிவுகளுக்கும் உடல் பராமரிப்புக்கும் இயற்கை மருத்துவ முறையில் எளிய முறையினாலான வழிகாட்டுதல்களைக் கூறும் இந்நூலில் விதவிதமான ஆரோக்கியமான உணவு தயாரிப்புகளும், பொடி வகைகளைத் தயார் செய்வது குறித்தும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்




### தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த, சமண அறங்களும்

**முனைவர் சு.மாதவன்**

விலை : ₹ 250/-


பௌத்த சமணக் கோட்பாடுகளை விரிவான களத்தில் எடுத்துவைத்து அவற்றின் பன்முகத் தன்மைகளை விளக்கும் இந்நூல், தமிழ் அற இலக்கியங்களில் அவற்றை ஒப்பிட்டும் உறழ்த்தும் பார்ப்பதற்கான வாயில்களைத் திறந்துவைக்கிறது.




### இன்னும் மனிதர்கள்

**சேஷையா ரவி**

2000ஆம் ஆண்டுக்கு முன்னதாக எழுதப்பட்ட பதினைந்து சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுப்பு நூல் மனிதமனங்களின் உள்மொழியை அப்பட்டமாக வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. வெவ்வேறு விதமான மனிதர்கள் வெவ்வேறு மாதிரியான வாழ்க்கை என்பதை உணர்த்தும் கதைகள்.




### Tamil Sangam Women Poet in Translation

**Translated by: Dr.K.S.Subramanian**

விலை : ₹ 210/-

பண்டைத் தமிழர்தம் இயற்கையமைப்பையும் அக்கால வாழ்முறையையும் உணர்த்தும் சங்க இலக்கியங்களில், 40 பெண் கவிஞர்கள் எழுதியுள்ள 184 பாடல்கள் இடம் பெற்றுள்ள இந்நூலை கே.எஸ்.சுப்ரமணியன் சீரிய முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தொகுத்தளித்துள்ளார்.





### பாரதி வாழ்கிறார்

**பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன்**

விலை : ₹ 100/-

தான் வாழ்ந்த காலத்தோடு முடிந்துவிடாத கவிஞனாக விளங்கிய பாரதியின் குரலும் மொழியும் இன்றும் புதுமையும் புரட்சியும் உடையனவாக விளங்குகின்றன என்பதை நிறுவும் கட்டுரைகளின் தொகுப்பு நூல். பாரதி எனும் ஆளுமையின் அளப்பரிய பல பரிமாணங்கள் உயிர்ப்புடன் பதிவாகியுள்ளமை இந்நூற் சிறப்பு.





### யாதும் ஊரே யாவரும் கேளிர்

**முனைவர் ஜி.ஐசக் அருள்தாஸ்**

விலை : ₹ 100/-

சங்க இலக்கியம் முதல் தற்கால புதுக்கவிதை இலக்கியங்கள் வரையிலான புதுமையான நோக்கில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு. இலக்கியம், மனிதநேயம், பெண்ணியம், மாணவர் நலன், திராவிட மொழிகள் உள்ளிட்ட பல பகுப்புகளில் விரிவான தகவல்கள் சிந்தனைகளைத் தூண்டும் வண்ணம் அமைந்தவை.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்




**பேரா.சே.ராமானுஜத்தின் நாடக வாழ்க்கை (1935-2015)**

**தொகுப்பு: சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்**

நாடகத் துறையில் தனிப்பெரும் ஆளுமையாக விளங்கிய பேராசிரியர் சே.ராமானுஜத்தின் நேர்காணல்கள் மற்றும் அவரை நன்கறிந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் அவரைப் பற்றிய ஆளுமைப் பண்புகளை விவரிக்கும் கட்டுரைகள் என பேராசிரியரின் முழுமையான சித்திரத்தைப் புரிந்துகொள்ள இந்நூல் துணை நிற்கிறது.




**தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு**

**முனைவர் கு.சேதுராமன்**

விலை : ₹ 480/-


தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம், பண்பாடு மற்றும் கலை வரலாற்றைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து ஆய்வு அடிப்படையில் வரையப்பட்டதே தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு என்னும் இந்நூல்.




**அம்பேத்கரும் திராவிடர்தான்**

**கவின்மலர்**

இந்தியாவில் மேதா பட்கர், மேரி கோம், ஆனந்த் டெல்டும்டெ மற்றும் தமிழ்நாட்டு அரசியல் ஆளுமைகளான ராமதாஸ், திருமாவளவன், புனித பாண்டியன், சுப உதயகுமார் மற்றும் நாடகவியலாளர் பிரளயன் உள்ளிட்டோரின் நேர்காணல்களின் தொகுப்பு நூல். இவை வெவ்வேறு அச்சிதழ்களில் வெளியாகி மிகுந்த கவனம் பெற்றவை.




**ஹோமாய்** (இந்தியாவின் முதல் பெண் போட்டோ - ஜர்னலிஸ்ட்)

**கவின்மலர்**

ஓவியம், புகைப்படம், நாடகம், இலக்கியம், சினிமா, விளையாட்டு, சமுகம் உள்ளிட்ட பல்வேறு கலை இலக்கிய அரசியல் தளங்களில் ஆழமான முத்திரைகளைப் பதித்த தனித்துவ ஆளுமைகளைப் பற்றி அறியப்படாத பல விரிவான தகவல்களுடன் சுவாரசியமாகத் தொகுக்கப்பட்ட நூல்.




**பசுமை அரசியல்**

**சுப்ரபாரதிமணியன்**

விலை : ₹ 70/-

சுற்றுச்சூழல் சார்ந்த பல்வேறு விஷய பரிமாணங்களைக் கொண்டு பசுமை அரசியலை இயக்கமாக முன்வைக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் இந்நூல், பழங்குடி குரல், பசுமை இலக்கியப் படைப்புகள் பற்றிய பார்வைகள், பசுமைப்பிரச்சினைகளைப் பேசும் சில திரைப்படங்களையும் அறிமுகம் செய்விக்கிறது.

# 2017 ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நியூ செஞ்சுரி வெளியீடுகள்




**பெரியபுராணம் - சமூகப் பின்னணியும் மனித உறவுகளும்**

**த.தியாகராசன்**

விலை : ₹ 195/-

பக்தி இயக்கம் கண்ட புதிய சைவம், அது கண்ட சாதியம் கடந்த உலக மானுடம் குறித்த பனுவலாகப் பெரியபுராணம் விளங்குவதையும் அதன் தோற்றத்தையும் ஆய்ந்து மதிப்பிடும் நூல். தமிழ் தேசியத்தின் ஆன்மீயத் திரட்சி, அது கண்ட மானுட எழுச்சி - அவற்றுக்கான ஒரு பேரிலக்கியம் மலர்ந்த நிலைகளை இந்நூல் புதிய கோணங்களில் விவரித்திருக்கிறது.




**பளிச்சின்னு பற்களுக்கொரு மாற்றம்**

**M.பழனியப்பன், P.L.பழனியப்பன்**

சித்தமருத்துவ அடிப்படையில் பற்களைப் பராமரிக்கும் முறைகளையும் பல் பாதுகாப்பு வழிகளையும், பல் நோய்களுக்கான எளிய சிகிச்சை முறைகளையும் விளக்கும் இந்நூலில் சித்தர்களின் பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள மருத்துவக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.





**ஓடும் நதி**

**சுப்ரபாரதிமணியன்**

விலை : ₹ 235/-

வாழ்வின் சுழல்களுக்கு தாக்குப்பிடித்து அதன்போக்கில் அலைவுறும் வெவ்வேறு வகையான பெண்களை அதன் யதார்த்தங்களோடு பதிவு செய்யப்பட்டுள்ள இந்நாவல் நாகாலாந்து மலைகிராமம், செகந்திராபாத் நகரம், திருப்பூர் ஆலைக்கூடங்கள் என மூன்று விதமான வாழ்க்கைப்பாடுகளை அதனதன் உயிர்ப்போடு சொல்லிச்செல்கிறது.




**சுற்றுச்சூழல் பயில்வுகள்**

**முனைவர் சி.சேதுராமன்**


சுற்றுச்சூழல் பற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் வண்ணம் பல்வேறு தகவல்களுடனும் விளக்கப் படங்களுடனும் புதுமையான தகவல்களோடும் எழுதப்பட்டுள்ள இந்நூல் சுற்றுச்சூழல் குறித்த விரிவான தகவல் களஞ்சியமாக அமைந்துள்ளது.




**தனுஷ்கோடி ராமசாமியின் படைப்பாக்கத் திறன்**

**முனைவர் பா.அகிலா**

கவிதை, சிறுகதை, குறுநாவல், புதினம், கட்டுரை, மேடைப்பேச்சு எனப் பன்முக ஆளுமையாகத் திகழ்ந்த எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமியின் ஒட்டுமொத்தப் படைப்புகளையும் விரிவாகவும் ஆழமாகவும் நுட்பமாகவும் ஆய்வு செய்து எழுதப்பட்ட நேர்த்தியான ஆய்வு நூல்.



# தந்தை பெரியாரின் பணி தென்னை – பனையைப் போன்றது

## ச. சுபாஷ் சந்திரபோஸ்

**நேர்காணல் : க.காமராசன், ஜி.சரவணன்**

தஞ்சை மாவட்டக் கிராமமொன்றில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ச.சுபாஷ் சந்திரபோஸ் தமிழ்த்துறையில் பயின்று முனைவர் பட்டம் பெற்று, இலக்கண மொழியியல் ஆய்வுகள், படைப்பிலக்கியங்கள், நாட்டார் வழக்காறு, களஆய்வுகள் எனப் பல்வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருப்பவர். திருவையாறு அரசர் கலைக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், 'மாவீரன் வாட்டாக்குடி இரணியன்', 'சாம்பவான் ஓடைச் சிவராமன்', 'மலைப் பாம்பு மனிதர்கள்' ஆகிய புதினம் உட்பட 64 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஓய்வுக்குப் பிறகும் மொழியியல் நூல்களை வெளியிடத் திட்டமிட்டு அதற்கான தயாரிப்பில் அவர் இயங்கிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நேர்காணலுக்காக அவரைச் சந்தித்தோம். இனி அவருடனான உரையாடல்.

**எப்போது, எங்குப் பிறந்தீர்கள் என்பவை தொடங்கி உங்கள் குடும்பச் சூழல் பற்றிச் சொல்லுங்கள்?**

*தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு வட்டத்தைச் சார்ந்த ஒக்கநாடு கீழையூர் பிறந்த ஊர். ஒக்கூர் என்று தான் பேச்சு வழக்கில் கூறப்படும். புது ஆற்றுப் பாசனம் வருவதற்கு முன் ஒரு வானம் பார்த்த பூமி தான். காலங்காலமாக உழைப்பு, உழைப்பு என்று உழைப்பைத் தவிர வேறு ஒன்றையும் அறியாதவர்கள் எங்கள் பகுதி மக்கள்.*

*புஞ்சைச் சாகுபடியைச் செய்து விட்டுப் பத்துப் பேர், இருபது பேருக்குக் குறையாத கூட்டுக் குடும்ப மக்கள் அந்த மண்ணில் கிடந்துதான் உழல்வார்கள். இப்போது குத்துக் கடலை என்று ஒன்று சாகுபடி செய்யப்படுகின்றது. அந்தக் காலத்தில் கொடிக் கடலை என்பது சாகுபடி செய்யப்படும். மிதி பாகல் கொடி போலப் பூமியில் பரவி வளரும். அதைக் கையாடும்போது கொடியில் வரும் கடலையை விடப்*

பூமியில் தங்குவதே அதிகம். அதைக் குடும்பமே சீய்த்து எடுக்கும்! ‘உழுதவன் கணக்குப் பாத்தா ஓழக்குக்கூட மிஞ்சாது’ என்பது பொதுவான சொலவச் சொல்லாக இருந்தாலும் கடலையைச் சீய்த்து எடுப்பதற்கு மிகவும் பொருத்தமானது.

புழுதியில் போட்டதைத் தேடுவதைப் போலக் களைக் கொட்டால் கொல்லையை வெயிலிலும் வேனலிலும் நெற்றி வியர்வை நிலத்தில் கொட்டச் சீய்ப்பார்கள். பத்துப் பேர் சீய்த்து எடுத்தாலும் ஒரு நாளைக்கு அரை மூட்டை அளவுக்குக்கூடச் சேராது. அவர்களுடைய உழைப்புக்கும் அதனால் கிடைக்கும் பலனுக்கும் தொடர்பே இருக்காது. விற்கப் போனால் வியாபாரி கொடுப்பதுதான் விலை.

1930களில் புது ஆற்றுப் பாசனம் வந்தும் மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றம் வர வில்லை. காலங்காலமாக இருந்த மரமட்டைகள், மூலிகைச் செடிகள் எல்லாம் அழிந்தன. புஞ்சைக் காட்டை நஞ்சையாக்க முயன்ற அந்நியரைப் பாராட்ட வேண்டும். அவர்கள் பிள்ளையாராகப் பிடித்துக் கொடுத்து விட்டுப் போனார்கள். நம்ம வர்கள் காலத்தால் அது குரங்காகிப் போனது. பழைய ஆற்றுப் பாசனப் பகுதியில் காவிரி நீர் வராமல் போன பிறகுதான் காவிரிப் பிரச்சினை பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால் புதாற்றின் கடைமடைப் பகுதியில் எப்போதுமே தண்ணீர்த் தட்டுப்பாடு தான்.

புதாற்றுப் பாசனத்தில் விவசாயம் செய்பவர் களுக்கு ஐந்து மா, பத்து மா, ஒரு வேலி என நிலம் இருந்தது. ஆனால் நீர் தட்டுப்பாடு. எங்கள் பகுதிக்குக் கிழக்கே தான் கீழத் தஞ்சை. தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட திருவாரூர், நாகப்பட்டிண மாவட்டங்கள் கீழத்தஞ்சையைச் சார்ந்தவை. பழைய ஆற்றுப் பாசனத்தில் பத்து லட்சம் ஏக்கருக்கு மேல் சாகுபடி நிலம் இருந்தது. காவிரியின் பல கிளை நதிகளும் அந்தப் பகுதியில் தான் பாய்ந்தன.

‘நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளை யாடும் தஞ்சை’ என்னும் வாசகத்தை முன்பு மேடைப் பேச்சுகளில் அடிக்கடி கேட்கலாம். புஞ்சை கொஞ்சி எனப் பேசுப்படுவது எதுகை மோனைக்குத்தான். ஆனால் நஞ்சை கொஞ்சி விளையாடியது உண்மைதான். ஆனால் அதில் பாடுபட்ட பாட்டாளி மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் இரங்கத்தக்கது; கொடுமையானது. ஆய கலைகளும் வளர்க்கப்பட்ட இந்தப் பகுதியில்தான் பாட்டாளி மக்களுக்குச் சாணிப்பால் கொடுக்கும் அவலங்களும் நிகழ்ந்தன.

பெரும்பாலான பகுதி நிலங்கள் பண்ணை, கோயில், மடங்களுக்கு உரிமை உடையவையாக இருந்தன. பாட்டாளி மக்களின் உறைவிடம் சுரைக் கொடி படர்ந்த கோழிக் குடாப்புப் போன்ற குடிசைகள்; உண்டி கால் வயிற்றுக்குக் கஞ்சி. உடையைப் புதுக்கவிதை போன்ற பாடல் அடி களில் காணலாம்.

**கதிரோன் தோன்றினான்**

**கவலை கொண்டு ஏங்கினோம்**

**உடையோ கோமணம்**

**உணவோ நீராகாரம்.**

‘சோழ நாடு சோறுடைத்து’ என்பது உண்மை தான். ஆனால் அது யாருக்கு உடைத்து என்பது தான் வினாவே. அமெரிக்காவில் நீக்ரோக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். வேறு பல நாடுகளிலும் அடிமைத்தனம் இருந்தது. ஆனால் சோழ நாட்டில் இருந்த அடிமைத்தனத்தைப் போல வேறு எங்கும் இல்லை எனச் சமூகவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளுக்கு அதிகமாகப் பிழைப்புத் தேடிப் போன மக்கள் வளங்கொழித்த தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் வளம் குன்றிய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் என்பார்கள்.

சுரண்டலாலும் வறட்சியாலும் பாதிக்கப் பட்டுப் பிழைப்புத் தேடித் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குத் தமிழர்கள் சென்றார்கள். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத் திற்குத் தலைமை ஏற்ற போது அதில் கலந்து கொண்டு அந்நியருடன் போராடியவர்களும் அந் நாடுகளில் வாழ்ந்த தமிழர்களே.

சிவசாமி - சிந்தாமணி தம்பதியினருக்கு ஒரு ஆண்பிள்ளை, மூன்று பெண் பிள்ளைகள். ஒரு வேலி நிலமிருந்தும் சரியான வருவாய் இல்லை. மகள்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும். மகனை நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதிச் சிங்கப்பூர் அனுப்புகின்றார்கள். வீட்டுக்காகப் பாடுபடச் சென்ற மகன் நாட்டுக்காகப் பாடுபட இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்துவிட்டார். கடிதப் போக்குவரத்தும் இல்லை. போரில் மரணம் அடைந்துவிட்டார் என்பது செவி வழிச் செய்தி.

கல் இல்லாத சோறும் முள் இல்லாத மீனும் கிடைக்கும் பர்மாவில் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருந்தன. இரண் டாவது உலகப் போர் முடிந்ததும் பெரும்பாலான வர்கள் பர்மாவிலிருந்து தாயகத்திற்கு அகதி களாகத் திரும்பினார்கள். அவ்வாறு திரும்பிய குடும்பங்களுள் ஒக்கநாடு கீழையூரைச் சேர்ந்த குடும்பமும் ஒன்று.

இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து நேதாஜியின் மெய்க்காப்பாளர்களுள் ஒருவராக

இருந்தார். வெறுங்கையோடு போனவர் போர் முடிந்ததும் வீரமிக்க கையோடு மகன் பிறந்தால் தலைவரின் பெயர் சுபாஷ் சந்திரபோஸ் என்றே வைப்பேன் என்னும் சபதத்தோடு வந்தார் சிவசாமி சண்முகம். இவருக்கும் பர்மா அகதியாக வந்த குடும்பத்தில் பிறந்த பாக்கியம் என்பவருக்கும் 13-03-1949இல் பிறந்ததே சுபாஷ் சந்திரபோஸ் என்னும் குழந்தை.

**பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள உங்கள் கல்விச் சூழலைப் பற்றி...?**

அந்நியர்கள் ஆட்சிக் காலத்தில் அம்மை நோய்க்கு ஊசி போடும் முறை அறிமுகப்படுத்தப் பட்டது. அழும் பிள்ளை வாயை மூட, 'இந்தா அம்ம குத்துறவன் வாரான், என்றால் போதும்; பிள்ளைகள் காத தூரம் ஓடி ஒளிவார்களாம். அதே போல் பெற்றோர்கள் வெள்ளைக்காரன் காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றும் பள்ளிக் கூடங்கள் தொடங்கியபோது பயந்தார்களாம்.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் போய் விட்டால் ஆடு மாடு மேய்க்க ஆள் இருக்காது; உழ ஆள் குறையும்; வயற்காடு, கொல்லைக் காடு புல்மண்டிப் போய்விடும் என்பதே பயத்திற்குக் காரணம். காலங் காலமாகவே ஆளும் வர்க்கமும் வியாபாரிகளும் வேளாண் மக்களைச் சுரண்டினாலும் வேளாண் தொழில் மக்களின் ஊனோடும் உயிரோடும் கலந்திருந்ததை ஐயப்பட முடியாது.

என்னைப் போன்றோர் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிய காலத்தில் பெற்றோர்களிடம் கல்வியைப் பற்றிய ஒரு புரிதல் ஏற்பட்டது. வேளாண் தொழிலைச் செய்யாமல் பிற தொழில்களைச் செய்பவர்கள் தம்மை ஏமாற்றுவதாகப் புரிந்து கொண்டார்கள். பெரும்பான்மையான மக்கள் படிக்கவில்லை என்றாலும் தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரம் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. விவசாயிகள், பிற தொழிலாளர்கள் என அனை வருமே கல்வியின் அருமையை உணர்ந்தார்கள்.

கள்ளுக் கடைகள் மூடப்பட்ட போது அந்த இழப்பை ஈடுகட்டப் பள்ளிக்கூடங்கள் பல மூடப் பட்டன; மூதறிஞரால் குலக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டது. சிலர் நல்ல திட்டம் என்றார்கள். யாருக்கு என்னும் கேள்வி இங்கும் எழும்.

படிக்காத மேதை என்று போற்றப்பட்ட காமராசர் பட்டிதொட்டி எங்கும் பள்ளிக்கூடங் களைத் திறந்தார். நிலஉரிமையாளராக இருந்த குடியானவர்கள் வாழ்ந்த ஊர்களில் பொது வுடைமைக் கோட்பாடு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. இருந்தபோதிலும் காங்கிரஸ் விடுதலையை வாங்கித் தந்தாலும் அது மக்களுக்குத் தெரிந் தாலும் தெரியாவிட்டாலும் தமிழகம் மூவருக்கு நன்றிக் கடன் பட்டிருக்கின்றது. பொதுவுடைமைக் கட்சி, தந்தை பெரியார், காமராசர்.

பதினோராம் வகுப்பு வரை ஒக்கநாடு கீழையூர், கீழவன்னிப்பட்டு, ஒரத்தநாடு எனப் பல ஊர்களில் படிக்க முடிந்தது. பதினோராம் வகுப்புக்குப் பிறகு புகுமுக வகுப்பு (P.U.C) என்பதைக் கல்லூரியில் படிக்க வேண்டும். அது ஒரு கண்டம்; குறிப்பாகக் கிராமப்புற மாணவர்கள் அதைத் தாண்டினால் கரையேறலாம். இல்லாவிட்டால் அப்பன் தொழில் களாகிய முழங்கால் தண்ணீரில்தான் நீச்சல் அடிக்க வேண்டும்.

புகுமுக விருப்பின் தேக்கம் அப்படி ஒரு நிலையை உருவாக்கியது. சாகுபடியில் ஒரு நாட்டம் வந்த போது, கடன் பட்டதை அடைக்க மறுபடியும் சிங்கப்பூருக்குக் கப்பல் ஏறிய அப்பா நிலத்தில் இறங்க விடவில்லை. 'ஒரு பட்டப் படிப்பை முடித்துவிட்டு, விருப்பப்பட்டால் வந்து விவசாயம் செய்' என்று எழுதி விட்டார். வேறு வழியில்லை.

மகன் மருத்துவம் படிக்க வேண்டும் என்பது அப்பாவின் ஆசை; அது கிட்டாத போதும் கவலைப் படவில்லை. உலகத்தை அறிய நாலு எழுத்தைப் படிக்க வேண்டும். எந்தப் பட்டத்தை வாங்கினாலும் கவலை இல்லை என்பது தான் அப்பாவின் கல்வியியல் கோட்பாடு.

அம்மா பாக்கியம் பர்மாவில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர். எதிலும் அதிகம் ஆசைப்படாதவர்; புத்தர் கோட்பாடு பின்பற்றப் பட்ட மண்ணில் பிறந்தது ஒரு காரணமாக இருக்குமோ என்னவோ? மண் தான் காரணமாக இருந்திருக்கும். கண்டிப்பாக மக்கள் காரணமாக இருந்திருக்க மாட்டார்கள். மதங்களை வைத்துக் கொண்டு ஆதி காலம் முதல் அண்மைக் காலம் வரை மதவாதிகள் அடிக்கும் கூத்தைத் தான் காண்கிறோமே? அது ஒரு தனிக் கதை.

'விருப்பம் இருந்தால் படி; படிக்க விருப்பம் இல்லாவிட்டால் விவசாயத்தை செய்;' என்று முடிவுகளை என் விருப்பத்திற்கு விட்டு விட்டார். பிறகு புகுமுக வகுப்பை முடித்துப் பழனியில் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில் இளங்கலைப் படிப்பு. அங்குப் படிக்கும் போது ஒரு திருப்புமுனை; யாரென்றே தெரியாதவர்கள்கூட, அறிமுகம் இல்லா மலேயே நல்ல புத்தகங்களைப் போலத் திருப்பு முனையாக அமைவார்கள்.

இளங்கலையில் முதல் பிரிவாகிய தமிழில் கல்லூரி அளவில் முதல் மதிப்பெண் பெற்றதால் முருகேச முதலியார் அறக்கட்டளை அமைப்பு நூறு ரூபாய் மதிப்புள்ள தூக்க முடியாத அளவுக்குப்



புத்தகங்களை வழங்கித் தமிழ் முதுகலை படிக்கும் ஆர்வத்தைத் தூண்டியது.

காலங்காலமாகத் தரிசு கிடந்த நிலம் வாய்ப்புக் கிடைக்கும் போது வளைத்துப் பிடித்து விளையும். கட்டியே கிடக்கும் மாட்டை அவிழ்த்து விட்டால் அது இங்கும் அங்கும் ஓடி மேய்வதைப் பார்க்க வேண்டும். கல்வி, இசை, நிர்வாகம், மேம்பட்ட சிந்தனைகள் என எல்லாவற்றையும் முற்பட்ட இனங்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப் பட்டவை போன்று பட்டா போட்டுப் பேசு வார்கள். கல்வி பரவலாக்கப்பட்ட பிறகு இவற்றில் கொடிகட்டிப் பறப்பவர்களைப் பார்க்கலாம். இடஒதுக்கீடு போன்ற வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொண்டு கிணற்றில் போட்ட கல்லைப் போன்று கிடக்கும் கருப்பு ஆடுகளும் உண்டு. அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டிய தில்லை. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களாவது வளர்ந்தார்களே என்று ஆறுதல் அடையலாம்.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் எனப் புத்தகங்கள் பரிசு பெற்ற பிறகு கால்கள் பூமியில் தரிக்கவில்லை; இளங்கலை மூன்றாமாண்டு படிக்கும் போதே முதுகலைத் தமிழை மதுரை தியாகராயர் கல்லூரியில் படிக்க வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. பல அறிஞர்களை உருவாக்கிய கல்லூரி; வ.சுப.மாணிக்கம் போன்ற பேராசிரியர்கள் பணி யாற்றிய கல்லூரி. இடம் கிடைக்குமா? கிடைக் காதா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் முன்னோட்டமாகக் கல்லூரியைப் பார்க்கும் படலமும் முடிந்து விட்டது.

இளங்கலை தேர்ச்சி பெற்று முதுகலைத் தமிழில் சேர விண்ணப்பிக்கும் போது இன்னொரு திருப்புமுனை. பாடத்தில் மாற்றம் இல்லை. அரசியல்வாதிகள், அறிஞர்கள் என அனைவரும் முழங்குவது போலத் தமிழ் நம்முடைய மூச்சல்லவா? மைய, மாநில அரசுகளின் மொழிக் கொள்கை, ஆளும் வர்க்கங்களின் இரட்டை வேடம், மக்களின் என்றும் தணியாத ஆங்கில மோகம் போன்ற வற்றால் தமிழ் தன்னுடைய பழங்காலத் தெம்பால் வாழ்ந்து கொண்டிருப்பது தனிக்கதை.

முதுகலைத் தமிழைத் தியாகராயர் கல்லூரியில் படிக்க, இடத்திற்குப் பரிந்துரைக் கடிதம் கேட்ட போது அனுபவம் மிக்கவர் மடையை மாற்றி விட்டார். மதுரைப் பல்கலைக் கழகம் தொடங்கிய போது அதன் முதல் பதிவாளர் இரா.பெருமாள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் படிக்குமாறு அறிவுறுத்தினார். இடம் கிடைக்கவும் முனைவர் மோ.இசரயேல் என்னும் பேராசிரியருக்குப் பரிந்துரைக் கடிதம் கொடுத்தார்.

பல்கலைக்கழகம் என்றால் அங்குக் கல்லூரி களுக்கான நிர்வாகம் மட்டும் தான் நடக்கும் என்பது பொதுவான எண்ணம். முன்னாள் பதிவாளர் சொல்லிய பிறகுதான் அங்குப் பல துறைகள்

இருக்கின்றன என்பது தெரிய வந்தது. அங்குப் போய்ச் சேர்ந்த பிறகு தான் தெரிய வந்தது.

காலங்காலமாகப் படிப்பறிவு இல்லாத சமுதாயத்திலிருந்து முதல் தலைமுறையாகப் படிக்க வருகின்றவர்களின் அனுபவம் சொல்லி மாளாது. கல்வி, அதன் வழிக் கிடைக்கும் அறிவு, வாய்ப்பு, வசதிகள் போன்றவற்றால்தான் அது பெரும்பாலான மக்களுக்கு மறுக்கப்பட்டதோ? என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

**தமிழ், மொழியியல் போன்ற பாடங்களைப் படிக்க ஏற்பட்ட ஆர்வம், பாடம் நடத்திய பேராசிரியர்கள் பற்றிக் கூற முடியுமா?**

இளங்கலையில் தமிழை முதன்மைப் பாடமாக எடுத்துப் படிக்கவில்லை; பகுதி ஒன்றில் தமிழ்ப் படித்ததால்தான் முதுகலைத் தமிழ்ப் படிக்க இடம் கிடைத்தது. ஒவ்வொருவரும் அமர, தனி இருக்கை, விடுதியில் தனி அறை, அன்றைய மதுரைப் பல்கலைக்கழகத்தின் கம்பீரமான தோற்றம், குறைவான மாணவர்கள், நிறைவான பேராசிரியர்கள், பெரிய நூலகம் எனக் கல்வி கற்பதற்கான சூழல் நன்றாக இருந்தது.

கிராமப்புறத்தில் ஒரு வகையான கல்வி, நகர்ப்புறத்தில் ஒரு வகையான கல்வி இருப்பதைப் போன்று கல்லூரி வகுப்புகளில் நிறைய மாணவர்கள், பல்கலைக்கழகத் துறைகளில் குறிப்பிட்ட அளவு மாணவர்கள் எனப் படிக்க உள்ள வசதிகளில் வேறுபாடு இருக்கின்றது; இருப்பினும் படிக்கும் பாடம் ஒன்றே.

தற்போது மருத்துவம், பொறியியல் போன்றவற்றுக்குப் பொது நுழைவுத் தேர்வு பற்றி நிறைய விவாதங்கள் வருகின்றன. மாநிலத்திற்கு மாநிலம் பாடத்திட்டம் மாறுபடுகின்றது. ஒரே முறையில் எப்படிப் பொதுத் தேர்வை எழுத முடியும்? இந்திய அளவில் பொதுப் பாடத் திட்டத்தைக் கொண்டு வந்து பொதுத் தேர்வை வைத்தால்தான் வாய்ப்புகள் பரவலாக்கப்படும்.

முதுகலை முதலாமாண்டில் முதல் நாள் முதல் வகுப்பு; விருப்பப் பாடம் பிரிக்கிறார்கள் அருகில் அமர்ந்துள்ள மாணவர்கள் யாரும் தெரிந்தவர்கள் இல்லை. புதினம் (Novel), மொழியியல் (Linguistics) என்பவை விருப்பப் பாடங்கள். விருப்பப் பாடத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல் தேர்வு செய்தது ஒரு திருப்புமுனை.

நாவல் என்றால் பொருள் புரிகின்றது. இளங்கலைப் படிக்கும்போது மு.வ., ஜெயகாந்தன், சாண்டில்யன் போன்றோரின் பல புதினங்களைப் படித்ததால் அது பற்றிய ஒரு சிறு புரிதல் இருந்தது. ஆனால் Linguistics என்னும் சொல்லுக்குத் தமிழில் என்ன பொருள் என்றே தெரியவில்லை. இடம் வலம் அமர்ந்திருந்தவர்களிடம் கேட்டால் அவர்களுக்கும் தெரியவில்லை.

பேராசிரியர் வந்து விருப்பப் பாடம் படிப்பவர்களை இரண்டு பிரிவாகப் பிரிக்க முதலில் புதினத்தைக் குறிப்பிடுகின்றார். மகளிரில் ஒருவரும் ஆடவரில் பலரும் கையைத் தூக்குகின்றார். மதில் மேல் பூனை போலத் தான் மனநிலை இருந்தது. மொத்த மாணவர்களே பத்தொன்பது பேர் தான். ஏழு பேர் புதினத்தை விருப்பப் பாடமாக எடுத்தார்கள். மற்றவர்கள் மொழியியலை விருப்பப் பாடமாக எடுத்தார்கள். இருவரைத் தவிர மற்றையவர் மகளிர்.

ஒரு தடத்தில் போகும் போது இருவழிகள் பிரிகின்றன. அறிவிப்பும் இல்லை; கேட்க ஆளும் இல்லை; தொடு குறி போலப் போகிறவர் விருப்பம் தான். அது போகக்கூடிய இடத்தின் வழியாகவும் இருக்கலாம் வேறு வழியாகவும் இருக்கலாம்.

இடநெருக்கடியால் விடுதியில் தனிஅறை கிடைக்கவில்லை. முதுகலை இரண்டாமாண்டு படிக்கக் கூடியவர் தோள் கொடுத்தார். வெள்ளரிப் பழம் போன்ற நிறம். பட்டிக்காட்டில் பிறந்தவர் தான். ஒவ்வொருவருக்கும் ஒரு பழக்கம் இருக்கும். அவர் உடம்பில் அழுக்கைத் திரட்டிக் கொண்டே படிப்பார். அவர் படித்த புத்தகத்தை புரட்டினால் பக்கத்திற்குப் பக்கம் சிறுசிறு அழுக்குத் திரட்டு, படித்ததற்கு அடையாளமாக இருக்கும்.

வியப்பாக இருக்கும்! ஒரு மனிதன் உடம்பில் இவ்வளவு அழுக்கு இருக்குமா? அதுவும் அவருடைய உடம்பு சிவந்த உடம்பு. வகுப்புக்குப் போன நேரம் போக மற்றைய நேரத்தில் படிப்பு! படிப்பு!! படிப்பு!!! தான். லெனின் கூறியதைப் படித்திருப்பாரோ? இந்தச் சூத்திரத்திற்கு இலக்கியமாகவே திகழ்ந்தார்.

இப்படித் தான் படிக்க வேண்டுமா? நிறையப் படிக்க வேண்டும் என்பதற்கு மனதிற்குள் ஒரு பெரிய வினாவைக் கோலிக் காட்டியவர் அவர் தான். சிலப்பதிகாரத்தில் ஒரு காண்டம் பாடமாக இருக்கும். அதை மட்டும் படிக்க மாட்டார். சிலப்பதிகாரம் தொடர்பாக வந்துள்ள நூல்களை எல்லாம் தேடிப் பிடித்துப் படிப்பார். வசதியான குடும்பத்தில் பிறந்தவரில்லை; இருந்தாலும் மற்ற செலவுகளைத் தவிர்த்துக் கொண்டு புத்தகம் வாங்குவார்.

படிக்க வேண்டும் என்றால் நிறைய நேரம் படிக்க வேண்டும்; நிறையப் புத்தகங்களைப் படிக்க வேண்டும்; நிறையப் புத்தகங்களைச் சொந்தமாக்க வேண்டும் என்பவற்றைச் செயலால் கற்பித்த அவர் தான் படிப்புக்கு முதல் குருநாதர்!

திண்டுக்கல், காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து

ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர் முனைவர் அபிச்சை என்பவர் தான் அந்தச் சகோதரர்.

புதினத்தை நாமாகப் படித்துக் கொள்ளலாம், மொழியியலைப் படித்துப் பார்ப்போம் எனக் குழப்பத்திலும் ஒரு சிறு தெளிவோடு எடுத்தது தான் மொழியியல் விருப்பப் பாடம். இலக்கணம் மொழியியல் சார்ந்து கிட்டத்தட்ட இருபத்தைந்து நூல்களும் பல கட்டுரைகளும் எழுத, இன்னும் எழுத வாய்ப்பைக் கொடுத்தது அந்தத் திடீர்த் திருப்பமே!

விருப்பப் பாடத் தேர்வுக்குப் பிறகு வகுப்பை விட்டு வெளியே வந்தால் வகுப்பு நண்பர்கள் குழப்புகின்றார்கள். மொழியியல் புரியாத படிப்பு, அதைப் படித்தால் அதுவும் விளங்காது, தமிழும் விளக்காது என்றார்கள். பெரும்பாலானவர்கள் இளங்கலையில் முதன்மைப் பாடமாகத் தமிழைப் படித்தவர்கள். அவர்களுக்குப் பாடம் நடத்திய பேராசிரியர்கள் குழப்பியதாகத்தான் இருக்கும்.

சொர்க்க லோகம், கைலாசம், இந்திரலோகம் பற்றிய வருணனை போலத் தங்களுக்குத் தெரியாத அல்லது புரியாததைப் பற்றிப் பேசப் பேராசிரியர்கள் குறிப்பாகத் தமிழ்ப் பேராசிரியர்கள் வல்லவர்கள் என்பதைப் பிற்காலத்தில்தான் புரிந்து கொள்ள முடிந்தது.

தமிழையும் மொழியியலையும் நன்கு கற்றவர்கள் இலக்கண ஆய்வு மேற்கொள்ளத் தலைப்பட்ட பிறகு தமிழ் இலக்கணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நூல் கட்டுரைகள் எழுதியவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த நூலாசிரியர் அதைச் சொன்னார், இந்த உரையாசிரியர் இதைச் சொன்னார் என்று சொல்ல முடியுமே தவிர, எழுதுபவர் என்ன சொன்னார் என்பதைச் சொல்ல இடமிருக்காது.

பழைய தமிழ்ப் பேராசிரியர்கள் மு.வரதராசனார் மொழியியல்பால் மிகுந்த ஈடுபாடுள்ளவர். வ.அய்.சுப்பிரமணியம் மொழியியல் துறையில் எழுதியதைவிட வளர்த்ததில் குறிப்பிடத்தக்கவர். தெ.பொ.மீனாட்சிசுந்தரத்தைத் தொடர்ந்து பேராசிரியர்கள் ச.அகத்தியலிங்கம், மோ.இசரயேல், செ.வை.சண்முகம், பொன்.கோதண்டராமன், இரா.கோதண்டராமன், இராமசுந்தரம், கி.அரங்கன் என மொழியலுக்கு நல்ல பல ஆய்வு நூல்கள், கட்டுரைகள் எழுதியவர்களின் பட்டியல் நீளும்.

ஏழெட்டு நூற்பாக்களைக் கொண்டு முந்நூறு பக்க அளவில் ஒரு நூல் (வினைப் பாகுபாட்டில் எச்சங்கள் 2005) எழுதவும் இரண்டு நூற்பாக்களைக் கொண்டு இருநூறு பக்க அளவில் ஒரு நூல் (பழந்தமிழ் வினைகளில் எதிர்மறை) எழுதவும் துணை நின்றது மொழியியலே.

மதுரைப் பல்கலைக்கழகம் தொடங்கியபோது அதன் முதல் துணைவேந்தர் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் தமிழைப் படிப்பவர்கள் மொழியியலையும் அறிந்திருக்க வேண்டும் என்னும் நோக்கத்திலேயே முதுகலைத் தமிழில் விருப்பப் பாடத்தைச் சேர்த்திருந்தார். அவருடைய முயற்சியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் உயராய்வு மையம் தனியாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழோடு மொழியியலும் வரை வித்திட்டவர்கள் பேராசிரியர்கள் முத்துச் சண்முகனார், மோ.இசரயேல், விஜய வேணுகோபால் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

மொழியியலின் அரிச்சுவடியைக் கற்றுத் தந்தவர் பேராசிரியர் ஜெ.நீதிவாணன். இலக்கியம், இலக்கணம் நடத்துவது போலவே மொழியியலை நடத்துவார். பேராசிரியர்கள் விருப்பப் பாடமான மொழியியலை நடத்திய விதமே, முதுகலை மொழியியல் படிக்கத் தூண்டியது. 1975-77இல் மொழியியலை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முடித்து, தொடர்ந்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) முனைவர் (PG.D.) போன்ற ஆய்வுகளை மொழியியல் தொடர்பாக ஒரே மூச்சில் செய்ய மொழியியல் பெருந் துணை புரிந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் படிக்கும் போது திராவிட மொழியியலைக் கற்றுத் தந்த பேராசிரியர் முனைவர் பி.எஸ்.சுப்பிரமணியம் அவர்களை வாழ்நாளில் மறக்க முடியாது. ஒருநாள் ஒரு பேராசிரியர் வராத போது அந்த வகுப்பை முன்கூட்டியே அவரை எடுக்கச் சொல்லி விட்டார்கள். நூலகம் போனதால் அந்த வகுப்பு எடுப்பது தெரியவில்லை.

அந்த ஒரே ஒரு வகுப்புக்குப் போக முடியாதது இன்று கூடக் குறையாகவே தெரிகின்றது. அந்த வகுப்பில் நடத்தியதைக் குறிப்பு எடுத்துக்கொண்டாலும் மனநிறைவு இல்லை. பேச்சில் ஆடம்பரம் இருக்காது; நேற்று என்ன நடத்தினோம் என்னும் கேள்வி இருக்காது. திராவிட மொழியியல் என்பது இந்தியா முழுவதும் பேசப்படும். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற இருபத்தைந்து மொழிகளின் களம். ஒரே திராவிடச் சொல் எல்லா மொழிகளிலும் ஒலி நிலையில் வேறுபட்டிருக்கும். அவற்றை எல்லாம் குறிப்பு இல்லாமலேயே சொல்லிப் பிரமிக்க வைத்து விடுவார்.

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட் கால்டுவெல். பேராசிரியர்கள் டி.பர்ரோ, எம்.பி.

எமனோ என்னும் மேலை நாட்டுப் பேராசிரி யர்கள் தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் செய்துள்ள பணியின் அருகே கூட நாம் போக முடியாது. திராவிட மொழிகளின் சொல்லியல் அகராதி (A Dravidian Etymological Dictionary) என்ற ஒன்றை இரண்டு பேராசிரியர்களும் தொகுத்துத் தந்துள்ளார்கள். திராவிட, தமிழ் மொழியியல் ஆய்வுக்கு அந்த அகராதி ஊற்றுக்கண் என்றால் மிகையாகாது.

1982இல் முனைவர் பட்ட ஆய்வை முடித்த பிறகு 'இன்னும் மேலே படி' என்று கூறிய தந்தை ஊனோடும் உயிரோடும் கலந்தவர். அதற்கு மேல் படிப்பு இல்லை. வேலைக்குப் போக வேண்டும். அதைப் பற்றியெல்லாம் அவர் நினைக்கவில்லை. மேலும் படிக்க வேண்டும். நிலமிருந்தும் போது மான வருமானம் இல்லை. 'ஆடு கிடக்கும்போது கீதாரியை என்ன செய்யப் போகிறான்' என்பார். பரம்பரையாக இருந்த நிலம், தியாகிக்காகக் கொடுத்த நிலத்தை எல்லாம் படிப்பதற்காக விற்றார். இருநூறு ரூபாய் பணம் அனுப்பச் சொன்ன போது வண்டி மாட்டை விற்று எழுநூறு ரூபாய் அனுப்பிய தந்தை. ஒரே ஒரு பிள்ளையை மட்டும் பெற்றுக்கொண்டு, கோழி அடித்துப் போட்டும் ஆட்டை வெட்டி வற்றல் போட்டும் வளர்த்த பெற்றோரைப் போல நம்மால் இருக்க முடியாது என்பதை வாழ்க்கையே காட்டுகின்றது.

**ஆய்வாளர், பேராசிரியர் பணி தொடர்பாக மறக்க முடியாத செய்திகள் ஏதேனும் உள்ளதா?**

1982இல் முனைவர் பட்ட ஆய்வு முடிந்தது. 1979இல் திருமணம் நடந்து குழந்தைகளும் பிறந்து விட்டன. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறை ஆரம்பிக்கப்பட்டதால் வேலைக்கு வாய்ப்பு இருந்தது. அப்போது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மிகுந்த எதிர்பார்ப்போடு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வருவது ஒரு பக்கம் இருந்தாலும் பெற்றோருடன் வாழ வேண்டும் என்பதே தஞ்சாவூர் வருவதற்கு முக்கியமான காரணம்.

பெற்றவர்கள் குளமாக இருந்து ஒரு விரால் மீனாக மகனை வளர்த்தவர்கள். வயதான காலத்தில் பேரப் பிள்ளைகளுடன் வாழ்வதை எழுத முடியாது. வாழ்ந்தால்தான் தெரியும். நான்கு பேரப் பையன் களுடன் வாழ அவர்களுக்குக் கொடுத்து வைத் திருந்தது.

1982இல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர மில்லாத ஒரு தொகுப்பூதிய - மனதிற்குப் பிடிக்காத ஒரு வேலை; பணி என்று சொல்லக்கூடாது. படித் தவை தமிழ், மொழியியல். ஒரத்தநாடு வட்டத்தில் அந்த நேரத்தில் முனைவர் பட்டம் பிறர் பெற்றிருக்க வாய்ப்பில்லை.

ஊராய்வுத் திட்டம் என்றால் ஊர்களைப் பற்றி ஆராய்வது, யாருக்கும் எதுவும் தெரிய வில்லை என்பதை அந்தத் திட்ட அறிக்கையே வெளிப்படுத்தியது. அது ஒரு பெரிய கூத்து; ஒரு புத்தகமாகவே எழுதலாம்.

தமிழ் - மொழியியல் ஆய்வுக் கனவுகளோடு வந்ததற்கு ஒரு பெரிய அடி. உடனே வேலையையும் விட முடியாது. தொகுப்பூதியத்தை விட அப்பாவின் தியாகிகளுக்கான ஓய்வூதியமே குடும்பத்தைக் காப்பாற்றியது.

அங்குச் சேர்ந்த இளைஞர்கள் அனைவருக்குமே நிரந்தரமில்லா வேலை. அங்குப் பணிக்கு வந்த பெரும்பாலானோர் பணி ஓய்வு பெற்று ஓய்வில் இருந்தவர்கள். இளைஞர்கள் பெரும்பாலா னோருக்கு திறமை இல்லை என்பது தலைமை ஏற்றிருப்பவரின் கணிப்பு.

வேறு ஏதாவது ஒரு சந்து கிடைத்தால் இந்தப் பொந்திலிருந்து போய் விடலாம் எனப் பல இளைஞர்கள் காத்திருந்தனர். வாய்ப்புக் கிடைத்த போது கிளம்பியும் போய் விட்டார்கள்.

நூற்றாண்டுப் பழமை வாய்ந்த திருவையாறு அரசர் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் பணி 1985இல் கிடைத்தது. பல்லாண்டுகள் ஆசிரியப் பணிக்காகவே படித்து, ஆய்வு மேற்கொண்டதற்குப் பலன் கிடைத்தது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பார்த்த ஊராய்வுத் திட்டம், சொல் திரட்டுநர் போன்ற வேலைகளை நினைத்துப் பார்க்கும் போது கவிக்கோ அப்துல் ரகுமானின் கருத்துத்தான் நினைவில் வரும். நீங்கள் ஏன் திரைப்படத்திற்குப் பாடல் எழுதுவதில்லை என்றதற்குச் சொன்னா ராம். 'அம்மிக் கொத்தச் சிற்பி தேவையில்லை.'

தமிழ் இலக்கணத்தோடு மொழியியல், இலக்கியம் போன்றவற்றைப் பாடம் நடத்தவும் மேலும் படிக்கவும் எழுதவும் திருவையாறு அரசர் கல்லூரி மனம் நிறைந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

**நூற்றாண்டைத் தாண்டிய திருவையாறு அரசர் கல்லூரி குறித்து...?**

தமிழ் மண்ணின் விளைச்சலைத் தின்று, அதில் ஊறும் நீரைக் குடித்துக் கொண்டு ஆட்சி, அதிகாரங்களைச் செலுத்தியவர்கள் தமிழைக் கல்வி நிறுவனங்களில் கற்பிக்க முடியாது என்று கூறியது இங்கு மட்டுமா அல்லது வேறு எங்கும் இப்படிப்பட்ட சூழல் இருந்திருக்குமா? என்பது தெரியவில்லை.

ஏறக்குறைய ஆங்கிலத்தை எல்லோரும் பட்டுக் கம்பளத்தை விரித்து வரவேற்று ஏற்றுக் கொண்டு தமிழைப் புறக்கணித்திருக்கிறோம். முன்பு சமஸ்கிருதம் என்னும் வடமொழியை ஆளும் வர்க்கம் ஆதரித்துப் பாடசாலைகளை



அமைத்துக் கொடுத்தது. வேதபாட சாலையில் என்ன கற்பிக்கப்படும்? யார் கற்பார்கள்? யார் கற்பிப்பார்கள்? என்பவை எல்லாம் வேதம் என்றாலே விளங்கிவிடும்.

பிறகு சர் ஏ.டி.பன்னீர்செல்வம், தமிழவேள் உமா மகேசுவரனார் எனப் பலரின் பெரு முயற்சி யால் தமிழ் வித்துவான் படிப்பு வேத பாட சாலையில் கொண்டு வரப்பட்டது. தேவ பாடை கற்பிக்கும் இடத்தில் நீச மொழிக் கற்பிக்க இடமா? என்று தீட்டுப்பட்டு விடாமல் புனிதமாக இருக்க பிள்ளைகளைப் படிக்க விடாமல் அழைத்துப் போன புண்ணியவான்கள் வாழ்ந்த வாழ்கின்ற - வாழும் மண் இது.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு விவேகானந்தர் நூறு இளைஞர்களைக் கேட்டார். ஆனால் தமிழகத்தில் ஒருவரே முன்னின்று ஒரு பெரிய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டினார். அவர் இன்று தேவைப்படுவதாகப் பலரும் கூறு கின்றார்கள். அவர்களால் செய்ய முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். சமூக மாற்றத்தைக் கொண்டு வந்தவர் தந்தை பெரியார்.

வித்துவான் போன்ற கல்வி முறை மாற்றப் பட்டுத் தமிழில் இளங்கலை முதுகலைப் பட்டப் படிப்புகள் இருந்தன. நூற்றாண்டுப் பழமை வாய்ந்த திருவையாறு அரசர் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதி பெறக் கல்லூரியில் ஒரு பேராசிரியர் முனைவர் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அந்த வாய்ப்பு என்னுடைய முனைவர் பட்டத்திற்குக் கிடைத்த பேறாகும்.

ஒரு கிராமத்தின் வளர்ப்பு, கிராமியச் சூழலில் ஒரு கல்லூரி, கிராமப்புறத்தைச் சார்ந்த மாணவர் என கிராமங்களின் கலவையில் அறிந்து கொள்ள பெரும் வாய்ப்பு ஏற்பட்டது.

பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, தி.வே. கோபாலையர், எச்.வேங்கடராமையர் எனப் பலர் பணிபுரிந்த இடம். அங்குப் பணிபுரிந்ததே பெருமை யாக இருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. வாய்ப்புகள் நிறைய வரும். திருவையாறு எல்லாம் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுவது போல இருக்கும் என்றார்கள்.

பாடம் நடத்துவது, படிப்பது, எழுதுவது போன்றவை தனிப்பட்ட ஒருவரைச் சார்ந்தவை. நம் கடமையைச் செய்ய வேண்டும். பெரும் நிறுவனம் நம்மைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளாது. சிறு நிறுவனம் தள்ளியும் விட முடியாது. குறிக்கோளுடன் ஒன்றைச் செய்யும் போது தோல்வியும் வரலாம்; துவண்டு போக வாய்ப்புண்டு. கடமையை இலாபம், நட்டத்தைப் பாராமல் செய்தால் கண்டிப்பாக ஒரு பலன் கிடைக்கும்.

கி.பி. 8-10ஆம் நூற்றாண்டுகள் வாங்கில் ஒக்க நாடு கீழையூர்க்குத் தெற்கில் ஒரு ஊரும் வடக்கில் ஒரு ஊரும் இருக்கின்றன. கலப்பு மணத்தால் சாதியின் தரம் தாழ்ந்துவிட்டது என இரண்டு

ஊர் மக்களும் தீமூட்டி அதில் விழுந்து எரிந்து போனார்கள். சிறுவனாக இருக்கும்போதே உள்ளத்தில் கிடந்து நீறுபூத்த நெருப்பாக இருந்து எழுந்தது 'அக்கினிக் குழந்தைகள்' என்னும் புதினம்.

காங்கிரஸ் விடுதலைக்காகப் பாடுபட்ட போது கொடுத்த வாக்குறுதிகளை விடுதலை பெற்ற பிறகு நிறைவேற்றவில்லை. அவற்றைப் பொதுவுடைமைக் கட்சி நினைவுபடுத்தியது. அதற்குக் கிடைத்த பரிசு தோட்டாக்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் பலர் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; நஞ்சு ஊட்டிக் கொல்லப்பட்டார்கள். களப்பால் குப்பு, வாட்டாக்குடி இரணியன், சாம்புவான் ஓடைச் சிவராமன், ஆம்பலாப்பட்டு ஆறுமுகம், ஏ.எம்.கோபு போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

மாவீரன் வாட்டாக்குடி இரணியன் (1999) சாம்புவான் ஓடைச் சிவராமன் (1999) பொது வுடைமைப் போராளி ஏ.எம்.கோபு (?) புதினங்கள், பல சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்தன. பெரும்பாலான நூல்கள் தமிழகத்தின் மாபெரும் புத்தக நிறுவனமான நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வழி வெளிவந்தன.

2001இல் தமிழறிஞர்களுக்கான இடஒதுக் கீட்டில் மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. இந்த நேரத்தில் நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தில் எனது நூல்கள் பதிப்பிக்கப்பட்டதன் அடிப் படையில் தமிழறிஞர்களுக்கான ஒதுக்கீட்டில் எனது மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது.

நான் எழுதிய நூல்களைப் பதிப்பகத்தார் என்னும் முறையில் வெளியிட்டார்கள். தமிழ் இலக்கிய வரலாறு ஐம்பதாயிரம் படிகளுக்குமேல் விற்பனை ஆனது. நியூ செஞ்சுரி நிறுவனத்திற்கு என்னாலும் அதனால் எனக்கும் பலன் கிட்டியது எதார்த்தமே. எதிர்பார்ப்பு இல்லாமல் செய்யப் படும் செயலுக்கு இப்படி எதிர்பாராத பலன் கிடைப்பது மகிழ்ச்சியைத் தரும். இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய நண்பர்கள் சிலரும் தமிழறிஞர்களுக்கான இடஒதுக்கீட்டுக்கான மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பித்துக் கிடைக்க வில்லை. பணியாற்றும் இடம் பெரிது, சிறிது என்பது இல்லை. நம்முடைய பணி தான் உரத்துக் குரல் கொடுக்கும்.

படைப்பிலக்கியங்கள், பதிப்புப் பணி, ஆய்வு எனப் பல பணிகளுக்குத் திருவையாற்று அரசர் கல்லூரி உந்து சக்தியாக இருந்ததைப் பெருமை யுடன் நினைத்துப் பார்க்கிறேன். என்னுடைய வழிகாட்டுதலில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும், பதினேழு பேர் முனைவர் பட்டமும் பெற்றிருப்பது மனநிறைவைத் தருகின்றது.

படைப்பிலக்கியங்கள், இலக்கண - மொழியியல் ஆய்வுகள் என ஏறக்குறைய அறுபது நூல்கள் எழுத ஒரு பூங்காவாகத் திருவையாற்று அரசர் கல்லூரி இருந்தது என்பதை நெஞ்ச நெகிழ்வோடு தெரிவிக் கின்றேன்.

**பதிப்புப் பணி பற்றிக் கூறினீர்கள்; அது பற்றி விளக்கமாகக் கூற முடியுமா?**

இலக்கண - மொழியியல் ஆய்வைத் தவிர்த்து, புதினம், சிறுகதைத் தொகுப்பு, வரலாறு, நாட்டுப் புறவியல், சிறுவர் இலக்கியம், சுற்றுச்சூழல் எனப் பல வகையில் என்னுடைய எழுத்துக் களம் விரிகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஒரு புலவர் வானம் பார்த்த பூமியாகிய ஒக்கநாட்டில் பிறந்துள்ளார். பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் செல்லியம்மன் திருவிழாவின் போது அவரின் கும்மிப் பாடல்களைப் பாடிக் கும்மி அடிப்பார்கள். மெல்ல மெல்ல அந்த நடை முறை குறுகி, உயிர் போக இன்றோ, நாளையோ, மறுநாளோ என்று கிடப்பவர்களை வைகுந்தம் அனுப்புவதற்காகப் பாடுவார்கள்.

முதுகலைத் தமிழ்ப் படிக்கும்போது இராமாயணக் கும்மி எழுதப்பட்டிருந்த ஓலைச் சுவடி கிடைத்தது. அதில், **ஒக்க நாடன் வீர பத்திரன் நான் - இதை ஓதுவேன் கும்மிக்கு ஒப்பனையாய்** என்னும் தொடர் இருக்கிறது. அதைப் படித்த போது உடம்பு சிலிர்த்தது. பிறந்த பொன்னாடு ஒக்கநாடு அல்லவா? விடியவிடியப் படியெடுத்தேன். வான்மீகி, கம்பர், அருணாசலக் கவிராயர் என மூவரையும் படித்து எழுதி இருக் கின்றார். கம்பராமாயணம் பத்தாயிரம் என்றால் வீரபத்திரர் ஐயாயிரத்துச் சொச்சம் கண்ணிகளில் எழுதி இருக்கின்றார். சரபோஜி மன்னர் ஆண்ட காலத்தில் வாழ்ந்திருக்கிறார். மதுக்கூர் நிலக்கிழார் துரைச்சாமி கோபாலகர் உதவியதை நன்றியோடு பல கண்ணிகளில் நினைவு கூர்கின்றார். நூல் அரங்கேறியதாகத் தெரியவில்லை.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் பழனி அரங்கசாமி அவர்களிடம் காட்டிய போது வியப்படைந்தார். அவருடைய பொறுப்பில் வெளி வந்த மதுரைத் தமிழ்ச் சங்க இதழ் செந்தமிழில் வெளியிட ஒப்புக் கொண்டார். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பரவாயில்லை என்றும் கூறினார். பல இதழ்களில் தொடராக வெளிவந்தது. படிப்பு, பணி, குடும்பம் எனப் பொறுப்புகள் அதிகரித்த

போது தொடர்ந்து பதிப்பிக்க முடியவில்லை. கிட்டத்தட்ட இருபத்து ஐந்து ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டது; ஆனால் மறக்கவில்லை.

பல்வேறு பணிகளுக்கிடையில் இரண்டாயிரத்தில் தொடங்கி இரண்டாயிரத்து நான்கில் வீரபத்திர இராமாயணக்கும்மி சொந்தப் பதிப்பில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தது. கம்பரைத் தொடர்ந்து இராமாயணம் தொடர்பாகக் கும்மி, சிந்து, அம்மானை, வெண்பா எனப் பல பாவடிவங்களில் நூல்கள் வந்துள்ளன. கம்பருக்கு அடுத்துத் தோன்றிய நூல்களில் வீரபத்திரர் எழுதிய இராமாயணக் கும்மிதான் பெரிய நூலாகத் தெரிகிறது.

பதிப்புத் துறையின் முன்னேற்றம், பணவசதிக்குக் குறைவில்லை; இருந்தாலும் நூல் விற்குமா என முதலீடு செய்யப் பலருக்கு மனம் வரவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதுவும் ஒரு பட்டிக்காட்டில் பிறந்த வீரபத்திரர் எவ்வளவு கனவு கண்டிருப்பார்! அரங்கேற்ற முயற்சி செய்திருப்பார். கும்மியில் பிடித்த கண்ணிகளைப் பொறுக்கி எடுத்து வீரபத்திர இராமாயணக்கும்மி உரைநடை என்னும் மூன்று நூல்களையும் வெளியிட இரண்டு லட்சம் செலவானது. கால வெள்ளத்தில் கறையான் தின்னாமல் காப்பாற்றியதில் ஒரு மன நிறைவு.

**இலக்கண - மொழியியல் துறைகளில் பயணிக்கும் உங்களால் எப்படி படைப்பிலக்கியத்திலும் பயணிக்க முடிகின்றது?**

படைப்பிலக்கியங்கள் எவையாக இருந்தாலும் அவற்றுக்கு மொழி ஆளுமை அடிப்படையானது. ஒரு நல்ல கதைக் கருவை மோசமான மொழிப் பயன்பாடு சிதைத்து விடும். நல்ல மொழி நடை சாதாரண கதைக் கருவுக்கும் மெருகு சேர்த்து விடும். தமிழ்ப் பாடத்தை மட்டும் படித்திருந்தால் ஒருவேளை படைப்பிலக்கியம் சாத்தியம் இல்லாமல் போய் இருக்கலாம்.

மொழியியல் என்பது எழுத்து மொழிக்கு மட்டும் அல்லாமல் பேச்சு மொழி ஆய்வுக்கும் முக்கியம் கொடுக்கக்கூடிய துறை. கல்கி, தி.ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம் போன்றவர்கள் நிறைய எழுதி இருக்கின்றார்கள். சி.எம்.முத்து இனம் சார்ந்த படைப்புகளைத் தந்துள்ளார். சோலை சுந்தரபெருமாள் பழைய ஆற்றுப் பாசனப் பகுதி மக்களைப் பற்றி நிறைய எழுதியுள்ளார்.

சு.தமிழ்ச்செல்வி ஒன்றிணைந்த தஞ்சாவூர் மாவட்டக் கடற்கரைப் பகுதி மக்களைப் பற்றி மனதில் பதியும்படி எழுதியுள்ளார்.

என்னுடைய படைப்புகள் புதாற்றுப் பாசனப் பகுதி, கீழத் தஞ்சை என விரியும் படைப்புகள் என்பவை வரலாற்று நிலையில் பார்த்தாலும் சமகால நிலையைப் பார்த்தாலும் மக்களைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். காலம் மாறினாலும் மக்களுடைய பிரச்சினைகள் ஒன்றாகவே இருக்கும்.

சாம்பவான் ஓடைச் சிவராமன் (1999), பொதுவுடைமைப் போராளி ஏ.எம்.கோபு போன்ற புதினங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் பாட்டாளி மக்களுக்காக இரத்தம் சிந்திய போராளிகளைப் பற்றியவையாகும்.

பயிர் முகங்கள் (2000) என்னும் புதினம் வேளாண் குடிமக்களின் சிக்கல் நிறைந்த வாழ்க்கையை விவரிக்கின்றது. மலைப் பாம்பு மனிதர்கள் (2004), கால வெள்ளம் (2005), கூத்தாயி (2010) போன்ற புதினங்கள் புதாற்றுப் பாசன மக்களின் பொதுவான வாழ்க்கையை விவரிக்கக் கூடியவை. விடுதலை, வேளாண்மை, பொதுவுடைமை, பெண்ணியம், தலித்தியம் எனப் பல்வேறு தளங்களின் நடைமுறை, நெருக்கடி முதலானவை புதினம், சிறுகதைகளில் காணலாம்.

வழக்கு அழிந்து கொண்டிருக்கும் தாலாட்டு, ஒப்பாரி, பழமொழி, உவமை, விடுகதை வட்டார வழக்குச் சொற்களும் படைப்புகளில் நிறையப் பதிவாகி இருக்கும். கருவிற்கு இடையூறு இல்லாமல் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதும் முக்கிய நோக்கமாகும்.

**உங்களுடைய ஆய்வுகளில் குறிப்பாக இலக்கண - மொழியியல் ஆய்வுகளின் போக்கைக் கூற முடியுமா?**

மரபிலக்கணத்தைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குக் கண்டிப்பாக மொழியியல் அறிவு தேவை. இலக்கண உரைகளைப் படிக்கும் போது பல உரையாசிரியர்களின் கருத்து நம்மை வியக்க வைக்கும். மொழியியலில் புதிதாகச் சொல்லப்படும் கருத்து உரைகளிலேயே சொல்லப் பட்டிருக்கும்.

மாணவர்கள் இலக்கணத்தைப் புரிந்து கொள்வதற்குக்கூட மொழியியல் அணுகுமுறை மிகவும் முக்கியமானதாகும். இந்த அடிப்படையில் மாணவர் பயன்பாட்டை முதன்மையாகக் கொண்டு தொல்காப்பியம், நன்னூல், அகப்பொருள், புறப்பொருள், தண்டியலங்காரம். யாப்பருங்கலக்காரிகை போன்ற ஒன்பது நூல்கள் வெளிவந்துள்ளன. பேராசிரியர்க்கும் மாணவர்க்கும் நன்றாகப் பயன்படுகின்றன.

எழுத்தியல், சொல்லியல் களங்களில் ஆய்வு நோக்கில் பத்துக்கு மேற்பட்ட நூல்கள் விரைவில் வெளிவர உள்ளன. மொழியியல் திராவிட மொழியியல் தொடர்பான நூல்களும் அச்சில் உள்ளன. காலங்காலமாக உள்ள பல இலக்கணக் கோட்

பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. இலக்கண - மொழியியல் தொடர்பான ஆய்வுகள் நினைத்துப் பார்க்க முடியாத சிந்தனையின் வெளிப்பாடு என்று கூறுவதில் எனக்கு மிகையாகத் தெரியவில்லை. ஆய்வாளர்கள்தான் கருத்துக் கூற வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் நிறையத் தரவுகள் இருக்கின்றன. ஆனால் இலக்கண நூலாரும் உரையாசிரியர்களும் அவற்றை முழுமையாக விளக்கவில்லை; மாறுபட்ட விளக்கம் கொடுக்கிறார்கள் என்னும் கருதுகோளுடன்தான் மேற்கூறிய ஆய்வு நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

**உங்களுடைய படைப்புகள், ஆய்வுகளுக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளதாக நம்புகிறீர்களா?**

மனதிற்குள் என்னுடைய படைப்புகளுக்கும் ஆய்வுகளுக்கும் நல்ல அங்கீகாரம் கிடைத்துள்ளது. இல்லை என்றால் எழுதவே முடியாது. 'இந்தப் புத்தகத்தை எதுக்கு எழுதினேன்னே தெரியல' என்று சிலர் புலம்பியதைக் கேட்கும் நமக்கு ஓர் ஆறுதல்.

'வாட்டாக்குடி இரணியனைப் படிச்சுட்டு பதினஞ்சு நாளை என்னால் தூங்க முடியல' என்று ஒரு தோழர் எழுதியதே பெரிய அங்கீகாரம் தானே. மாவீரன் வாட்டாக்குடி இரணியனுக்குத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பரிசு வழங்கியுள்ளது. ஒட்டுமொத்தப் படைப்புகளைப் பாராட்டிச் செங்கமலத் தாயார் அறக்கட்டளை விருது வழங்கியுள்ளது. முத்தமிழ் மன்றம் 'ஜீவா விருது' வழங்கியுள்ளது. பல்வேறு அமைப்புகள் படைப்புகளையும் ஆய்வுகளையும் பாராட்டி விருதுகளை வழங்கியுள்ளன.

தமிழக அரசு (2001) தமிழறிஞராகத் தேர்வு செய்து மகனுக்கு மருத்துவம் படிக்க இடம் ஒதுக்கியது. காலங்கள் (2001) என்னும் இலக்கண - மொழியியல் ஆய்வு நூலுக்கு தமிழக அரசு பரிசு வழங்கியது.

பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (2007-2010) பேராய்வுத் திட்டத்தில் ஆய்வு செய்ய நிதி வழங்கியது. மைய அரசின் செம்மொழி ஆய்வு நிறுவனம் (2011-2012) ஆய்வு செய்ய நிதி வழங்கியது. பல்கலைக் கழக நிதி நல்கைக்குழு (2014-2016) தகைசால் பேராசிரியர் (Emeritus Fellow) எனத் தேர்வு செய்து ஆய்வு செய்ய நிதி வழங்கியது. இவை எல்லாம் மனதிற்கு மகிழ்வைத் தரக்கூடியவை.

உலகப் பொதுமறையை வழங்கிய வள்ளுவரும் மகாகவி பாரதியாரும் எதிர்கால அங்கீகாரத்தை எண்ணியா எழுதினார்கள்? இவர்களுடைய பணிகள் பனையைப் போன்றவை. பரம்பரைகள் அனுபவிக்கின்றன. தந்தை பெரியாரின் பணி தென்னை-பனையைப் போன்றது. பலனை அவரும் பார்த்து மகிழ்ந்தார். வரும் காலத்திற்கும் விட்டுச் சென்றார்.

**படைப்பாளர், ஆய்வாளர் என்னும் இரு தளங்களில் நிற்கும் உங்களுடைய கருத்துகள் இளந்தலை முறைக்கு எவ்வாறு பயன் அளிக்கும்?**

ஆற்றல் பொங்கித் ததும்பும் பருவம் இளமை. அறிவு நிரம்பி அடங்கி இருக்கும் பருவம் முதுமை. விதிவிலக்குகள் நிறைய இருக்கும். அவற்றுக்குச் சமுதாயத்தின் பங்கும் உண்டு. சாதிப்பதற்கு வயது தடையாக இருக்காது.

படைப்பாளர்களுக்கு மொழி ஆளுமை வேண்டும். அந்த ஆளுமையைப் பெற நிறையப் படிக்க வேண்டும். தமிழில் பட்டம் பெற வேண்டும் என்பதில்லை.இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் தொழிலை எப்படிச் செய்தார்களோ தெரியவில்லை; வழக்குரைஞர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு எண்ணிப் பார்க்கத்தக்கது.

இப்போது பல இளைஞர்களின் படைப்புகள் அவர்களின் வயதை மிஞ்சியவையாக இருக்கின்றன விநாயகமுருகன்... எனப் பலரைக் கூறலாம். படைப்பாளராக விரும்புவோர் நிறையப் படிக்க வேண்டும்; நிறையப் பார்க்க வேண்டும்; கவனிக்க வேண்டும். எந்த எழுத்தும் சமுதாயம் சார்ந்ததாகவே இருக்க வேண்டும். பிரச்சினைகள் கடை விரித்து வைக்கப் பட்டுள்ளன.


அந்தக் காலத்தில் பல சான்றோர்களின் எழுத்துகளும் பேச்சுகளும் உலகத்தையே புரட்டிப் போட்டதாகக் கூறுவார்கள். அண்மைக் காலத்தில் அப்படிப் புரட்டிப் போட்டதாகத் தெரியவில்லை. மக்களிடம் நல்லதைச் செய்வதாக இருந்தாலும் அல்லதைச் செய்வதாக இருந்தாலும் விழிப்புணர்வு தெளிவாக இருக்கின்றது. கோலம் போடாத வீட்டைக் கண்டறிந்து பூட்டை உடைக்கும் முறையே ஒரு விழிப்புணர்வு தானே.

தந்தை பெரியார் சங்கை ஊதினார்; அதன் எதிரொலியை அவரே கேட்டார். அதனால் சங்கு ஊதுவதை மட்டும் நிறுத்தக்கூடாது. கண்டிப்பாக விடியும். மக்கள் விரும்பியவற்றை விட வேண்டாதவற்றைச் செய்யவே அரசுகள் ஆர்வம் காட்டுகின்றன. ஜல்லிக்கட்டு, மதுக்கடை திறப்பு, எரிவாயு எடுப்பது போன்றவற்றில் மக்கள் காட்டிய எதிர்ப்பே சான்றுகள்.

இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறவியல், பிற துறைகள் என எல்லாவற்றிலும் சாதிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. அவர் சொன்னார். இவர் சொன்னார் என்பது மட்டும் ஆய்வாகாது. நாம் என்ன சொல்கிறோம் என்பதே முக்கியம். நான் என்ன சொல்லிவிடறப் போகிறேன். லெனின் சொன்னது தான். படி! படி!! படி!!! ●

# நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?

பெரியாரின் 1925-1973 வரையிலான முழுமையான பதிவுகள்




**பசு. கவுதமனின்**

பல்லாண்டு பெரும் முயற்சியில்
பெரியார் எழுதியபடியே வெளிவரும்
பெரியாரின் எழுத்துகளுக்கான ஒரு செம்பதிப்பு

தொகுதி 1: மொழி
தொகுதி 2: கலையும் பண்பாடும்
தொகுதி 3: இலக்கியம்
தொகுதி 4: தத்துவமும் சொற்சித்திரமும்
தொகுதி 5: சித்திரபுத்திரன் கட்டுரைகளும் உரையாடல்களும்

A4 அளவு, தரமான தாள்,
அழகிய வடிவமைப்பு,
கெட்டி அட்டை கட்டு

**ஐந்து தொகுதிகள்**
**விலை ₹ 4000/-**

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

**கிளைகள்**

அம்பத்தூர்: 044-26359906, 26241288, 26258410, 26251968; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-4374106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.




# நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?

ஆ. வந்தியத்தேவன்

**த**ஞ்சை நகரில் திராவிடர் கழகத்தை வேரூன்றச் செய்தவர். இராணுவத்திலும் திருச்சி இரயில்வே பணியிலும் பணியாற்றிய காலத்திலும் கழகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர். தாலி மறுப்பு, சாதி மறுப்பு ஆகிய கொள்கைகள் அடங்கிய பகுத்தறிவு சுயமரியாதை திருமணங்களை தானும் தன் மக்களும் பின்பற்றி எடுத்துக்காட்டான பெரியார் தொண்டராக வாழ்ந்தவர்தான் பசுபதி!

துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்ததைப் போல என்ற குத்தூசி குருசாமி அவர்களின் கூற்றுக் கிணங்க, பெரியாரின் போர்வாளாய் தஞ்சை மண்ணில் களமாடிய பசுபதி அவர்களின் பாச மகன் பசு. கவுதமன், பெரியாரியலைப் பரப்புவதில், தன் தந்தையை விஞ்சி விட்டார் என்பதைப் பெருமையுடன் நாம் பாராட்டி மகிழலாம்!

தந்தை பெரியாரின் பேச்சு, எழுத்து ஆகிய வற்றை ஐந்து பெரும் தொகுதிகளாகத் தொகுத்து, ‘நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?’ என்ற தலைப்பில் 3660 பக்கங்கள் கொண்ட மாபெரும் நூலை தஞ்சை பசு. கவுதமன் உருவாக்கித் தந்துள்ளார். இதனை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

பெரியாரின் கொள்கைகளை வெகு மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள தோழர் பசு. கவுதமன் அவர்களுக்கும், நியூ செஞ்சுரி நிறுவனத் திற்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகளை, பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூலின் முகப்பு அட்டையை எழிலோடு தீட்டித் தந்த ஓவியர் ட்ராட்ஸ்கி மருது, அச்சிட்ட பாவை பிரிண்டர்ஸ் நிறுவனத்தினர் ஆகியோரும் நம் பாராட்டுக்குரியவர்களே!

1934-ஆம் ஆண்டில் ஈரோடு பகுத்தறிவு நூற் பதிப்புக் கழகம் பெரியாரின் குடியரசு பதிவுகளைத் தொகுத்து 'குடியரசுக் கலம்பகம் முதல் பாகம்' என்ற பெயரில் வெளியிட்டது. இதுதான் பெரியாரின் தொகுப்பு நூல்களில் முதலாவது என்ற பெருமைக்குரிய நூலாகும்.

இதன் பின்னர் திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பில் பெரியாரின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் மூன்று தொகுதிகளாகத் தொகுத்து பெரியாரின் ஒப்புதலுடன் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் 1974-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டில் அவரே அந்தத் தொகுதிகளை, ஆறு தொகுதிகளாகவும் 36 பகுதிகளாகவும் வெளியிட்டார்.

இதே காலகட்டத்தில் (2008-ஆம் ஆண்டில்) பெரியார் திராவிடர் கழகம் 'குடியரசு' இதழ் களைத் தொகுத்து 29 தொகுதிகளாக நூலாக்கி வெளியிட்டது.

பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் குடியரசு தொகுதிகள் 42அய், பெரியார் களஞ்சியம் என்ற தலைப்பில் 2009 முதல் வெளியிட்டது. அடுத்த தொகுதிகளைத் தொடரும் பணியிலும் அது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

தோழர் தஞ்சை பசு. கவுதமன் அவர்களே பெரியாரின் படைப்புகளைத் தொகுத்து மூன்று தொகுதிகளாக 'ஈ.வெ. இராமசாமி என்கிற நான்...' என்று எழுதியதை பாரதி புத்தகாலயம் 2009-ஆம் ஆண்டில் வெளியிட்டது.

பெரியாரின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் தொகுத்து 'பெரியார் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் கோவை விடியல் பதிப்பகம் கடந்த ஆண்டில் பெரிய நூலாக வெளியிட்டது.

இவர்கள் அனைவரும் நம் நிரந்தரமான பாராட்டுக்குரியவர்களே!

1925-ஆம் ஆண்டு முதல் 1973-ஆம் ஆண்டு வரைக்குமான பெரியாரின் பதிவுகளை மொழி, இலக்கியம், கலையும் பண்பாடும், தத்துவம் சொற் சித்திரம், சித்ரபுத்திரன் பதிவுகள் என ஐந்து தொகுதிகளாக இந்த நூலை பசு. கவுதமன் தொகுத்துத் தந்துள்ளார். ஒட்டுதல் வெட்டுதல் போன்ற சேதாரங்கள் இன்றி பெரியார் காலத்தில் அச்சில் வெளிவந்தபடியே, கால வரிசைப்படி இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

பெரியார் எழுதிய நூல் மதிப்புரைகள், இரங்கல் குறிப்புகள், அறிவிப்புகள், தோழர்களிடம் ஆலோசனை கேட்ட செய்திகள் முதலானவை புதிய தகவல்களாக இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன. அறிஞர் வேமன்னாவின் முயற்சியில் கர்நாடக சிந்தனையாளர் கழகம் பெரியாரின் நூல்களை கன்னட மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்ட 19 நூல்களின் பட்டியலையும் இந்நூல் பெருமிதத் துடன் சுட்டிக் காட்டுகிறது.

1928-ஆம் ஆண்டு முதல் 2005-ஆம் ஆண்டு வரை 229 தலைப்புக்களில் வெளிவந்த பெரியாரின் பேச்சு, எழுத்து அடங்கிய நூல்களின் பெயர்கள், அவற்றை வெளியிட்ட பதிப்பகங்களின் பெயர்கள் முதலானவைகளும் இந்நூலில் வரலாறாய் இடம் பெற்றுள்ளன.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் களான ஆர். நல்லகண்ணு, தா. பாண்டியன், முற்போக்கு எழுத்தாளர் வ. கீதா, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் (மேனாள்) தலைவர் வீ.அரசு, ந. முத்துமோகன், பேராசிரியர் இரா. காமராசு ஆகியோரின் கருத்து வளம் நிறைந்த அணிந்துரைகள் நூலுக்கு அணி சேர்க் கின்றன.

நூலின் தொகுப்பாசிரியர் பசு. கவுதமன் அவர்கள் 22 பக்கங்கள் கொண்ட சிறப்பான முன்னுரையை நன்றியுரையாக்கித் தந்துள்ளார். தந்தை பெரியார் அவர்களின் சிலைகளில் உள்ள கடவுள் மறுப்பு வாசகங்கள் 1971-ஆம் ஆண்டில் மிகப் பெரிய பிரச்சினையாக்கப்பட்டு நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டது. அப்போது 'உண்மை' இதழில் மூன்று தலையங்கங்களைத் தீட்டிய பெரியார், அதற்குக் கொடுத்த தலைப்பு தான், "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?" என்பது.

"நான் சொல்லும் வழி தவறு என யாராவது கருதினால் அதற்கு வழிகாட்டட்டும். எனக்கு வேறு வழி காட்டாமலும், என்னுடன் சேரா மலும், என்னைக் குறை கூறிக் கொண்டு மட்டும் இருந்தால் அவர்களைக் கோழைகள் என்று தான் சொல்வேன்," என்றும் "நான் தவறு செய்யலாம். என் ஆராய்ச்சியும் குருடன் யானையைக் கண்ட காட்சி போல என்னைத் தவறான வழியில் இழுத்து விட்டிருக்கலாம். அப்படி இருந்தாலும் அதில் அதிசயமிருக்காது.

ஆனால் அதை திருத்துவது எப்படி? என்னைக் குறைகூறுவதும் என்னைத் தண்டிக்கச் செய்வதும் திருத்துவதாகிவிடுமா?" என்றும் தம்மையும் விசாரணைக்குரியவராக நிறுத்தி - பகுத்தறிவைப் பயன்படுத்தி அழைப்பு விடுத்த அதிசயத் தலைவர் அய்யா பெரியாரின் தனிச் சிறப்பைத் தோழர் கவுதமன் முன்னுரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தொகுப்பு நூலை உருவாக்க காரண மான நிகழ்ச்சி எது? எழுதத் தூண்டியவர் யார்? எப்படி எழுதப்பட்டது? யார் யார் எந்தெந்த வகையில் துணை நின்றார்கள் என்பதையெல்லாம் தோழர் கவுதமன் தன் முன்னுரையில் பதிவு செய் துள்ளார்.

> "பெரியாரின் பொது வாழ்க்கை 1914,1915-ஆம் ஆண்டுகளில் துவங்குகிறது. அதிலிருந்து 1924 வரைக்குமான பதிவுகள் இன்றும் தேடலுக்கு உரியனவாக இருப்பதாகவே கருதுகிறேன். அதைப் போன்றே அவர் சார்ந்த, அவர் இயக்கம் சார்ந்த இதழ்களின் வெளியீடுகள் தவிர்த்து பிற இதழ் களிலும் வெளியீடுகளிலும் அவர் தேடப்பட வேண்டும். அப்போதுதான் பெரியார் முழுமை பெறு வார்."

என்று எதிர்காலத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகளையும் தோழர் கவுதமன் சுட்டிக் காட்டு கிறார்.

தோழர் பசு. கவுதமன் இப்போது திராவிடர் கழகத்தில் உறுப்பினராக இல்லை. இந்த நிலை யிலும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களைப் பற்றி, "ஆசிரியர் அவர் களை 25 ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கின்ற உரை யாடுகின்ற வாய்ப்புக் கிடைத்த அந்தத் தருணம் நெகிழ்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்ந் தேன்." என்று குறிப்பிட்டு, பெரியார் திடலில் உள்ள நூலகத்தைப் பயன்படுத்திக் கொண்டதை நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

"கட்டைவிரல் கேட்கவில்லை ஆனாலும் என் ஆசானாய் அய்யா, ஆசிரியர் மானமிகு கி. வீரமணி அவர்களுக்கு" என முதல் தொகுதியையும், "என்னை ஆளாக்கி என் உயரத்தைக் காணாமல் மறைந்த தாய் பத்மாவுக்கு, தந்தை பசுபதிக்கு, என்னை வளர்த்தெடுத்த இரண்டாம் தாய் என் அன்புத் துணைவி அறிவுச் செல்விக்கும்" என மூன்றாவது தொகுதியையும், கொளத்தூர் த.சொ. மணி, கோவை கு.இராமகிருட்டிணன், பட்டுக்கோட்டை இளவரி, குடந்தை ஏ.எம். ஜோசப், குடந்தை ஆர்.பி.எஸ். ஸ்டாலின், பேராசிரியர் மு. இராம சாமி ஆகியோருக்கு எஞ்சிய பிற தொகுதிகளையும் தோழர் பசு.கவுதமன் நன்றியுடன் நூலை ஒப் படைத்து மகிழ்கிறார்.

"நான் சாதாரணமானவன்; என் மனதில் பட்டதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இது தான் உறுதி. இதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும் என்று சொல்லவில்லை; ஏற்கக்கூடிய கருத்துக்களை உங்கள் அறிவைக் கொண்டு நன்கு ஆய்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்; மற்றதைத் தள்ளி விடுங்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதத் தன்மைக்கு மீறிய எந்தக் குணத்தையும் என் மீது சுமத்தி விடாதீர்கள். நான் தெய்வத் தன்மை பொருந்தியவனாகக் கருதப்பட்டால், மக்கள் என் வார்த்தைகளை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள்," என்ற அறிவாசான் பெரியாரின் பொன்மொழி களோடு நூல் தொடங்குகிறது.

தமிழகத்தின் கல்வி அமைச்சராக சி. சுப்ர மணியம் இருந்தபோது, பள்ளிகளில் மதக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று ஒரு கூட்டத்தில் பேசினார். இதனைக் கண்டித்து "சித்ரபுத்திரன்" என்ற புனைப் பெயரில் உரையாடல் நடையில் விடுதலையில் (07. 08. 1959) எழுதினார் பெரியார்.

"மாட்டைக் கொன்று செருப்புத் தானம் பண்ணுவது போல மதத்தைக் காப்பாற்றி முதன் மந்திரியாகப் பார்ப்பதும் மடமை என்றுதான் சொல்ல வேண்டும்!

மதம் என்ற பெயரால் கீதையைப் பள்ளிகளில் போதித்தால், திணித்தால் நாங்கள் நடத்துகிற பள்ளிகளில் புத்தக் கொள்கைகளை, நாத்திகக் கொள்கைகளை ஏன் கற்பிக்கக் கூடாது?


குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொள்ளப் பட்டதாக இருக்கக்கூடாது என்பது என் ஆசை!" என்ற பெரியாரின் கருத்துடன் நூல் நிறைவு பெறுகிறது.

தஞ்சை, மதுரை, கோவை என முக்கிய நகரங் களில் எல்லாம் இந்த நூல் தொகுப்பினை அறிமுகம் செய்து முன்பதிவுக்கான கூட்டங்களும் பின்னர் நூல் வழங்கும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இரண்டாயிரம் பிரதிகளும் இந்த வகையில் விற்றுத் தீர்ந்து விட்டன. அடுத்த பதிப்புக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னையில் நடைபெற உள்ள புத்தகக் கண்காட்சியில் இரண் டாவது பதிப்பு நூல்கள் கிடைக்கும் என அறிவித் துள்ளனர்.

எதிர்ப்புக்களும், ஏளனங்களும், திரிபு வாதங் களும் மலிந்து விட்ட இந்தக் காலத்தில் தந்தை பெரியார் கொள்கைகளுக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய மரியாதையாகவும், எதிர்பார்ப்பாகவும் இந்த நூல் விற்பனையைக் கருதி மகிழ்ச்சி கொள் வோம்!

தொகுப்பு நூலாசிரியருக்கும் - வெளி யீட்டாளருக்கும் மீண்டும் நம் பாராட்டுக்கள்.

**நன்றி: சங்கொலி**





# நவீன தமிழிலக்கியத்தின் முன்னோடி தொ.மு.சி.ரகுநாதன்

பி. தயாளன்

**தொ.**மு.சி.ரகுநாதன் தமிழ் இலக்கிய ஆய்வை இலக்கண ஆய்வு நிலையிலிருந்தும், ரசனை ஆய்வு நிலையிலிருந்தும் சமூகநிலை ஆய்வு என்னும் ஆழமான தளத்துக்குக் கொண்டு சென்று, இலக்கிய ஆய்வின் எல்லையை விசாலப்படுத்தியவர்.

'சிறுகதை மன்னன்' புதுமைப்பித்தனுடைய புரட்சிகர ஆளுமையைத் துலக்கி, வளர்த்துத் தமிழ் இலக்கிய உலகுக்கு வழிகாட்டும் வகையில் வடிவமைத்தவர். மக்கள் இலக்கியத்தை வளர்க்க 'இலக்கியப் பேராசான்' ஜீவாவின் வழியில் மக்கள் திரளைச் சார்ந்து, இலக்கிய அமைப்புகளின் வழியே தொண்டாற்றியவர். நவீனத் தமிழ் இலக்கிய விமர்சனத்தை வளர்த்தெடுத்தவர். இலக்கியத்தையே வாழ்வாகக் கொண்டவர். இலக்கிய மாகவே வாழ்ந்தவர். சோசலிச யதார்த்தப் படைப்பு முறையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்.

சிறுகதையாளராக, நாவலாசிரியராக, கவிஞராக, இலக்கியக் கோட்பாட்டாளராக, இளங்கோவடிகள், பாரதி, புதுமைப்பித்தன் ஆகியோரைப் பற்றி ஆய்வுப் பூர்வமாக அறுதியிட்டுப் பேசும் தகுதியுடையவராக, விளங்கியவர் தொ. மு. சி. ரகுநாதன்.

ரகுநாதன் இலக்கிய அமைப்புகளைப் புறக்கணிக் காதவர், இலக்கியத்தை விவாதத்துக்குள்ளாக்குவதை விரும்பியவர். கூட்டுச் சிந்தனையின் வலிமையை

உணர்ந்தவர். இலக்கியத்தைச் சமூகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமையை மதித்தவர். சமூகத்துக்கும் இலக்கியத்துக்கும் இடையில் இருக்க வேண்டிய நல்லுறவின் முக்கியத்துவத்தைப் புரிந்தவர். சமூகத்தைத் தூண்டும் இலக்கியப் பேராற்றலை அறிந்தவர்.

இருபதாம் நூற்றாண்டு மக்கள் இலக்கியச் சாதனையாளர்களில் ஒருவர். கவியரங்கக் கவிதைக்கு இலக்கிய அங்கீகாரம் ஏற்படுத்திய மக்கள் கவிஞர். போராடும் தொழிலாளர்களை முதன் முதலாகத் தமிழ் இலக்கியத்தில் கதாநாயகனாக்கிய புரட்சிகர எழுத்தாளர். புதிய சமூக உண்மைகளைக் கண்டடைந்த சாதனையாளர். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்த இலக்கியப் போராளி. இத்துனை சிறப்புக்குரியவர் 'நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி' அவர்தாம் தொ.மு.சி. ரகுநாதன்!

திருநெல்வேலியில் தொண்டைமான் முத்தையா-முத்தம்மாள் வாழ்விணையருக்கு 20-10-1923 ஆம் நாள் பிறந்தார் ரகுநாதன்.

ரகுநாதன் தமது ஆரம்பக்கல்வியை ஷாப்டர் பள்ளியில் படித்தார். உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில மொழி வழியில் பாடங்களைப் படித்தார். நெல்லை இந்துக் கல்லூரியில் 1939 ஆம் ஆண்டு இண்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்து பயின்றார்.

ரகுநாதன் தமது நண்பர்களுடன் சேர்ந்து 'ஜவஹர் வாலிபர் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கி பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கண்டித்து பிரசுரங்களை வெளியிட்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். 1942 ஆம் ஆண்டு காந்தி ஜெயந்தி அன்று, நெல்லை அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களைத் திரட்டி ஊர்வலம் நடத்தினார். ஊர்வலத்தில் அணி வகுத்துச் சென்ற மாணவர்கள் மீது பிரிட்டிஷ் அரசின் காவல்துறையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். அப்போது காவல்துறையினரால் ரகுநாதன் கடுமையாக தாக்கப் பட்டார்.

நெல்லையில் 1947 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 'கலைஞர் கழகம்' என்னும் இலக்கிய அமைப்புத் தொடங்கப்பட்டது. அதன் தலைவராக ரகுநாதன், செயலாளராக தி.க.சி, நா.வானமாமலை, என்.டி. வானமாமலை, சீனிவாசன், கணபதியப்பன், ஜெகநாதன் முதலியவர்கள் பொறுப்பாளர்களாக விளங்கினர். கலைஞர் கழகத்தில் ஜீவாவை அழைத்து உரையாற்ற வைத்தனர்.

'மின்னல்' என்னும் கையெழுத்து இதழை 1940 ஆம் ஆண்டு நடத்தினார். 'பிரசன்ட விகடன் ' முதலிய சிற்றிதழ்களில் அவரது படைப்புகள் வெளிவந்தன.

சென்னைக்குச் சென்று 'தினமணி' நாளிதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர், 'முல்லை' என்னும் இலக்கிய மாத இதழில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

வை.கோவிந்தன் நடத்திய 'சக்தி' என்னும் இலக்கிய இதழில் கு.அழகிரிசாமியுடன் இணைந்து துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

'சாந்தி' என்னும் இலக்கிய மாத இதழை 1954 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நெல்லையிலிருந்து வெளியிட்டார். அந்த இதழின் ஆசிரியராக விளங்கினார். 'சாந்தி' இதழில் கவிஞர் தமிழ்ஒளி, சுந்தர ராமசாமி, அகிலன், சி.வி.எஸ். ஆறுமுகம், டி.செல்வராஜ், கு. அழகிரிசாமி, நா.வானமாமலை, சாமி சிதம்பரனார், கமில் சுவலபில், எஸ்.இராமகிருஷ்ணன், வையாபுரி பிள்ளை, ஆ.நடராசன், வை.கோவிந்தன், தி.க.சி., துறைவன், கே.சி. எஸ்.அருணாசலம் முதலிய இலக்கிய ஆளுமைகளை எழுத வைத்தார்.

நிதி நெருக்கடியின் காரணமாக 1956 ஏப்ரல் மாதம் 'சாந்தி' இதழ் நின்று போனது. சென்னையிலிருந்து வெளிவந்த 'சோவியத் நாடு' இதழில் 1967 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார்.

ரகுநாதன் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் போதே கவிதைகள் எழுதத் தொடங்கி விட்டார். 'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற பெயரில் கவிதைகள் படைத்து அளித்தார்.

அன்றைய தமிழகத்தின் முதல்வராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில், சென்னை வானொலியில் 'நம்ம சர்க்கார்' என்னும் தலைப்பில் 'யாருக்கு சுதந்திரம்' என்ற கருத்தை மையமாகக் கொண்டு கவிதை பாடினார்.

**"இருப்பில் உணவிருக்க இருட்டில் பதுக்கி வச்சி**
**கருப்புக் கடை நடத்தி காசுதனைச் சேர்த்தோன்**
**உருப்படியாய் நம்முன்னே உலா வந்து போவதையும்"**

என்று தொடங்கி, யாருக்கெல்லாம் இன்று சுதந்திரம் இருக்கிறது என அன்றைய அரசியல் சமூக நிலைமையைக் கடுமையாகத் தமது கவிதையில் விமர்சித்தார் ரகுநாதன்.

"அப்போதுதான் நமது நாடு விடுதலை பெற்றது. தமிழ்நாட்டில் மிகக் கடுமையான உணவுத் தட்டுப்பாடு நிலவியது. பதுக்கலும், லஞ்சமும் தலைவிரித்தாடின. பதுக்கல் எடுப்புப் போரில் கம்யூனிஸ்ட் கட்சி தீவிரமாக ஈடுபட்டிருந்த காலம் அது.

இந்தக் கவிதையை வானொலியில் கேட்ட அறிஞர் அண்ணா, தமது 'திராவிட நாடு' இதழில் மூன்று பக்கத்தில் ஒரு மதிப்புரையை எழுதி வெளியிட்டார். 'நம்ம சர்க்கார்' என்னும் இக்கவிதை ரகுநாதனுக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது.

ரகுநாதனின் கவிதைகள், விருத்தத்தின் மிக நெகிழ்ந்த வடிவம், நாட்டுப்புற மரபின் சாயல் கொண்டது. இலக்கண வரம்பிலிருந்து விலகாதது. வழக்கில் உள்ள சொற்கள், சொற்றொடர்கள் கலந்து கேட்போரை வசப்படுத்துவது என இலக்கிய ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.

பாரதி ரகுநாதன் மீது கொண்ட அளவற்ற பற்றால், பாரதி விழா மேடைகளில் பாரதியைப் பற்றி கவிதை முழக்கங்கள் செய்தார்.

**"சாதிபேதமெனும் களக்கறுத்து மானிடமாம்**
**நீதி ஒன்றே தர்மம் என நிலை நாட்டும் சமுதாயம்**
**மானிடர்கள் எல்லோரும் வள வாழ்க்கை தனைப்பெற்று**
**வானுறையும் தெய்வம் போல் வாழவைக்கும் சமுதாயம்**
**அத்தகைய சமுதாயம் அதனைத்தான் நம் கவிஞன்**
**இத்தரையில் ஒப்பில்லாச் சமுதாயம் என்றுரைத்தான்"–**

என்று பாரதி தமது கவிதைகளின் உயிராக நிலை நிறுத்திய ஒப்பில்லாச் சமுதாயம் என்னும் கருத்துக்கு மானுட நீதியை அடிப்படையாக்கித் தமது கவிதை மூலம் விளக்கம் தருகிறார்.

தமிழில் ஏலாதா என்னும் பொருள் பற்றி ரகுநாதன் பாடிய கவிதை தமிழர்களை சிந்திக்கத் தூண்டுகிறது.

**"தாய்மொழியை தாயகத்தைத் தள்ளி**
**வைத்து வெள்ளையர்க்கு**
**நாயடிமை செய்தவர்கள் நாத்தடித்துப் போனதனால்,**
**தன் பலத்தைத் தானறியா யானையைப்**
**போல் ஆங்கிலத்தின்**
**பின் பலத்தை நம்புகின்ற பேடியர்கள் உள்ளதால்**
**கற்றுவிட்ட ஆங்கிலத்தைக் கைகழுவ மனமின்றிப்**
**பெற்றுவிட்ட தாய்மொழிக்கே**
**பிணக்குழியைத் தோண்டுவார்.**
**இடமில்லை ! தாய் மொழியை**
**இழித்துப் பழிப்பவர்க்கிங்கிடமில்லை!**

தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் தமிழ் மொழி ஆட்சி செய்ய வேண்டும். குறிப்பாகப் பயிற்று மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து தொடர்ந்து குரல் எழுப்பி வந்தார் ரகுநாதன்.

ரகுநாதன் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், காவியப் பரிசு, தமிழால் ஏலாதா ? முதலிய கவிதை நூல்களையும் எழுதி அளித்துள்ளார்.

அண்ணனும் தம்பியும், பெண்ணாய்ப் பிறந்தால், மோகினி, மருது பாண்டியர், சிலை பேசிற்று, வலி, அத்தான் வந்தார், பஞ்சப்பாட்டு முதலிய சமூக நாடகங் களை படைத்தளித்துள்ளார்.

'புதுமைப்பித்தன் வரலாறு' என்ற நூலின் மூலம் புதுமைப்பித்தனின் விரிவான வரலாற்றை தமிழுலகுக்கு அளித்துள்ளார்.

'சமுதாய இலக்கியம்' என்ற நூலின் மூலம் இலக்கியம் சமுதாய மாற்றத்திற்கு எவ்வாறு பயன்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

'இலக்கிய விமர்சனம்' என்னும் நூலை தமது இருபத்தைந்தாவது வயதில் எழுதி வெளியிட்டார். விமர்சனக் கலை பற்றி தமிழில் வெளிவந்த முதல் நூல் ஆகும்.

முதலிரவு, கன்னிகா, பஞ்சும் பசியும். புயல் முதலிய நாவல்களை தொ.மு.சி. ரகுநாதன் எழுதி யுள்ளார்.

நீயும் நானும், சேற்றிலே மலர்ந்த செந்தாமரை, ரகுநாதன் கதைகள், க்ஷணப்பித்தம் முதலிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டார்.

அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும், இளங்கோவடிகள் யார்? முற்போக்கு இலக்கிய இயக்கங்கள், புதுமைப்பித்தன் கதைகள் - சில விமர்சனங்களும் விஷமத்தனங்களும் முதலிய ஆய்வு நூல்களை எழுதி அளித்துள்ளார்.

பாரதியும், ஷெல்லியும், கங்கையும் காவிரியும் (தாகூரும், பாரதியும்) முதலிய ஒப்பிலக்கிய நூல்களை எழுதியுள்ளார்.

பாரதி-சில பார்வைகள், பாரதி காலமும் கருத்தும், பாரதியும் புரட்சி இயக்கமும், பாஞ்சாலி சபதம் - உறை பொருளும் மறை பொருளும் முதலிய பாரதி ஆய்வு நூல்களை தமிழிலக்கிய உலகிற்கு எழுதி வழங்கியுள்ளார்.

புதுமைப்பித்தன் கதைகள், காந்திமதி கலித்துறை அந்தாதி முதலிய நூல்களை பதிப்பித்துள்ளார்.

தொ.மு.சி. ரகுநாதன், 'மருது பாண்டியர்' என்னும் தமது நாடகத்தில், ஆங்கிலேயர்கள் தமது ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்ள , நமது நாட்டு மக்களிடையே சாதிப் பகைமையைத் தூண்டி, மோதலை ஏற்படுத்திய வஞ்சகத்தைப் புறந்தள்ளி, மக்கள் ஒன்றுபட்டு நின்ற கதையை, மையமாக வைத்துப் படைத்துள்ளார்.

இவரது 'இலக்கிய விமர்சனம்' என்னும் நூல், தமிழில் வெளிவந்த முதல் இலக்கிய விமர்சன நூலாகும். இந்நூல் தமிழிலக்கிய உலகத்தை மகிழ்ச்சியும், அதிர்ச்சியும் அடையச் செய்தது. அழகியலைத் தமிழுக்கு அறிமுகம் செய்த முதல் நூலாகவும் இது அமைந்தது. "இலக்கிய விமர்சனத்தை விஞ்ஞானப்பூர்வமாக மாற்றும் முயற்சி இந்நூல்" என மதிப்பீடு செய்துள்ளார் மார்க்சிய இலக்கியத் திறனாய்வாளர் கலாநிதி கா.சிவத்தம்பி.

ரகுநாதன் 'முதலிரவு' என்னும் நாவலை 1949 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். அந்நாவல் தமிழ் வாசகர்கள் மத்தியில் பெரும் புயலைக் கிளப்பியது. நாவல் வெளிவந்த சில மாதங்களிலேயே பல பதிப்பு களைக் கண்டது. பொறாமை கொண்ட சில நூல்

வெளியீட்டாளர்கள், அந்த நாவல் ஆபாசமானது என்று கூறி அரசாங்கத்துக்குப் புகார் செய்தனர். அப்போது தமிழகத்தின் கல்வியமைச்சராக இருந்த அவினாசிலிங்கம் செட்டியார், நாவலில் ஓரினச் சேர்க்கை, முறை பிறழ்ந்த ஈரினச் சேர்க்கை, காந்தியப் பாலியல் நிலைக்கு எதிர்ப்பு எனக் கூறி, புத்தகத்தைத் தடை செய்து ஆணை பிறப்பித்தார்.

இந்தத் தடையாணையை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வாதாடினார். பலனில்லை, கைது செய்யப்பட்டார். பின்னர் நீதிமன்றம் விதித்த அபாராதத் தொகையைக் கட்டி மீண்டார்.

அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக பெருந்தொழிலாக விளங்கியது கைத்தறி நெசவு, அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கையினால், கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் மிகுந்த வறுமையில் வாடிக்கொண்டிருந்த காலம் அது. பசியும் பஞ்சமும் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன. ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கஞ்சிக்கு வழியின்றி செத்து மடிந்தனர். குடி தண்ணீருக்குக் கூட கடுமையான பஞ்சம் நிலவியது. தெரு முனைகளில் அரசு திறந்திருந்த கஞ்சித் தொட்டி களைச் சுற்றி ஏழை மக்கள் ஈ, எறும்புகளாக மொய்த்துக் கிடந்தார்கள். இச்சமூகப் பிரச்சனையை மையமாக வைத்து 'பஞ்சும் பசியும்' என்னும் நாவலை எழுதினார் ரகுநாதன்.

தமிழகத்தில் பரவலாக விவாதிக்கப்பட்டது 'பஞ்சும் பசியும்' நாவல். இந்நாவலால் பெரிதும் ஈர்க்கப்பட்ட செக் நாட்டுத் தமிழ்ப் பேரறிஞர் கமில் சுவலபில், அந்நாவலை செக் மொழியில் மொழிபெயர்த்து வெளி யிட்டார். தமிழ் மொழியிலிருந்து ஒரு அய்ரோப்பிய மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட முதல் நாவல் என்னும் பெருமையை 'பஞ்சும் பசியும்' நாவல் பெற்றது. மலையாளம், தெலுங்கு, வங்காளம், இந்தி, ஹங்கேரியன், ஜெர்மன், ரஷ்யன், ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் 'பஞ்சும் பசியும்' நாவல் மொழி பெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் பரவியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த படைப்பாளர் களும், ஆய்வாளர்களும், கோவையில் கூடி *1961* ஆம் ஆண்டு மே மாதம் 'தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்றம்' என்னும் பேரமைப்பை எற்படுத்தினார்கள். இதில் இலக்கியப் பேராசான் ஜீவாவுடன் இணைந்து முக்கியப் பங்காற்றினார் ரகுநாதன்.

தமிழகத்தில் மக்கள் இலக்கிய வளர்ச்சி, நாட்டுப்புற இலக்கிய ஆய்வு, நாட்டுப்புறக் கலை வளர்ச்சி, மக்கள் நிலையிலிருந்து வரலாற்றுப் பார்வை, சமூக அடித் தளத்தின் மீது நின்று இலக்கியத்தைப் பார்க்கும் ஆய்வு முறை, அடித்தள மக்கள் ஆய்வுகள் முதலியவற்றுக் கெல்லாம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமே அடித்தளம் இட்டது.

மதுரையில் *1963* ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநாட்டில் ரகுநாதன் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ரகுநாதனின் பெரும்பான்மையான மொழி பெயர்ப்புகள் சமூக வாழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட ரஷ்யப் பேரிலக்கியங்களாகும்.

டால்ஸ்டாயின் 'அக்கினிப் பரிட்சை', இலியா இஷேன்பர்க்கின் 'வசந்தமே வருக', மாக்சிம் கார்க்கியின் 'தாய்' , 'தந்தையின் காதலி', 'பிரமச்சாரியின் டைரி' 'மூன்று தலைமுறைகள்' முதலிய நாவல்கள், 'சந்திப்பு' என்னும் சிறுகதைத் தொகுப்பு, மைக்கல் ஷோலாகோவின் 'இதயத்தின் கட்டளை', ஆர். எல். ஸ்டிவன்சனின் ' நான் இருவர்', மாயக்கோவ்ஸ்கியின் 'லெனின் கவிதாஞ்சலி' மார்க்ஸ் - ஏங்கல்ஸ் மதத்தைப் பற்றி எழுதிய கட்டுரைகள், 'நவசீனக் கதைகள்' சோவியத் நாட்டுக் கவிதைகள் என முக்கியமான உலகப் படைப்புகள் பலவற்றை தமிழில் மொழி பெயர்த்து அளித்துள்ளார்.

"ஒரு மொழியிலுள்ள கலாசிருஷ்டியை இன்னொரு மொழியில் மீண்டும் சிருஷ்டிப்பதே அவனது (மொழி பெயர்ப்பாளரின்) கடமை. அவ்வாறு சிருஷ்டிக்கும் போது, மூல நூலில் உள்ள விசயங்களுக்கு மாறுபடாமல், திரிபுகள் ஏற்படாமல், அவற்றிலுள்ள பாத்திரங்கள், உணர்ச்சிகள், கருத்துகள் முதலியவற்றைச் சிறிதும் சிதைவுறாதபடி திரும்பவும் சிருஷ்டிக்கவே அவன் முயல வேண்டும். அதாவது ஒரு இலக்கிய கலாசிருஷ்டியின் மொழி பெயர்ப்பும், ஒரு கலாசிருஷ்டியாகத்தான் இருக்க வேண்டும். ஒரு நூலை மொழிபெயர்க்கும் போது, முதலில் அதனை உயிருள்ள மொழியில், மொழிபெயர்க்கப்படும் மொழிக்கு முரணாகாத முறையில் மொழிபெயர்க்க முயல வேண்டும். அவனது வார்த்தைப் பிரயோகங்களும் நடை அமைதியும் மூல நூலில் உள்ள பொருளை நேர்மையுணர்ச்சியுடன் உணர்த்துவதாக இருக்க வேண்டும்" என ரகுநாதன் மொழிபெயர்ப்புக்கான இலக்கணத்தை வரையறுத் துள்ளார்.

மேலும், "மொழிபெயர்ப்புகளால் மொழி வளமும், இலக்கிய வளமும் மேம்படுகின்றன. தேவையை முன்னிட்டுப் புதிய சொல்லாட்சியும், சொற் சேர்க்கை களும் பிறக்கின்றன. பிற மொழியின் துணை கொண்டு புரிந்து வந்த ஒரு விசயத்தைத் தன் மொழியில் கொண்டு வரும் முயற்சியால், மொழி வளர்ச்சியில் புதிய பாதைகள் திறக்கின்றன. தனது மொழியின் கூடியபட்ச வலுவைப் புலப்படுத்தும் சோதனைகள் தோன்றுகின்றன. பிற மொழி இலக்கியங்களின் உருவம், உள்ளடக்கம், கருத்துச் செறிவு, தத்துவ விசாரம் முதலியன புதியதொரு

மொழியில் இறக்குமதி செய்யப்படுவதால், புதிய இலக்கியப் பரம்பரை மட்டுமல்லாமல், மக்களிடையே புதிய எண்ணங்கள் தோன்றவும் வழி ஏற்படுகிறது. இதன் மூலம் பிறநாடுகளுக்கு நமக்கும் இதயப் பரிவர்த்தனை எற்படுவதுடன், ஒரு நாட்டினரை இன்னோரு நாட்டினர் புரிந்து கொள்ளவும் முடிகிறது." என மொழிபெயர்ப்பினால் ஏற்படும் நன்மைகளை எடுத்தியம்புகிறார் ரகுநாதன்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவர், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர், அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர், அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினர், சாகித்திய அக்காதெமி ஆலோசனைக் குழு உறுப்பினர் மற்றும் நடுவர் குழு உறுப்பினர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக செனட் உறுப்பினர், பாரதி அறக்கட்டளை உறுப்பினர் முதலிய பதவிகளை வகித்தார்.

பாரதி விழா நிகழ்ச்சிகளிலும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதற்காக 1956 ஆம் ஆண்டு ரகுநாதன் இலங்கைக்குச் சென்று வந்தார். மீண்டும் 1983 ஆம் ஆண்டு, டாக்டர்.எஸ்.ராமகிருஷ்ணன், எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணன் ஆகியோருடன் இலங்கைக்குச் சென்று பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

தொ.மு.சி.ரகுநாதன் தமது இல்லத்தில் மிகப் பெரும் நூலகத்தை உருவாக்கினார். தமது இறுதிக் காலத்தில், பாரதி மீதுள்ள பற்றால், எட்டையபுரம் பாரதி நூலகத்துக்கு பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல்களை வழங்கினார்.

"எந்த ஒரு எழுத்தாளனுக்கும் ஒரு தத்துவ தரிசனம் இருக்கத்தான் வேண்டும். அதனைத் தேர்ந்து, தெளிந்து உருவாக்கிக் கொள்வது அவனது பொறுப்பு. எந்தவொரு தத்துவமும் ஒரு வழிகாட்டிதான்; விலங்கல்ல. தத்துவத்தின் மீது குருட்டு பக்தி கொண்டு, அதனை விலங்காகத் தரித்துக் கொண்டு, அதற்கு அடிமை யாவதைப் போன்ற கொடுமை வேறு கிடையாது. அவ்வாறு அடிமைப்பட்டுவிட்டால், பிறகு வாய்ப் பாட்டுச் சூத்திரங்களை வைத்துக் கொண்டு, எதையும் அளந்து பார்த்து ஏமாறும் நிலைதான் ஏற்படும். அப்போது அந்தத் தத்துவம் படைப்பாளிக்குத் தேக்க நிலையைத்தான் உண்டாக்கும். மாறாக, அவன் அதைக் காலில் கட்டிய விலங்காக்கிக் கொள்ளாமல், கடலில் மிதக்கும் கட்டுமரமாக மாற்றிக் கொண்டு விட்டால், காற்றின் திசையறிந்து அதைச் செலுத்தவும் கற்றுக் கொண்டு விட்டால், பின்னர், அது அவனுக்குப் பேராக்கத்தை அளிக்கும். எந்தக் கடலிலும் அவனால் முன்னேறிச் செல்ல முடியும்" எனத் தத்துவத்தை அடிப் படையாகக் கொண்டு இலக்கியவாதி எப்படி செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார் ரகுநாதன்.

ரகுநாதன் மொழிபெயர்த்த 'தாய்' நாவலுக்கு 1965 ஆம் ஆண்டு ' சோவியத் நாடு நேரு பரிசு' வழங்கியது.

'பாரதி - காலமும் கருத்தும்' என்னும் ஆய்வு நூலுக்கு 1983 ஆம் ஆண்டு 'இலக்கியச் சிந்தனை பரிசு' வழங்கப்பட்டது, 1984 ஆம் ஆண்டு அதே நூலுக்காக 'சாகித்திய அகாதெமி' விருது அளிக்கப்பட்டது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் படைப் பிலக்கியத்துக்கும் திறனாய்வுக்கும் ரகுநாதன் ஆற்றிய பணிக்காக 'தமிழன்னை விருது' வழங்கிச் சிறப்பித்தது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை ரகுநாதனின் மொழிபெயர்ப்புப் பணியைப் பாராட்டி பாராட்டுப் பத்திரமும், தலைசிறந்த எழுத்தாளருக்கான பாராட்டுக் கேடயமும் வழங்கியது.

தமது வாழ்நாள் முழுவதும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ரகுநாதன் 31-12-2001 அன்று இயற்கை எய்தினார்.

"ரகுநாதனின் படைப்புகளே அவருக்கான சரியான நினைவுச் சின்னங்கள்" என அவரது படைப்புகள் குறித்து புகழ்ந்துரைத்துள்ளார் ஆய்வாளர் பேராசிரியர் தொ.பரமசிவன்.

"லட்சிய தாகமும், வேகமும், அன்பும், அடக்கமும், உலகளாவிய பார்வையும், புரட்சிகர சமுதாய மாற்றங்களில் நாட்டமும், புதிய உலகு, புதிய மனிதன், புதிய கலாச்சாரம் இவற்றைத் தமிழகத்தில் காண வேண்டும் என்னும் ஆர்வமும் நிரம்பியவர் ரகுநாதன்" என இலக்கிய விமர்சகர் தி.க.சி. பதிவு செய்துள்ளார்.

"இலக்கியப் போலிகளையும், சனாதனிகளையும், நசிவிலக்கியங்களையும் ரகுநாதன் சாடும் பொழுது, அவரது இலக்கிய உணர்ச்சியையும், தர்மாவேசத்தையும் தரிசிக்கலாம். அண்மைக்காலங்களில் அத்தகைய எழுத்துக்கள் மிகக்குறைவே. எனினும், சக்தி, சாந்தி, தாமரை முதலிய ஏடுகளில் காலத்துக்குக் காலம் அவர் எழுதியிருக்கும் மதிப்புரைகளையும், விமர்சனங்களையும் படித்தவர்களுக்கு, அவரின் அப்பழுக்கற்ற ஆளுமையும், அபாரமான இலக்கிய ஆற்றலும் நன்கு பரிச்சயமான வையாய் இருக்கும்" என ஈழத்து மார்க்சிய இலக்கியத் திறனாய்வாளர் கலாநிதி. க.கைலாசபதி மதிப்பீடு செய்துள்ளார்.

"பெரும்புவி இதனில் வறுமையும் துயரும்
பிணிகளும் போரும் இருந்திடும் வரையில்
திரும்பவும் திரும்பவும் பிறப்பேன்- இங்கு
தீமைகள் யாவும் வேரற அறுப்பேன்".

என தொ.மு.சி. ரகுநாதன் தமது இலட்சியத் தாகத்தைப் பாடிச் சென்றுள்ளார்.



# மிரட்டும் பாடத் திட்டம்

ச. வின்சென்ட்

**ஆ**சிரியர்களா, மக்களா, மாணவர்களா? இன்றைக்கு (அனைவரும் சொல்வதுபோல) கல்வித்தரம் குறைந் திருப்பதற்கு யார் காரணம்? ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப வரும் கலைத்திட்டம், ஆசிரியரை மையப் படுத்தும் விளக்கவுரை பயிற்றுமுறை, நினைவாற்றலை மட்டுமே சோதிக்கும் தேர்வுகள், பணம் பண்ணும் வழியாக பொறியியல் மருத்துவப் படிப்புகளைக் கருதி தங்கள் குழந்தைகளைப் புதை குழிகளுக்குள் தள்ளும் பெற்றோர்- இவர்கள் மத்தியில் அல்லலுறும் ஆசிரியர்கள்.

பணபலத்தையும், அதிகாரத்தையும், பதவி களையும், திரைப்பட மினுமினுப்புகளையும் ஆராதிக்கும் சமுதாயம்!

இவையனைத்துமே காரணம் என்று பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்ன பயன்? மேல் பூச்சான மாற்றங்களைத்தான் காண்கிறோம். அடக்குமுறைக் கல்வி, நிறுவனமயமாக்கப்பட்ட சமுதாயத்தின் நிறுவன மாக்கப்பட்ட கல்விக் கூடங்கள் எப்போது விடுதலை பெறும்?

இத்தகைய ஆதங்கங்களால் உந்தப்பட்ட கல்வியாளர் பேராசிரியர் மாடசாமி தனது மனக்குமுறல்களை குழந்தைகளின் நூறு மொழிகள் என்ற நூலில் வெளிப்படுத்தியிருக்கிறார். பதினான்கு கட்டுரைகள் கொண்ட இத்தொகுப்பில், ஒரு கட்டுரையைத் தவிர அனைத்தும் வகுப்பறை தொடர்பானவை. 'கொலையும் கொண்டாட்டமும்' கட்டுரை நாட்டுப்புறத் பெண்தெய்வங்களின் ஆய்வில் புதிய செய்திகளைச் சொன்னாலும் அது இத்தொகுப்பில் ஒட்டவில்லை என்று தோன்றுகிறது.

'அதிகாரம்' என்னும் கருத்தியல் குடியேற்ற ஆதிக்க நீக்கம் ஏற்படும்போது அதிகமாகவே உணரப்படுகிறது. சுயமதிப்பின்மையும் அடிமைத்தனமும் தமிழரின் கூட்டு அடிமனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது போலிருக்கிறது. அதுவே அதிகார ஆசையை வளர்க்கிறது. ஆட்சியாளர் முதல் அரசு அலுவலகப் பணியாளர் வரை அதிகாரத்திற்குப் பணிவதும், தமக்குக் கீழுள்ளோர்மேல் அதிகாரம் செலுத்துவதும் நமது வாழ்க்கை முறையாகிவிட்டது. கல்விக்கூடம் இதற்கு விலக்காக இருக்க முடியுமா? முதல்வர்/தலைமை ஆசிரியர் அதிகாரம், துறைத் தலைவர் அதிகாரம், வகுப்பில் ஆசிரியர் அதிகாரம்! ஆனால் விடுதலை பெற்ற வகுப்புதான் பேராசிரியர் மாடசாமியின் கனவு.


ஆசிரியர் அதிகாரம் செலுத்தாத வகுப்பறை எப்படி இருக்கும்?

விடுதலைபெற்ற குழந்தைகள் என்ன செய்வார்கள்? அமெரிக்காவில் ரெக்கியோ எமிலியாவின் கோட்பாட்டைப் பின்பற்றும் ஒரு பள்ளியைப் பற்றி முதல் கட்டுரையில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். (அமெரிக்காவில் எல்லாப் பள்ளிகளும் இப்படி இருப்பதில்லை.) அங்கே விடுதலைச் சூழலில் குழந்தைகளிடம் பொங்கி வழியும் புதியன காணும் ஆர்வத்தையும், படைப்பாற்றலையும் உண்மையான கற்றலின் வெளிப்பாடாகக் காண்கிறார் ஆசிரியர்.

அதிகாரம் பயன்படுத்தப்படாத, விடுதலை பெற்ற வகுப்பறைகளில் குழந்தைகள் உரிமையோடு சுற்றி வருவார்கள். ஆடலும் பாடலும் கற்றலில் இனிமையின் அனுபவங்கள், அந்த வகுப்பறையில் மாணவர்களின் பேச்சொலி, சிரிப்பொலி இருக்கும், கலகலப்பு இருக்கும், கூச்சல் இருக்காது. ஒழுங்கமைவுள்ள குழப்பம் இருக்கும். அச்சம் இருக்காது துணிவு இருக்கும், மறுப்புச் சொல்லும் மனஉறுதியும் இருக்கும், இந்தக் கருத்துக்கள் பல இடங்களில் பேசப்படுகின்றன.

'காந்தியின் வகுப்பறை' என்ற கட்டுரை இரண்டு கருத்துக்களை முன்வைக்கிறது. முதலாவது, "தரம், ஒழுக்கம் என்ற அதிகாரப் பேச்சுக்கு, மாற்றாக 'குழந்தைகளின் சுதந்திரம், "குழந்தைகளின் கற்பனைத் திறன்" என்ற டால்ஸ்டாயின் இசைக்குரல்... இரண்டாவது உடல் உழைப்புடலான கல்வி, முதலாவது உரிமையை முன்னிறுத்துகிறது என்றால் இரண்டாவது சமத்துவத்தைக் கற்பிக்கிறது. உடலுழைப்பின் அருமையினைக் கைத்தொழில் வகுப்புகளில் முன்னரெல்லாம் மாணவர்கள் அனுபவ வாயிலாகக் கற்பார்கள்., அது இப்போது காணாமல் போய்விட்டது என்று அங்கலாய்க்கிறார் ஆசிரியர்.

விடுதலை பெற்ற வகுப்பறையில் உரிமை இருக்கும், அங்கே அச்சுறுத்தலும், அச்சமும் இருக்க முடியாது. அச்சுறுத்தலும், அச்சமும் இருந்தால் சுதந்திரமான பயிற்று முறைகள் பயனற்றுப் போகும். இதை "நாற்றம் அடிக்கும் வகுப்பறை" எடுத்துக்காட்டுகிறது. நல்ல விவாதங்கள் உரிமைச் சூழலில்தான் நடைபெறும் என்பதை ஒரு நிகழ்வினைக் கொண்டு ஆசிரியர் விளக்குகிறார். "பயம் நாற்றத்துக்குக் காரணமாகிறது. எதிராகப் பாயும் விமர்சனங்களைப் பதற்றம் இல்லாமல்




**குழந்தைகளின் நூறு மொழிகள்**
ஆசிரியர் :ச.மாடசாமி
*வெளியீடு: புக்ஸ் ஃபார் சில்ரன்*
*7, இளங்கோ சாலை,*
தேனாம்பேட்டை, சென்னை - *600 018*
*விலை: ₹ 80/-*

சந்திக்கும் பக்குவப்பட்ட ஆசிரியருடைய மணம் வகுப்பறையின் நறுமணத்துக்கு உத்திரவாதம் ஆகிறது.

வகுப்பறையில் மாணவனுக்குரிய இடத்தைத் தரவேண்டும் என்பது ஆசிரியரின் ஆழமான நம்பிக்கை. மாணவனுக்கு உரிமை கிடைக்கும்போது தான் அவனுக்குரிய இடம் கிடைத்ததாக ஆகும், இது கல்வியில் பெருத்த மாற்றம் ஏற்பட்டால்தான் சாத்தியமாகும். அதாவது விடுதலைக்கான, விடுதலை பெற்ற கல்வி வேண்டும்? அது எது?

மாணவன் தானாக, தான் விரும்பியதை, தான் விரும்பியவாறு கற்க வாய்ப்பளிப்பது. ஆசிரியர்களையே சார்ந்து மாணவர் இருக்காத நிலை.

மாடசாமி சொல்கிறார்:

"கல்வி ஆசிரியரிடமிருந்து தொடங்குகிறது, மாணவரிடமிருந்து அல்ல.

மாணவர்களுக்கு கற்பிப்பதைவிட அவர்கள் தம்மைத்தாமே கண்டுபிடித்துக் கொள்ள உதவுவதுதான் ஆசிரியரின் முதன்மையான பணி.--"

"வகுப்பறையில் இடஒதுக்கீடு" என்ற கட்டுரையின் ஒரு பகுதியில் மாணவனுக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமையை இவ்வாறு வலியுறுத்துகிறார்.

அடுத்து, கல்வித் திட்டம், கற்பிக்கும் முறை ஆகியவற்றைப் பற்றிய கட்டுரைகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. ஆத்திசூடியில் வரும் 'இயல்வது கறவேல்' என்றால் என்ன பொருள் என்று தெரியுமா? இந் நூலைப் படித்த பிறகு நானும் இந்தக் கேள்வியை ஆசிரியர் பயிற்சி அரங்குகளில் கேட்டேன். யாருக்கும் தெரிய வில்லை. "அலங்காரத் தமிழ்" என்ற கட்டுரை தமிழ் பாடத்திட்டத்தை மட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எல்லாப் பாடங்களுக்கும் பொருந்தும். ஒரு பாடத்தை, அல்லது ஒரு அலகை எதற்காகப் பாடத்திட்டத்தில், பாட நூலில் வைக் கிறார்கள்? அலங்காரத்திற்காகவா? கடினமான பகுதிகள் இருந்தால்தான் மதிப்பு என்பதற்காகவா? எந்த நோக்கத் திற்காக வைக்கப்பட்டிருக்கிறது? ஆசிரியர் சொல்வது போல 'மிரட்டும் தமிழ்' 'மிரட்டும் பாடத்திட்டம்'!

கற்பிக்கும் முறையில் விவாத முறை ஆசிரியரைக் கவர்ந்திருக்கிறது. பாலோ ஃபிரையரினுடைய பயிற்று முறை வினாவிடை வழியாகக் கற்பித்தல், அது சாக்ரட்டீசின் வழி. அதோடு குழுஆய்வு முறை சேரும் போது வகுப்பறைப் பரிமாற்றம் பயனுள்ளதாக இருக்கும். இப்போது அதிகமாகப் பேசப்படும் கூட்டுறவுக் கற்றல் முறையில் (Co-operative Learning) குழு ஆய்வு ஒரு பகுதியாகவே இருக்கிறது.

"விவாதமும் கற்பனையும்," "வகுப்பறைக்குப் பொருத்தமான பாலோ ஃபிரையர் கல்விமுறை" ஆகிய கட்டுரைகள் இதனை விளக்குகின்றன.

வகுப்பறையில் மாற்றம் வேண்டும், ஆசிரியர்கள் மாறவேண்டும் என்பது தான் பேராசிரியரின் முதன்மையான விவாதப் பொருள். குழந்தைகளை விலங்குகளாக கருதும் மனப் போக்கு மாறவேண்டும்: (கல்வியும் கலாச்சாரமும்); பயமில்லாத பள்ளிக்கூடம் வேண்டும் (இணைக்கவா, விலகவா?).

கல்வித்திட்டத்தில் ஹார்வர்டு கார்டனர் சொல் கின்ற பத்து நுண்திறன்களில் விருப்பமானவற்றை, தனக்கு இயல்பாற்றல் இருக்கின்றவற்றை மாணவர் தேர்ந்து கொள்ளும் உரிமை வேண்டும் (குழந்தைகளின் நூறு மொழிகள்) என்ற ஆழமான, புதுமையான கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றுமே ஒரு நூலாக வளரத்தகுந்தவை.

பேராசிரியருடைய கல்லூரி அனுபவங்களோடு அறிவொளி இயக்கத்தில் ஈடுபட்ட நேரடிக் கள ஆய்வுகளின் விளைவுகளும் சேர்ந்து, கல்வி பற்றிய அவருடைய கருத்துக்களுக்கு உரம் சேர்க்கின்றன. மேலும் ஹார்வர்டு கார்டனர், பியாஜே, பாலோ ஃபிரையர், ஹோல்ட் போன்ற உளவியல் கல்வியாளர் களின் தாக்கம் அவருடைய கருத்துக்களுக்கு வலு வூட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியருக்குக் குழந்தைகள் மீதான கரிசனை, கல்வியின்பாலுள்ள அக்கறை, ஆசிரியருடைய மனிதாபிமானம் ஆகியவை நூலெங்கும் விரவிக் காணப்படுகின்றன. எளிய இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கும் இந்நூலைக் கல்வி யாளர்கள் மட்டுமின்றி அனைவரும் வாசித்துக் பயன்பெறவேண்டும். ●

நூல் மதிப்புரைக்கான கட்டுரைகளை அனுப்புவோர் தவறாமல்
நூலின் இரண்டு பிரதிகளைச் சேர்த்து அனுப்புமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நூல் பிரதிகள் இணைக்கப்படாத கட்டுரைகளைப் பிரசுரிக்க இயலாது.

- பொறுப்பாசிரியர்



# சதிகற்களும் நம்பிக்கைகளும்

முனைவர்
கோ.ஜெயக்குமார்

சதிகல் (இறந்த வீரனின் மனைவி தீப்பாய்ந்து இறந்தால் அந்தப் பெண்ணின் நினைவாக நடப்படும் கல்), கன்னடத்தில் தோள் கொடுத்தல் என்று கூறுகின்றனர். கேரளத்தில் புலைச்சிக் கல் அல்லது படைக் கல் என்றும் கூறப்படுகின்றது. இறந்துபட்ட கணவனோடு தீப்பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட வீரமகளிர்க்கு கற்கள் நடப்படுவது மரபு இதனை மஹாஸதி கல் அல்லது மாஸ்தி கல் என மருவியது என்று கல்வெட்டியல் என்ற நூலில் நாகசாமி கூறியுள்ளார். இவ்வகை கல் நடப்படுவதற்கு அடிப்படை வீரர்களின் மரணம். அவர்களின் நினைவாக நடுகற்கள் நடப் படுகின்றன. நடுகல், வீரகல் (மன்னனுக்காகவும், ஆநிரைகளை பாதுகாக்கவும், ஊரைப் பாதுகாக்கவும் பொருட்டு உயிர்நீத்த வீரனின் நினைவாக நடப்படும் கல்), கடவுளெழுதிய கல் (உருவமெழுதிய கல்), கவலையகல் (உருவமெழுதாத கல்) எனப் பல நிலைகளில் பேசப்படும் வரலாற்று ஆவணங்களின் பின்புலத்தில் சதிகல் பற்றியும் அதன் நம்பிக்கைகளைப் பற்றியும் இக்கட்டுரை விரிவாகப் பேசுகிறது.

சதிகல் பற்றி இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் சான்று பகிர்கின்றன. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, மணிமேகலை உள்ளிட்ட இலக்கண, இலக்கிய, காப்பிய நூல்கள் சான்று பகிர்கின்றன. ஐந்திணையில் பாலை நிலமக்கள் உழவுத்தொழில் செய்ய முடியாத சூழ்நிலையைப் பெற்றவர்களாக இருந்தனர். எனவே முல்லை மற்றும் மருதநில மக்களின் முக்கிய செல்வமாகக் கருதப்பட்ட கால்நடைகளைக் கொண்டு செல்லும் நிரைகவரும் தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். நிரை கவர்தலும், வழிப்பறியும் பாலை நிலமக்களின் தொழிலாக இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

வெட்சிப்போர் புரிந்து நிரைகளைக் கவர்ந்து வந்த பாலை நில வீரர்களுக்கு கல்நட்டு வழிபாடு செய்தனர். இவர்களிடமிருந்து தமது செல்வங்களான நிரைகளை பாதுகாக்க முல்லை மற்றும் மருதநில மக்கள் கரந்தைப் போர் புரிந்தனர். இப்போரில் இறந்தவர்களின் நினைவாகவும் நடுகற்கல் நடப்பட்டன. இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் தோன்றிய பின்னர் கல்லறையில் இறந்த உடலைப் பாதுகாக்கும் வழக்கம் பெரும்பாலும் குறைந்தது. இன்னும் சில சமூகத்தில் இறந்தவர்களை புதைக்கும் வழக்கம் உள்ளதைப் பார்க்க முடிகிறது.

சதிகற்கள் எதற்காக நடப்பட்டன என்ற கேள்வி எழுகிறது. குறிப்பாக சதிகற்கள் போரில் ஈடுபட்டு உயிர்நீத்த வீரனின் மனைவி அவனது இறப்பைத் தாங்க முடியாமல் தீப்பாய்ந்து இறந்து போகும் நிலையில் அவளின் நினைவாக நடப்படும் கல் சதிகல் எனப்படுகிறது. இறந்த வீரனையும் அவனது இறப்பின் துயரத்தால் இறந்த மனைவியையும் வழிபட்டால் அவர்களின் பலம் கிடைப்பதாக நம்பினர். இந்த வழக்கத்தைப் பழங்குடி மக்களிடத்தில் காணமுடிகிறது. இப்படிப்பட்ட வழக்கங்களின் ஊடாக நடுகற்களுக்கும் சதிகற்களுக்கும் உள்ள தொடர்பை நம்மால் அறிய முடிகிறது.

இறந்து போன மூதாதையர்களின் நினைவாகக் கல் நடப்படுவதும் அவற்றை வணங்கிவிட்டுச் சென்றால் செல்லும் காரியம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இவர்களிடம் இருந்தது. முன்னோரின் நினைவாக நடப்படும் கற்களில் ஆவி இருப்பதாக நம்பினர். அதோடு அந்த ஆவிகளுக்கு ஆக்கவும், அழிக்கவும் சக்தி இருப்பதாக நம்பப்பட்டது. இந்த நம்பிக்கையின் வெளிப்பாட்டால் தான் பலிகொடுக்கும் வழக்கம் தோன்றியது. பலிகொடுத்தால் ஆவிகள் மகிழ்ச்சி யடையும், அப்படி மகிழ்வித்தலினால் அவர்களின் பலம் தங்களுக்கு முழுமையாகக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை பழங்குடி மக்களிடம் இன்றும் இருப்பதைக் காணமுடிகிறது.

பொதுவாக சில சதிகற்களில் உருவமும் எழுத்துக் களும் இடம்பெற்றிருக்கும். சில கற்களில் உருவம் மட்டுமே இடம்பெற்றிருக்கும். ஐந்தாம் நூற்றாண்டு, ஆறாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை சதிகற்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் உருவம் பெற்றிருந்த கல்லைப் பற்றி கூறுகிறார். எழுத்து இருந்ததைப் பற்றி குறிப்பிடவில்லை. பிற்கால இலக்கண நூலாசிரியரான புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார் எழுத்துக்கள் உடைய கற்களை கண்டிருக்கக் கூடும். இருப்பினும் தொல்காப்பியரைப் பின்பற்றி சடங்குகளைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார்.

சதிகற்கல் எப்படிப்பட்ட இடங்களில் நடப் பட்டன என்று பார்க்கும் போது சதிகற்களில் இறந்தவர்களின் கல்லறை மட்டுமல்லாது இறந்து விழுந்த இடம், இறந்தவர்களின் ஊர்களிலும் இறந்தவர் களின் மரபினர் வாழ்ந்த பகுதிகளிலும் காணமுடிகிறது. சதிகல்லை யார் நட்டது என்று பார்க்கும் போது போரில் இறந்து போன வீரனின் மனைவி அவனது இறப்பைத் தாங்கமுடியாமல் தீப்பாய்ந்து இறக்கும் போது குறிப்பிட்ட இனக்குழு மக்களோ, ஊர் மக்களோ அல்லது அவர்களின் உறவினரோ தீப்பாய்ந்து இறந்த பெண்ணின் நினைவாக நடப்படும் கல் சதிகல் எனப்பட்டது.

சதிகற்களின் அமைப்பு பார்க்கும் போது ஒரு கருங்கல்லில் வீரனின் உருவம் இருக்கும். தீப்பாய்ந்து இறந்த வீரனின் மனைவி உருவம் இருக்கும். அதே போன்று மூன்று பெண் உருவங்கள் ஒரு கல்லில் இடம்பெற்றிருக்கும். இரண்டு பெண்களின் உருவத்திற்கு நடுவில் இறந்த வீரனின் உருவம் சில கற்களில் இடம் பெற்றிருக்கும். சில கற்களின் பின்புறம் வீரனின் சிலையும் இருக்கும். இது போன்ற கற்களின் அருகே மூன்று பெண்கள் கைக்கூப்பி இருப்பது போன்று கல்லில் செதுக்கப்பட்டு இருக்கும். இதனை அப்சரப் பெண்கள் (வான் உலக மங்கையர்) என்றும் கூறுகின்றனர். இறந்தவர்களை வான மங்கையர் கைகூப்பி வீரர் உலகிற்கு அழைத்துச் செல்வர் என்ற நம்பிக்கையில் இவ்வகைக் கற்கள் நடப்பட்டுள்ளன.

தீப்பாய்ந்து இறப்பவர்களுக்கு சில விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. தீப்பாயக்கூடிய பெண் அவளாக விருப்பப்பட்டு தீப்பாய வேண்டும். வீரன் இறந்து போனவுடன் அவனது மனைவி தீப்பாய்ந்தால் அவர்களது இருவரது உருவமும் கல்லில் பொறிக்கப் பட்டு இருக்கும். இறந்துபட்டவன் வணங்கும் தெய்வத்தின் உருவம், எதற்காக இறந்து பட்டான் என்ற விவரம் கல்லில் செதுக்கப்பட்டிருப்பதையும் பார்க்க முடியும். தீப்பாயும் பெண் எப்படி இருக்க வேண்டும் என்று சில மரபுகளைப் பின்பற்றியுள்ளனர். சதிபுரியும் பெண் நோய்வாய்ப்பட்டவளாக இருக்கக் கூடாது. கணவன் இறந்தபிறகு இப்படி இறந்து விட்டானே என்ற வருத்தம் தீப்பாயும் பெண்ணிற்கு இருக்கக் கூடாது. அனைத்து சமூகத்திலும் தீப்பாயும் வழக்கம் இருந்துள்ளது.

அதே போன்று மற்றவர்கள் யாரும் கட்டாயப் படுத்தி துன்புறுத்தி தீப்பாய்ந்து இறக்க வலியுறுத்தக் கூடாது. பதினாறு வயதிற்கு உட்பட்டவளாக சிறு பெண்ணாக தீப்பாயும் பெண் இருக்கக் கூடாது. அவளாக விரும்பித் தீப்பாய வேண்டும். கட்டாயப்படுத்தி துன்புறுத்தினால் அது கொலைக்கு சமமாகவும் அது அதர்மமாகவும் கருதப்பட்டது.

கணவன் (வீரன்) இறந்து பத்து நாட்கள் முதல் பதிமூன்று நாட்கள் வரை தீப்பாயலாம். இவர்களை மங்கலப்பெண்களாகவே கருதுவர். வைசியப்பெண்கள் என்றால் பதினாறு நாட்கள். மற்றவர்களுக்கு இருபது நாட்கள். கணவன் இறந்து பத்து முதல் இருபது நாட்களுக்குள் இறக்கும் பெண்களை மங்கலப்பெண் என்றும் அதன் பின்னும் வாழக்கூடிய பெண்களை அமங்கலப்பெண் (விதவை) என்றும் அழைத்தனர்.

சதிகல் என்பதற்கு என்ன பொருள் வழங்கப் படுகிறது என்று பார்த்தால் கலைக்களஞ்சியம், அபிதான சிந்தாமணி, கிரியாவின் தற்கால தமிழ் அகராதி போன்றவற்றில் அதற்கான பொருள்களைப் பார்க்க முடிகிறது.

> 'சதி என்பது கணவன் இறந்தால் மனைவியும் உடன் கட்டையேறுதல் என்ற பழக்கமாகும். சதி என்னும் சொல் கற்புடைய மனைவி என்றும் பொருள்படும். பண்டைக்காலத்தில் பெரும் பாலோர் உடன் கட்டையேறுதலை ஒரு சீரிய பழக்கமாகவும், சிலர் தற்கொலைக்குச் சமமாகவும் கருதிவந்துள்ளனர். (கலைக்களஞ்சியம், தொகுதி - 4)

> 'சதிகல் - (மாஸ்தி கல்) கணவருடனிறந்த வீரபத்தினிகளுக்கு நடுகல். இது மஹாஸதி கல் என்பது மாஸ்தி கல் என மருவியது.' (அபிதான சிந்தாமணி -பக்.560)

> 'சதி : கணவனின் சிதையிலேயே மனைவியும் தன் உயிரைப்போக்கிக் கொள்ளும் பழங்கால வழக்கம். ' (கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி - பக்.532) என்று பொருள் தருகின்றது.

இனக்குழுச் சமூகத்தில் இருந்து காலம் காலமாக சதிகல் வழிபாடு தமிழகத்தில் இருந்து வருகிறது என்பதற்கு இதுபோன்றவை நமக்குப் பல தகவல்களை தருவதைக் காணமுடிகிறது. தாய்த் தெய்வ வழிபாடு முதன்மை பெற்று விளங்குவதையும் இவைகளின் மூலமாக அறிய முடிகிறது. கணவன் இறந்தவுடன் மனைவி தீப்பாய்ந்து இறத்தலைப் பற்றி இலக்கண நூலான தொல்காப்பியம் கூறுகின்றது.

> 'நல்லோள் கணவனொடு நளியழல் புகீஇச்
> சொல்லிடை யிட்ட மாலைநிலை.'
> (தொல்.புறத்திணை.சூ -24)

என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியமான புறநானூறில் தீப்பாய்ந்து இறந்ததற்கு சான்று உள்ளது. பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப்பெண்டு தனது கணவன் இறந்த செய்தி அறிந்து தானும் தீப்பாய்ந்து இறந்ததைக் குறிப்பிடுகிறது.

> 'உயவற் பெண்டிரே மல்லே மாதோ
> பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
> நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
> பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
> வள்ளித ழவிழ்ந்த தாமரை
> நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.' (புறம் -246)

என கைம்மை நோன்பு இருக்கும் பெண்களைப் போன்றவள் அல்ல நான் ஈமப்படுக்கை உங்களுக்கு அரிதாகத் தோன்றலாம்; எனது கணவன் இறந்து விட்டான் எனவே எனக்கு தீயானது தாமரைக்குளத்து நீர்போல இன்பம் தருவதாகும் எனக்கூறியவள் விரும்பி தீப்பாய்ந்ததை இவ்வரிகள் கூறுகின்றன.

இலக்கண நூலான புறப்பொருள் வெண்பா மாலையும் கணவன் இறந்தவுடன் மனைவியும் நெருப்பில் தீப்பாய்ந்து இறப்பதைப்பற்றி கூறுகிறது.

> 'சோலை மயிலன்னாள் தன்கணவன் சொல்லியசொல்
> மாலை நினையா மனங்கடைஇக் - காலைப்
> புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்
> அகையழல் ஈமத் தகத்து.' (பு.வெ - 266)

கணவன் கூறியதை நினைத்துக்கொண்டு கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பில் குதித்து, தன் உயிரை மாய்த்துக்கொள்வதைப் பற்றி சான்று உள்ளது.

காப்பிய நூலான மணிமேகலையும் தீப்பாய்தல் குறித்து சான்று பகர்கிறது. மணிமேகலையில் பத்தினிப் பெண்டிரை மூன்றுவகையாக பிரித்துப் பார்ப்பதை நினைவு கூறுவது பொருத்தமாக அமையும் என நினைக்கிறேன். கணவனுடன் தீயில் மூழ்கி இறப்பவர் ஒருவகை, தனியாக தீ மூட்டி அதில் பாய்ந்து இறப்பவர் இரண்டாம் வகை, கணவனை நினைத்து அடுத்த பிறவியில் அவனுடன் வாழ கைம்மை நோன்பு இருக்கும் பெண்கள் என மூவகை நிலைகளைக் காணமுடிகிறது.

> 'காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
> ஊதுலைக்குருகி னுயிர்த்தகத் தடங்கா
> தின்னுயி ரீவ ரீயா ராயின்
> நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
> நளியெரி புகாஅ ராயி னன்ப்ரோ
> டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்.'
> (மணி. 2: 41-46)

மேலும்,

> 'காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்
> போதல் செய்யா வுயிரோடு புலந்து
> நளியிரும் பொய்கை யாடுநர் போல
> முளியெரிப் புகூஉ முதுகுடிப் பிறந்த
> பத்தினிப் பெண்டி ரல்லேம்.' (மணிமேகலை - 18:11-15)

தீப்பாய்ந்து இறத்தலைப் பற்றிய குறிப்புக்களை மணிமேகலையில் காணமுடிகிறது.

மூவேந்தர்கள், பல்லவர், விஜயநகரப் பேரரசு, நுலம்பர், கங்கர், போசலர்கள் என பல்வேறு கால

கட்டத்தில் சதிகற்கள் கிடைக்கப்பெற்றாலும் எழுத்துக்கள் உள்ள கற்கள் பெருமளவில் இல்லை அப்படியே கிடைக்கப்பெறும் கற்களிலும் மிகச்சுருக்கமாகவே எழுத்துக்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் போல அமைந்திருக்கின்றன. எழுத்துக்கள் இடப்பெறாத சதிகற்கள் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு,கேரளா என பல்வேறு இடங்களில் காண முடிகிறது. குறிப்பாக தமிழகத்தில் திருவண்ணாமலை, தருமபுரி போன்ற மலையை ஒட்டியுள்ள இடங்களில் சதிகற்களைக் காணமுடிகிறது.

சோழர் காலத்தில் சதிகல் வழக்கம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக முதலாம் ராஜேந்திர சோழன் செய்யாறு வட்டத்தில் பிரம்ம தேசத்தில் இறந்தபோது அவனது மனைவியருள் ஒருவரான வீரமாதேவி தீப்பாய்ந்து இறந்துள்ளார். அதேபோன்று இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழன் இறந்துவிட்ட பின் அவனது மனைவி வானவன்மாதேவி உயிர்விட்டுள்ளார். இதனை திருக்கோயிலூர் கல்வெட்டும் ஆண்டிமலை சாசனமும் குறிப்பிடுகிறது. இறந்த இவர்கள் இருவருக்கும் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெரிய கோயிலில் ஐம்பொன் சிலை நிறுவியுள்ளான்.

செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜா கி.பி.18 ஆம் நூற்றாண்டில் ஆண்டு வந்தான். ஆற்காடு நவாப்புடன் நிகழ்ந்த போரில் கி.பி.1713 கடலி என்ற இடத்தில் இறந்துவிட்டான். இதனை அறிந்த அவனது மனைவி தீப்பாய்ந்து இறந்துவிட்டாள். இதனை கதைப்பாடல் ஒன்று சான்று பகர்கின்றது.

**'அக்கினி குழியைச் சுற்றிவந்தாள் ராணியம்மாளும்**
**கண்கள் குளிர ராஜாவைப் பார்த்தாள்**
**ராணியம்மாளும்**
**ராஜாவுடனே தீயில் குளித்தாள்**
**ராணியம்மாளும்.' (தே.க.பாடல்)**

வீரனின் மனைவி வளையல்கள் அணிந்த கைகளோடும் தலையில் உள்ள முடிகளை இடது புறத்தில் கொண்டைபோல போட்டுள்ளதையும் அதே போல கைகளில் இரு பெண்கள் வில் போன்ற ஆயுதம் தாங்கி நிற்பதையும் ஆண் இரு கைகளையும் கூப்பி நிற்பது போலவும் பெண் உருவம் வலதுகையைத் தூக்கிக் காட்டுவது போலவும் கற்சிற்பத்தில் காணமுடிகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வந்தவாசியில் இருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் அமைந்துள்ளது நெடுங்குணம் ஊராட்சி. இந்த ஊருக்கு முன்பாகவே சதிகற்கள் வலது புறத்தில் உள்ளது. இறந்தவர்களை சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லும் போது அரிச்சந்திரன் என்ற ஒரு இடம் வரும். அந்த இடத்தில் இறந்த உடலை வைத்து சில சடங்குகளைச் செய்வர். சில இடங்களில் அரிச்சந்திரன் சிலையாக தடிவைத்து காவல் காப்பது போலவும் சில இடங்களில் வெறும் கற்களால் மட்டுமே வைத்து சில சடங்குகள் செய்யும் வழக்கத்தையும் காணமுடிகிறது.



நெடுங்குணத்தில் இருந்து சுமார் முன்னூறு மீட்டர் இடைவெளியில் சதிகல் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. அங்கு செல்வதற்காக வந்தவாசியில் உள்ள ஊடக நண்பர் வாசனோடு இருசக்கர வாகனத்தில் சென்றோம். மழையூரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றி வரும் நண்பர் செல்வராஜிடம் கற்கள் இருக்கும் இடத்தைக் கேட்டுக்கொண்டு நேரில் சென்று பார்த்தோம். சதிகற்களை காணமுடிந்தது. சில மாதங்களுக்கு முன்பு அந்த கற்களில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டதற்கான அறிகுறிகளைக் காணமுடிந்தது. குறிப்பாக கற்களில் மஞ்சள் பூசப்பட்டு குங்குமம் வைக்கப்பட்டுள்ளது. அதனைப்பற்றிக் கேட்டால் யாருக்கும் சரியாகத் தெரியவில்லை. ஆனால் வழிபாடு செய்வதை அரிய முடிந்தது.

நெடுங்குணத்தில் நான்கு சதிகற்கள் உள்ளன. ஒரே கல்லில் மூன்று பெண்கள் கைகூப்பி வணக்கம் செலுத்துவது போன்றும் இடதுபுறக் கொண்டையுடன் உள்ளன. இதனை இறந்துபட்ட வீரனையும் உடன் தீப்பாய்ந்த அவனது மனைவியையும் வான்வுலகம் அழைத்துச் செல்லும் அப்சரப் பெண்கள் என தொல்லியல் துறையினர் கூறுகின்றனர். இந்தக் கல் முட்புதருக்கு அருகே உள்ளது.

மற்றொரு கல்லில் இரண்டு பெண்கள் உள்ளனர். இவர்களுக்கும் இடதுபுற கொண்டை உள்ளது. இடது கைகளில் ஆயுதம் தாங்கி நிற்கின்றனர். வலது கரங்களை உயர்த்தி நிற்கிறார்கள். இது தீப்பாய்ந்து இறந்த இரண்டு பெண்களுக்காக எடுக்கப்பட்டிருக்கலாம். அதன் அருகே இரண்டு உருவங்கள் கொண்ட கல் பாதியாக சிதைந்து




காணப்படுவதால் அதனை முழுமையாகப் பார்க்க முடியவில்லை.

இந்த கற்களுக்கு அருகே ஒரே கல்லில் ஆண் மற்றும் பெண் உருவம் கொண்ட கல்லைக் காண முடிகிறது, இரு உருவமும் இருவேறு நிலையில் உள்ளது. ஆண் உருவம் இரண்டு கைகளையும் வணங்கி நிற்பது போலவும் பெண் உருவம் இடது கையைக் கீழே தொங்கவிட்ட நிலையிலும் வலது கையை உயர்த்திப் பிடிப்பது போலவும் உள்ளன. ஆண் உருவத்திற்கு அருகே வரிசையாக துளைகள் உள்ளன. இந்தக் கல்லில் மஞ்சள் குங்குமம் வைத்து ஊர் மக்கள் செய்யும் சடங்குகளையும் தற்போது பார்க்க முடிந்தது.

இந்த சதிகற்களில் பெண்கள் கொண்டை வலது பக்கம் போட்டு இருப்பதால் நாயக்கர் காலத்தவையாக இருக்கும் என்று அறிய முடிகிறது. இறந்தவர்களை வழிபடும் வழக்கம் இன்றைக்கும் காணமுடிகிறது. இதனை மூத்தோர் வழிபாடு, தென்புலத்தார் வழிபாடு, குல தெய்வ வழிபாடு என்ற நிலைகளில் அதன் தொடர்ச்சியை காணமுடிகிறது. இது போன்று நமக்கும் கிடைக்கும் வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தொல்லியல் துறையினர் இது போன்ற கற்களையும் பாதுகாக்க வேண்டும். நான் பார்த்த சதிகற்களில் ஒன்று சிதைந்து போய்விட்டது. எனவே மீதம் இருக்கும் கற்களாவது பாதுகாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இக்கட்டுரை வாயிலாக முன்வைக்கிறேன்.

சதிகல் பற்றிய முழுமையான பல்வேறு தகவல்களை எந்த நேரத்தில் கேட்டாலும் இன்முகத்தோடு எனக்கு எடுத்துரைத்த தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர் களான முனைவர் இரா.நாகசாமி மற்றும் முனைவர் பத்மாவதி ஆகியோருக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளேன்.

# நூல் அறிமுகம்




வணிக வரலாறு, வணிகவியலின் பேசுபொருள், வணிகச் சட்டங்கள் என வணிகவியலோடு சம்பந்தப்பட்ட அனைத்து விசயங்கள் பற்றியும் மிக பிரமாண்ட அளவில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் ஒரு பாடப்புத்தகமாகவும் அல்லாமல், ஒரு ஆய்வுநூல் போலும் அல்லாமல், “பொதுவாசகர்”களை நோக்கி எழுதப்பட்டுள்ளது என நூலில் கூறப்பட்டுள்ளது.

**இந்திய வணிகவியல் வரலாறு**

ஆசிரியர் : சி.லோகநாதன்

*வெளியீடு: கோல்டன் கிங்*

*2/11, முல்லைத் தெரு, வானூர்,*

*விழுப்புரம் மாவட்டம் - 605 111*

*விலை: ₹ 1480/-*